BOI
SRI LANKA

வருடாந்த அறிக்கை

2023

இலங்கை முதலீட்டுச் சபை

உள்ளடக்கம்

தலைவரின் செய்தி 2

பணிப்பாளர் நாயகத்தின் செய்தி 3

பணிப்பாளர் சபை 4

இமுச இன் கண்ணோட்டம் 6

நோக்கு, பணி, முக்கிய விழுமியங்கள் 7

மைல்கற்கள் 8

ஒரே பார்வையில் இமுச இன் பொருளாதாரத்திற்கான பங்களிப்பு 9

2023 இல் இமுச இன் செயலாற்றுகை 12

உலக முதலீடுகளின் போக்கு 2023 - 2024 19

இலங்கையை வெநேமு க்கு ஒரு கவர்ச்சியான இடமாக மேம்படுத்தல் 21

- மேம்படுத்தல் அலுவல்கள் 22
- சர்வதேச மன்றங்களில் பங்குபற்றல் 25
- சர்வதேச ஒப்பந்த பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றல் 26
- சர்வதேச பங்குதாரர்களுடன் பணியாற்றல் 27
- எங்களுடைய முதலீட்டாளர்களிடமிருந்து கேட்பதற்கு 28
- எங்களுடைய முதலீட்டாளர்களின் சாதனைகள் 31
- ஆண்டுக்கான குறிப்பிடப்பட்ட சிறப்பம்சங்கள் 33

மனித மூலதனம் 36

சமூக தாக்கம் 38

பிரிவு கடமைகளும், செயற்பாடுகளும் 39

நிதிசார் மீளாய்வு - 2023 46

நிறுவன ஆளுகை அறிக்கை 48

நிதிசார் கூற்றுக்கள் - 2023 53

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2023 95

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான இமுச இன் பதில் - 2023 107

கணக்காய்வுக் குழுவின் அறிக்கை 114

இமுச இன் முக்கிய தொடர்புகள் 115

தலைவரின் செய்தி

2022 இன் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கானதோர் பாதையை அமைப்பதற்கு இலங்கை அரசாங்கத்தின் முயற்சிகளை இலங்கை முதலீட்டுச் சபை எடுத்துரைத்த ஆண்டு 2023 ஆகும். மேம்பட்ட வசதியளித்தல், உள்ளக செம்மைப்படுத்தல்கள் மற்றும் துரிதப்படுத்தப்பட்ட அனுமதிகள் போன்றவற்றிற்கு அந்த கடந்த ஆண்டில் இமுச இல் முன்னுரிமை வழங்கப்பட்டது. ஏனெனில் பல உலகளாவிய பொருளாதாரங்களுக்கு மத்தியில் பொருளாதார மற்றும் புவி-அரசியல் கொந்தளிப்பின் பின்னணியில் போராடி, இலங்கை விரிதிறனுக்கு எடுத்துக்காட்டாக முன்னேறியதனாலாகும்.

100 புதிய ததொ கம்பனிகளைக் கவரும் நோக்குடன் மேம்படுத்தல் நிகழ்ச்சி மற்றும் 50 வெற்றிகரமான இமுச தொழில்முயற்சிகளில் கவனம் செலுத்தி, ஒரு மீள்முதலீட்டு இயக்கி போன்ற பல்வேறு புதிய கருத்திட்டங்களை இமுச ஆரம்பித்தது. முக்கிய தனியார் மற்றும் அரச துறை பங்குதாரர்களின் பங்குபற்றுதலுடன் இனங்காணப்பட்ட முன்னுரிமை துறைகளுக்கு கைத்தொழில் ஆலோசனை சபைகள் நிறுவப்பட்டன. விளம்பரப் பொருட்களை செம்மைப்படுத்தும் அதேவேளை, முக்கிய முதலீட்டு சேவைகள் செயற்பாடுகளை எண்மின்மயமாக்கல் மற்றும் ஏற்கெனவே உள்ள வலயங்களை சர்வதேச பசுமைத் தரத்திற்கு ஏற்ப நவீனமயப்படுத்தல் என்பனவே உள்ளக செயல்முறை மற்றும் உற்பத்தி செம்மைப்படுத்தலில் முன்னணியில் இருந்தன.

இவை தவிர, சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகள் முகவர் (யூஎஸ்எயிட் - USAID), ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சி (யூஎன்டீபீ - UNDP), ஆசியா மற்றும் பசுபிக்கிற்கான ஐக்கிய நாடுகள் பொருளாதார மற்றும் சமூக ஆணையம் (யூனெஸ்கப் - UNESCAP) போன்ற சர்வதேச முகவர்களுடனான பயனுள்ள ஒத்துழைப்பு. நாட்டுக்குள் முதலீட்டு காலநிலையை செம்மைப்படுத்தும் நோக்கில் பல முன்முயற்சிகளை ஏற்படுத்தின.

இலங்கையை முதலீட்டுக்கு ஒரு முக்கிய கேந்திரமாக நிலைநிறுத்துவது மற்றும் நிலையான அபிவிருத்திக்கு சுறுசுறுப்புடன் பங்களிக்கும் கைத்தொழில்களை வளர்ப்பது என்பவற்றில் எங்களுடைய அர்ப்பணிப்பு ஆண்டு முழுவதும் உறுதியாக இருந்தது. அத்துடன் பொருளாதார வளர்ச்சியை உந்துதல், புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவித்தல் மற்றும் வியாபார-நட்பு சூழலை உருவாக்குதல், இலங்கையில் வெளிநாட்டு நேரடி முதலீட்டைக் கட்டியெழுப்பி, பலப்படுத்துதல் என்பவற்றில் எங்களுடைய ஆணையில் உறுதியாக இருந்தோம்.

இமுச வை எதிர்காலத்திற்குத் தயாரான ஒரு நிறுவனமாக மாற்றுவது என்ற தொலைநோக்குடன் எதிர்காலத்தைப் பார்க்கும்போது இலங்கையின் மூலோபாய அமைவிடத்தை அந்நியப்படுத்தி, நாங்கள் எங்களுடைய மதிப்பு முன்மொழிவை பலப்படுத்தி, நாடு ஒரு சிறந்த இலக்கை அடைவதற்கான ஒரு அபிப்பிராயத்தை ஏற்படுத்தி. புதிய முதலீட்டு உற்பத்திகளையும், மேடையையும் அறிமுகம் செய்வோம்.

முன்மொழியப்பட்ட "இலங்கையில் முதலீடு செய்யுங்கள்" என்ற முயற்சி முதலீட்டாளர்களுக்கான வணிக சூழலை எளிதாக்குவதன் மூலம் நாட்டின் முதலீட்டு காலநிலையை மாற்றியமைக்கும். பல்வேறு மாகாணங்களிலும், துறைகளிலும் முதலீட்டாளர்களுக்கு அவர்களின் வணிக வாழ்க்கைச் சக்கரத்தில் முதலீட்டுக்கு முன்னரிலிருந்து, கவனிப்பிற்குப் பின்னர் வரை கைகோர்த்து நிற்பதற்கு நிபுணத்துவ சிறப்புடையவர்கள் எங்களுக்கு இருப்பார்கள்.

இறுதியாக, இமுச ஆனது 2023 ஆம் ஆண்டில் இலங்கைக்கான பொருளாதார மாற்ற முகவராக அதன் ஆணையை முற்றிலும் உள்ளடக்கியதாக புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவித்தல், தொழில்களை உருவாக்குதல் மற்றும் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சி என்பவற்றை நோக்கி அமைந்த மூலோபாய ஒத்துழைப்புகள், வசதியளிக்கப்பட்ட முதலீடுகள் மற்றும் கொள்கைகளை அமுல்படுத்தல் என்பவற்றிற்கு நெம்புகோலாகியது.

தினேஷ் வீரக்கொடி

பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

இமுச இன் அர்ப்பணிப்பையும், கடந்த 2023 ஆம் ஆண்டின் சவால்களின் ஊடாகச் சென்ற, அதன் மீள்தன்மையையும் அவதானிக்கும்போது உண்மையிலேயே அது பாராட்டத்தக்கது. எங்களுடைய மனித மூலதன பலம், குழுவாகப் பணி, அர்ப்பணித்த உத்தியோகத்தர்களின் அயராத முயற்சி என்பனவே எல்லைகளுக்கு அப்பால் சேவைகளை வழங்குவதற்கான முக்கிய இயக்கியாகும் என்பதைத் தெரிவிப்பதில் நான் பெருமைப்படுகிறேன். மனித மூலதன அபிவிருத்தி மற்றும் குழுவாகப் பணிக்கு எங்களுடைய தொடர்ச்சியான அர்ப்பணிப்பே சிரமங்களைத் தாண்டி. வெற்றியடைவதற்கான மூலக்கல்லாக இருந்துள்ளது.

தொடர்ச்சியாக முதலீட்டாளர் வசதியளிக்கும் மையமும் (முவமை - IFC), 2022 இல் உலக வர்த்தக மையத்தில் முன்னோடியாக இருந்த முதலீட்டாளர் வசதியளிக்கும் ஒருங்கிணைப்பு குழுவும் (IFCC) முதலீட்டாளர்களுக்கு துரித சேவைகளை வழங்கியதுடன், முதலீட்டு ஒப்புதல் நடவடிக்கைக்கு வசதியளித்து, எங்களுடைய அர்ப்பணிப்புக்கு செயல் விளக்கம் அளித்தன. இந்த அணுகுமுறையானது செயற்பாடுகளை நெறிப்படுத்தியது மாத்திரமல்ல, மேலும் மேம்படுத்தப்பட்ட முகவர்களுக்கிடையேயான ஒருங்கிணைப்பும், முதலீட்டாளர்களுக்கு சாதகமான சூழலுக்குப் பங்களித்தன. பசுமைப் பாதை வசதியை வழங்கியதன் மூலம் 35 சிறந்த தொழில்முயற்சிகளுக்கான இனங்காணலும் இமுச தொழில்முயற்சிகளின் செயல்திறனையும், இணக்கத்தையும் அங்கீகரித்து வெகுமதி அளிப்பதில் இமுச இன் அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகிறது. இமுச இல் எங்களுடைய அர்ப்பணித்த குழுவானது, சேவைகளை எண்மின்மயமாக்கல் மற்றும் ஒப்புதல் வழங்கும் நடவடிக்கைகளைத் தொடர்ந்து செய்து, தொழில்முயற்சிகளுக்கும், இமுச க்குமிடையே வரையறையற்ற பேச்சுவார்த்தைக்கான முன்னேற்றமான அணுகுமுறையை பிரதிபலிக்கக்கூடியதாகத் தொடங்கப்பட்டது.

2023 இல் ஒரு புதிய செயலூக்கமுள்ள கொள்கை நடவடிக்கையாக அறிமுகப்படுத்தப்பட்ட, இமுச அல்லாத ஆனால் ஏற்கெனவே உள்ள தொழில்முயற்சிகளை இமுச க்குக் கீழ் சேர்த்துக்கொள்வதற்கான புதிய ஒழுங்குமுறை வெளியிடப்பட்டதானது, இமுச இன் செல்வாக்கை பல்வேறு கைத்தொழில்களில் மேலும் அதிகப்படுத்தியது. மேலும், அடுத்தடுத்த சட்டங்களின் தாக்கங்கள் இருந்தபோதும், இமுச ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட செல்லுபடியாகுதல் மற்றும் சலுகைகளுக்கு ஆதரவாகப் பேசுதல், இமுச இன் அர்ப்பணிப்பையும், பரிந்து பேசுகின்ற அதன் ஆதரவான பங்கை ஊக்கப்படுத்தியதுடன், முதலீட்டாளர் நம்பிக்கையையும் பலப்படுத்தியது.

முதலீட்டாளர் சமூகத்தின் தொடர்ந்த முதலீடுகள் மற்றும் விரிவாக்கங்கள் என்ற நாட்டின் வணிக சூழலின் மீட்பிற்கும், வளர்ச்சிக்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பிற்கு அவர்களின் நம்பிக்கையையும், மீள்தன்மையையும் நான் அங்கீகரிப்பதுடன், பாராட்டவும் விரும்புகிறேன். ஆதரவு வழங்கும் நிரல் முகவர்களுடனான கூட்டும் இமுச இன் சேவைகளின் வெற்றிக்கு உத்தரவாதம் அளிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

இலங்கைக்கான சந்தை அணுகலை அதிகப்படுத்துவதை நோக்கமாகக்கொண்டு, இமுச இன் திறனை மேம்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்கும், வணிக சூழலை மேம்படுத்துவதற்கும், சர்வதேச வர்த்தக ஒப்பந்தங்களுக்காக வர்த்தக பேச்சுவார்த்தைகளை ஆதரிப்பதற்கும் இமுச ஆனது யூனெஸ்கப் (UNESCAP), யூஎஸ்எயிட் (USAID), உலக வங்கி போன்ற சர்வதேச முகவர்களுடன் ஈடுபடுவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

நாங்கள் எங்களுடைய சாதனைகளைக் கவனிக்கும்போது, பின்னடைவுகளைச் சமாளித்தல் மற்றும் மாற்றங்களை ஏற்றுக்கொள்ளல் என்ற இமுச இன் திறனானது சாதகமான முதலீட்டுச் சூழல் ஒன்றை வளர்த்து, அதனை ஒரு முன்னணியில் நிலைநிறுத்துகிறது என்பதைத் தெளிவாக்குகிறது.. அடுத்து வரும் ஆண்டுகளில் எங்களுடைய வெற்றியை மேலும் வலுப்படுத்தித் தொடரவும், விதிவிலக்கான சேவைகளை வழங்குவதற்கும், நாட்டின் வளர்ச்சிக்கு உதவும் வகையில் எங்களுடைய முதலீட்டாளர்களுக்கு ஆதரவு அளிப்பதற்கும் கடும் முயற்சி செய்வதற்கும் எங்களுடைய தொலைநோக்கில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

ரேணுகா எம். வீரக்கோன்

பணிப்பாளர் சபை

திரு தினேஷ் வீரக்கொடி - தலைவர்

இலங்கை முதலீட்டுச் சபை

திரு தினேஷ் வீரக்கொடி (டீ.பீஏ) ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ, இலங்கை கொமர்ஷல் வங்கி பீஎல்சீ என்பவற்றின் முன்னாள் தலைவராவார். தற்போது அவர் இலங்கை தொழில் தருநர்களின் கூட்டமைப்பின் (Employers' Federation of Ceylon) உப தலைவராகப் பதவி வகிப்பதுடன், இன்ரர்நஷனல் சேம்பர் ஒப் கொமோர்ஸின் உடனடி கடந்த தலைவராகவும். இலங்கை பணிப்பாளர்கள் நிறுவனத்தின் சிரேஷ்ட உப தலைவராகவும் இருக்கிறார். அவர் பல நிறுவனங்களின் பணிப்பாளராகவும் சேவை செய்கிறார்.

தற்போது திரு வீரக்கொடி ஜனாதிபதியின் திறைசேரி விவகார ஆலோசகராகப் பணியாற்றுவதுடன், கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணையத்தின் தலைவராகவும் செயற்படுகிறார். அத்துடன் முன்னர் அவர் இலங்கை ஊழியர் நம்பிக்கை நிதிய சபை தலைவராகவும், இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி கவுன்ஸில் மற்றும் இன்ரர்நஷனல் சேம்பர் ஒப் கொமேர்ஸ் என்பவை அடங்கலான நிறுவனங்களில் முக்கிய பதவிகளை வகித்துள்ளார். இவை தவிர, இலங்கை பிரதம மந்திரியின் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு மற்றும் சுற்றுலா அபிவிருத்தி அமைச்சருக்கு ஆலோசகராகவும் சேவை செய்துள்ளார்.

டாக்டர் டுஷ்னி வீரக்கோன்

டாக்டர் டுஷ்னி வீரக்கோன், பேரண்டப் பொருளாதாரக் கொள்கை, பிராந்திய வர்த்தக ஒருங்கிணைப்பு மற்றும் சர்வதேச பொருளாதாரம் என்பன தொடர்பான பகுதிகளை உள்ளடக்கிய ஆய்வு மற்றும் வெளியீடுகளைக் கொண்ட இலங்கை கொள்கைகள் ஆய்வு நிறுவனத்தின் (IPS) நிறைவேற்றுப் பணிப்பாளராவார். இலங்கை அரசாங்கத்திற்கு (GOSL) ஆலோசகர் என்ற பதவியிலும், அத்துடன் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வர்த்தக நிறுவனம் போன்ற சர்வதேச நிறுவனங்களின் ஆலோசகராகவும் பணிபுரிந்த பரந்த அனுபவம் அவருக்கு உண்டு. தற்போது அவர் இலங்கை மத்திய வங்கியின் நாணய கொள்கை சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினராகச் சேவையாற்றுவதுடன், கார்கில்ஸ் (இலங்கை) பீஎல்சீ இன் சுயேச்சையான நிர்வாகமற்ற பணிப்பாளராகவும் இருக்கிறார். முன்னர் நேஷன்ஸ் ட்ரஸ்ற் வங்கி மற்றும் கார்கில்ஸ் வங்கி சபைகளில் சேவையாற்றியுள்ளார். டுஷ்னி வீரக்கோன் ஐ.இ., பெல்பாஸ்ற் குயீன்ஸ் பல்கலைக் கழகத்தில் முதல் தர சிறப்புப் பட்டத்துடன், பொருளாதாரத்தில் பி.எஸ்ஸி பட்டதாரியுமாவார். அத்துடன் ஐ.இ. மன்செஸ்ரர் பல்கலைக் கழகத்தில் பொருளாதாரத்தில் முதுமானி பட்டமும், முனைவர் பட்டமும் பெற்றிருக்கிறார்.

திரு மனில் ஜயெசிங்க

திரு மனில் ஜயெசிங்க, 41 வருடங்களுக்கு மேலாக இலங்கை, மாலைதீவு மற்றும் பூட்டானில் உற்பத்தி, சில்லறை, விருந்தோம்பல், மொத்த வணிகம் மற்றும் தொலைத்தொடர்பு என்பன அடங்கலாக முக்கிய துறைகளில் கணக்காய்வு, ஆலோசனை மற்றும் கைத்தொழில் அனுபவத்தைக் கொண்ட பட்டயக் கணக்காளராவார். 2021 - 2023 வரை ஏனஸ்ற் அன்ட் யங் இலங்கை மற்றும் மாலைதீவின் நாட்டு முகாமைத்துவ பங்குதாரராகவும், இலங்கையில் அசுரன்ஸ் பிரக்ரிஸ் தலைவராகவும், 2003 முதல் 2023 வரை இலங்கையில் ப்ரொபெஷனல் பிரக்ரிஸின் பணிப்பாளராகவும் இருந்ததுடன், இலங்கையில் சநிஅநி/இநிசே (IFRS/SLAS) தலைவராகவும் சேவையாற்றியுள்ளார். இவர் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் உடனடி கடந்த தலைவரும், இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனத்தின் சபை உறுப்பினரும், முகபநி (CIMA) இன் இலங்கை சபை உறுப்பினரும், சகசுூ (IFAC) யின் சர்வதேச கணக்கீட்டுக் கல்வி நியம சபை உறுப்பினரும், மொறட்டுவ பல்கலைக் கழக சபை உறுப்பினரும், இலங்கை கணக்கீடு மற்றும் கணக்காய்வு நியம கண்காணிப்பு சபை உறுப்பினரும், இலங்கை சாமுக (CMA) சபை உறுப்பினரும் ஆவார். அத்துடன் அவர் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் கணக்காய்வுக் குழுவின் ஆலோசகராகவும் சேவையாற்றியுள்ளார். இவர் தற்போது சட்டபூர்வ கணக்கியல் நியமங்கள் குழுவின் தலைவராகவும், பத்திரங்கள் மற்றும் பரிமாற்றம் ஆணைக்குழுவிலும், இலங்கை மத்திய வங்கியின் நாணய சபையிலும் ஒரு உறுப்பினராக இருக்கிறார். டீசல் மற்றும் மோட்டார் என்ஜினியரிங் பீஎல்சீ, சிலோன் ஹொஸ்பிற்றல்ஸ் பீஎல்சீ, சீடபிள்யூ மக்கி பீஎல்சீ, சஹஸ்யா இன்வெஸ்ற்மென்ற்ஸ் லிமிடட் என்பவற்றின் சுயேச்சை பணிப்பாளராகவும் செயற்படுகிறார்.

திரு எராஜ் டி சில்வா

திரு எராஜ் டீ சில்வா, ஜனாதிபதி சட்டத்தரணி, இலங்கையில் மூல மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் தொழில் நடத்துபவராவார். அவருடைய தொழில்நிலை துறைகளாவன வர்த்தக மற்றும் குடியியல் நீதிமன்ற வழக்குகள். அடிப்படை உரிமைகள், அரசியலமைப்புச் சட்டம் என்பவற்றை உள்ளடக்கியதாகும். அண்மைக் காலங்களில் இவர் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பல குறிப்பிடத்தக்க வழக்குகளில் தோற்றியுள்ளார்.

இவர் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் சட்ட இதழின் ஆசிரியர் குழுவில் 2009 ஆம் ஆண்டிலிருந்து சேவையாற்றி, தற்போது (ஏப்ரல் 2014 இல் இருந்து) இணை தலைமை ஆசிரியராகச் சேவையாற்றுகிறார். மன நலத்திற்கான “சகனய” தேசிய சபையின் உப தலைராகவும், மார்டின் விக்ரமசிங்க ட்ரஸ்ற்றின் நம்பிக்கைப் பொறுப்பாளராகவும் இருக்கிறார்.

இவர் லண்டன் கிறே இன்னின் பரிஸ்ரரும், கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்திலிருந்து எல்எல்எம் (LLM) பட்டமும் பெற்றுள்ளார்.

திருமதி சந்தனி விஜயவர்தன

திருமதி சந்தனி விஜயவர்தன புவியியலில் சிறப்புப் பட்டம் பெற்றுள்ளதுடன், நெதர்லாந்தில் அபிவிருத்தி ஆய்வு மன்றத்தில் முதுமானி பட்டமும் பெற்றுள்ளார். இவர் 1994 இல் இலங்கை பொது சேவையில் திட்டமிடல் பிரிவின் உதவிப் பணிப்பாளராக இணைந்ததுடன், பல்வேறு அமைச்சுக்கள்/திணைக்களங்களில் சேவையாற்றியுள்ளார். இவர் திறைசேரியில் தேசிய திட்டமிடல், தேசிய பாதீடு, நிதிக் கொள்கை போன்ற பல பிரிவுகளில் 21 வருடங்களுக்கு மேலாகப் பணியாற்றி, பொது நிதிசார் முகாமைத்துவம் மற்றும் கொள்கை பகுப்பாய்வு என்பவற்றில் பெறுமதிமிக்க அனுபவத்தைப் பெற்றுள்ளார். இவருக்கு 2015 இல் அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சில் செயலாளர் பதவி வழங்கப்பட்டது. முதலீடு மற்றும் வர்த்தகத்திற்கான கொள்கை உருவாக்கும் அமைப்பில் சேவை ஆற்றுவதற்கான வாய்ப்பு கிடைத்து, அதன் கீழ் 2015 - 2019 வரை ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்காக சந்தை அணுகலை விரிவுபடுத்தும் நோக்கத்துடன் பல ஆரம்ப முயற்சிகள் மேற்கொண்டுள்ளார். அந்த காலகட்டத்தில் பாரிய பொருளாதாரங்களுடன் விரிவான சுவஒ (FTAs) களின் பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவதற்கும், நாட்டிற்காக தேசிய ஏற்றுமதி மூலோபாயத்தை ஏற்படுத்துவதற்கும் இவரால் பாரிய அளவில் பங்களிக்க முடிந்தது. பின்னர் இவர் 2019 இல் பொருளாதார சீர்திருத்தங்கள் மற்றும் பொது விநியோக அமைச்சின் செயலாளராகப் பணியாற்றினார். தற்போது இவர் தேசிய திட்டமிடல் திணைக்களத்தில் பணிப்பாளர் நாயகமாகப் பணியாற்றுகிறார். அது தேசிய மட்டத்தில் மூலோபாயத் திட்டமிடல் மற்றும் தீர்மானங்கள் எடுத்தல் என்ற உச்சத்தை அடைவதற்கு வழிவகுத்தது. அத்துடன் திருமதி சந்தனி விஜயவர்தன ஜனாதிபதி செயலகத்தில் மூலோபாய விவகாரப் பிரிவில் பிரதானமாக கல்வி சீர்திருத்தங்கள், சர்வதேச வர்த்தக விடயங்கள், முதலீடு மற்றும் வர்த்தக வசதியளித்தல் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் சீர்திருத்தங்கள் மற்றும் உணவுக் கொள்கைகள் தொடர்பான விடயங்களை உள்ளடக்கியதாக சிரேஷ்ட மேலதிகச் செயலாளராகச் சேவையாற்றுகிறார்.

இமுச இன் கண்ணோட்டம்

1978 இல் நிறுவப்பட்ட இலங்கை முதலீட்டுச் சபை (இமுச)க்கு முதலீட்டாளர்களுக்கும் அவர்களது வணிகத்திற்கும் கேந்திர புள்ளியாக சேவையாற்றுவதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு, இலங்கையின் பிரதம முதலீட்டு மேம்பாட்டு முகவராக சேவையாற்றுகிறது. முதலீட்டை மேம்படுத்தி, வசதியளித்தல், கைத்தொழில் அபிவிருத்தியை வளர்த்தல் மற்றும் ஆதரவளிக்கும் சேவைகளை நெறிப்படுத்தல் என்பன அதன் ஆணையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்தை இயக்குகின்ற முக்கிய நிறுவனமாக அடையாளம் காணப்பட்டு, இமுச வெளிநாட்டு நேரடி முதலீட்டைக் கவர்வதில் முக்கிய பங்காற்றி வருகிறது. இது நிலைபேறான பொருளாதார விரிவாக்கத்தைத் தூண்டுகிறது. திறமையானதும், நிபுணத்துவமானதுமான தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்கு வசதியளிப்பதன் மூலம் ஏற்றுமதிகளை அதிகரித்து, ஒட்டுமொத்த முதலீட்டு சூழலை மேம்படுத்தி, இமுச யானது நாட்டின் பொருளாதார வளர்ச்சிப் பாதைக்கு கணிசமாகப் பங்களிக்கிறது.

நோக்கம்

தேசிய பொருளாதாரக் கொள்கைகளை அமுல்படுத்தல், வெளிநாட்டு முதலீட்டை இயக்குதல், உகந்த முதலீட்டு சூழலை உருவாக்குதல் என்பன மூலம் தேசத்திற்கு சேவை செய்வதே இமுச இன் நோக்கமாகும். அது ஏற்றுமதி வருமானத்தை உருவாக்கி, நிலைபேறான வெளிநாட்டு முதலீட்டை அடைவதற்கும், இலங்கையை சர்வதேச முதலீட்டிற்குத் தேடப்படும் இடமாக நிலைநிறுத்துவதற்கும் பாடுபடுகிறது.

குறிக்கோள்கள்

இமுச இன் முக்கிய குறிக்கோள்களாவன: பொருளாதார அபிவிருத்தியை உருவாக்கி வளர்த்தல், பொருளாதாரத்தின் அடித்தளத்தை விரிவாக்கி பலப்படுத்துதல், வெளிநாட்டு நேரடி முதலீட்டை மேம்படுத்துதல், அந்நிய செலாவணி வருவாய்களுக்கான மூலங்களை பல்வகைப்படுத்துவதுடன், ஏற்றுமதி வருவாயை அதிகரித்தல், நாட்டுக்குள் கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சிகளை தாபித்து, அபிவிருத்தி செய்வதை ஊக்குவித்து வளர்த்தல் என்பனவாகும்.

பங்கு

முதலீடுகளை இலக்குவைத்துக் கவர்வதற்காக முன்னுரிமைத் துறைகளுக்கு அரசாங்கத்தின் முதலீட்டு கொள்கைகளை அமுல்படுத்துவதை ஆதரிப்பதுடன், படிப்படியாக வெநேமு இன் மட்டத்தை அதிகரித்து, தேசிய வளர்ச்சி இலக்குகளை அடைவதற்குப் பங்களிப்பதாகும்.

உயர் பெறுமதிசேர்/உயர் தொழில்நுட்ப உற்பத்திகள், உயர் பெறுமதிசேர் ஆடைகள், தகதொ செயல்படுத்தப்பட்ட சேவைகள், சுற்றுலா, உணவு பதனிடுதல், தளவாடங்கள், கல்வி மற்றும் பாரிய அளவிலான உட்கட்டமைப்பு அல்லது இலங்கையில் தெரிந்தெடுக்கப்பட்ட ஏனைய துறைகளில் கருத்திட்டங்களை அமைப்பதற்கு எண்ணுகின்ற **முதலீட்டாளர்கள் முதலில் தொடர்புகொள்ளும் மையமாக** இமுச தொழிற்படுகிறது. முதலீட்டாளர்களுக்கு வசதி அளிப்பதற்கான தகவல்களும், வழிகாட்டல்களும் வழங்குவதுடன், ஏனைய நிரல் முகவர்களிடமிருந்து வேண்டிய அனுமதிகளும் இமுச இனால் ஒருங்கிணைக்கப்படுகிறது.

கருத்திட்ட முன்மொழிவுகள் அனுமதிக்காகவும், சலுகைகள் வழங்குவதற்கும், வெளிநாட்டவர்களுக்கு விசா வழங்குவதற்கான வசதிக்காகவும் **முதலீட்டு விண்ணப்பங்கள் இமுச இனால் மதிப்பீடு செய்யப்படுகிறது.**

இமுச **முதலீட்டாளர்களுக்கு கருத்திட்ட சக்கரம் முழுவதும்,** தொடங்கியது முதல் அமுல்படுத்துதல் மற்றும் கருத்திட்டத்தின் வெற்றிகரமான செயற்பாடுகளுக்கு, மூலதனப்பொருட்கள் மற்றும் மூலப் பொருட்களின் இறக்குமதி/ ஏற்றுமதி க்கு வசதியளித்து, கவனம் செலுத்துவதுடன், இறுதித் தயாரிப்புகளின் ஏற்றுமதிக்கும் உதவி வழங்குகிறது.

இமுச ஆனது, முதலீட்டாளர்கள் குறைந்த கால ஆவகாசத்திற்குள் கருத்திட்டங்களை அமுல்படுத்துதற்குப் பொருத்தமான இடங்களை வழங்குவதற்காக எளிதில் கிடைக்கும் உட்கட்டமைப்பு வசதிகளினால் **ஏற்றுமதி செயலாக்க வலயங்களை அபிவிருத்தி செய்கிறது.**

நோக்கு

"ஆசியாவின் நிலையான முதலீடுகளுக்காக அதிசிறந்த கவர்ச்சிமிக்க கேந்திர நிலையமாக இலங்கையை மாற்றியமைத்தல்"

பணி

"இலங்கைக்கு தரமான முதலீட்டினைக் கவர்ந்தீர்ப்பதற்கும், அதனைத் தக்க வைப்பதற்கும் உள்ள சாத்தியத் தன்மையை நிறைவேற்றுவதற்காக மேம்படுத்தப்பட்ட ஏற்றுமதி அடிப்படையொன்றுக்கு இட்டுச் செல்வதற்கும், மிகச்சிறந்த தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும், புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் புத்தாக்கம் என்பவற்றினூடாக அறிவையும், திறன்களையும் மேம்படுத்துவதற்கும், இலங்கை முதலீட்டுச் சபை நேர்மறையாகவும், வேகமாகவும் செயலாற்றுகின்றது."

முக்கிய விழுமியங்கள்

செயல்திறன் மற்றும் சாதனைக்கான ஆர்வம்

இமுச ஆனது மேன்மையடைய விரும்புகின்றதான, ஆனால் யதார்த்தமான, நிலைபேறான முதலீட்டு இலக்குகளை உருவாக்கி. அடையும்.

பொது மற்றும் தனியார் கோளங்களைக் கட்டுப்படுத்துதல்

எங்களுடைய பொருளாதாரத்தை செழிப்படையச் செய்வதற்கு உதவும் முதலீடுகளை எளிதாக்கி, பாதுகாத்து வளர்ப்பதில் இமுச பெருமை கொள்ளும். நாங்கள் பொது மற்றும் தனியார் நிறுவனங்களுடன் ஒத்துழைத்து, பங்குதாரராக அவர்களின் பணிக்குப் பங்களிப்புச் செய்யும் அதேவேளை எங்களுடைய பணியையும் வழங்குவோம்.

ஒருமைப்பாடு மற்றும் தொழில்முறை

இமுச ஆனது முதலீட்டாளர்களின் தேவைகளைப் புரிந்துகொண்டு. சரியான நேரத்தில் புதுமையான தீர்வுகளை வழங்குவதில் அர்ப்பணத்துடன் இருக்கும். நாங்கள் ஒருமைப்பாடு, நேர்மை, நாணயம், நம்பகத்தன்மை, நம்பிக்கை நியாயமாக நடத்துதல், மரியாதை மற்றும் அக்கறை என்பவற்றை இதயபூர்வமாக அர்ப்பணிப்பில் கொண்டிருப்போம்.

உயர்ந்த வாடிக்கையாளர் சேவை

இமுச ஆனது போட்டியிடும் வெளிநாட்டு நேரடி முதலீட்டு இடங்களைவிட செயல்திறன் மிக்க மற்றும் கணிசமான முன்னேறும் நிலைகளுக்கு வாடிக்கையாளர் சேவைகளை வழங்குகிறது.

மக்கள்

திறன், ஒத்துழைப்பு, அர்ப்பணிப்பு மற்றும் அதன் மக்களின் சிறப்பிற்குப் பொறுப்பாக இருத்தல் என்பவற்றிற்கு இமுச மதிப்பளிக்கும். பதவியினர் பணியாற்றுவதற்கும், விருத்தி செய்துகொள்வதற்கும், வெற்றியடைவதற்கும் இமுச யை ஒரு சிறந்த இடமாக ஆக்குவதில் நாங்கள் தொடர்ந்து கவனம் செலுத்துவோம்.

மைல்கற்கள்

2023 – இலங்கை முதலீட்டுச் சபையின் 45வது ஆண்டுநிறைவு ஞாபகார்த்தமாக உறுதியான முதலீட்டாளர்களுக்கு வசதியளிப்பதற்காக கிரீன் சனல் வசதி (Green channel facility) வழங்குதல்

2022 – வமுகூ (AIM) விருதுகள் 2022 இல் வெள்ளி விருது வெற்றியாளர் வெநேமு உளவுத்துறை சுதந்திர வலய விருது 2022 முதலீட்டாளர்களுக்கு வசதியளிக்கும் நிலையம் (முவநி (IFC)) தாபித்தல் பங்குதாரரைக் கண்டுபிடிக்கும் மேடை ஆரம்பித்துவைத்தல் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு நீண்ட கால வதிவிட விசா திட்டம்

2021 – முதன் முதலாக இலங்கை முதலீட்டு மன்றம் 85 நாடுகளைச் சேர்ந்த 5,000 க்கும் மேற்பட்ட உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பங்குபற்றியோருக்கு மெய்நிகராக நடாத்தப்பட்டது.

2020 – ஏறாவூரிலும், அரபொக்கவிலுமாக இரண்டு புதிய வலயங்களின் அபிவிருத்தி ஆரம்பிக்கப்பட்டது.

2019 – இமுச ஏற்றுமதி செயலாக்க வலயங்களுடன புதிய சேர்க்கையாக பிங்கிரிய ஏசெவ.

2018 – இமுச இன் 40வது ஆண்டுநிறைவு கொண்டாட்டங்கள். அதிஉயர் வெ.நே.மு ஐஅ$ .2.37 பிலி. அடையப் பெற்றது. பிஏசெவ மதிப்புமிக்க முஉ(IR) விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது

2014 – இமுச “ஆசிய பசுபிக் வர்த்தக மன்றம் 2014” ல் பங்குதாரர் ஆகியது

2013 – “பொதுநலவாய அரச தலைவர்களின் கூட்டம் (CHOGM) 2013” இற்குச் சமாந்தரமாக நடைபெற்ற “பொதுநலவாய வர்த்தக மன்றத்தின்” முதலீட்டாளர் மன்றத்திற்கு இமுச தலைமை தாங்கியது.

2011 – ஐஅ$ 1 பிலி. வெநேமு உட்பாய்ச்சல் எட்டப்பட்டது.

2009 – இமுச சதஅ (ISO) 9001:2000 ஐப் பெற்ற முதலாவது அரச நிறுவனமாகியது. இமுச யாழ்ப்பாண அலுவலகம் நிறுவப்பட்டது.

2008 – உவமை இன் ஒன்பது (09) தளங்களைக் கொள்வனவு செய்து, இமுச இன் தலைமையகம் உலக வர்த்தக மையத்தில் நிரந்தரமாக தாபிக்கப்பட்டது

2006 – கைத்தொழில் துறையை கிராமப்புறத்திற்குக் கொண்டு- செல்லும் நோக்கத்துடன், “300 தொழில்முயற்சிகள் திட்டம்” என்பதன் முக்கிய இயக்கிகள் தொடங்கப்பட்டது.

2001 – சீத்தாவக வலயம் இலங்கை முதலீட்டுச் சபையின் சீத்தாவக ஏசெவ ஆக சுவீகரிக்கப்பட்டது

2000 – பொல்காவெல ஏசெவ மாவத்தகம ஏசெவ மற்றும் மிரிஜ்ஜவில ஏசெவ என்பன தாபித்தல்

1999 – ஹொரண ஏசெவ உம், வத்தபிற்றிவல ஏசெவ உம் தாபித்தல்

1998 – மிரிகாம ஏசெவ மற்றும் மல்வத்த ஏசெபூ தாபித்தல்

1995 – கண்டி கைத்தொழில் பூங்கா தாபித்தல்

1992 – 1992 ஆம் ஆண்டின் சட்ட இல. 49 இன் கீழ் இலங்கை முதலீட்டுச் சபை (இமுச) ஒரு நியதிச்சட்ட நிறுவனமாக இணைக்கப்பட்டது. இமுச கொபெபொஆ இன் வாரிசாகும். அரச பிராந்திய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வேலையில்லாமையைக் குறைப்பதற்காக “200 தைத்த ஆடைகள் கைத்தொழில் நிகழ்ச்சி” அறிமுகப்படுத்தப்பட்டது.

1991 – தென் மாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்காக கொக்கல ஏற்றுமதி செயலாக்க வலயம் தாபித்தல்

1990 – வெளிநாட்டு முதலீட்டு ஆணைக்குழு மற்றும் கொபெபொஆ என்பன ஒன்றாக இணைக்கப்பட்டதுடன், கொபெபொஆ இலங்கையில் வெளிநாட்டு முதலீட்டை அங்கீகரிக்கும் ஏக அதிகார சபையாக ஆகியது.

1986 – வலய தொழில்முயற்சிகளுக்கு உதவுவதற்காக கொபெபொஆ இனால் ஒரு வேலை வங்கி அமைக்கப்பட்டது. 1986 இல் இமுச இன் இரண்டாவது வலயமாக, பியகம ஏற்றுமதி செயலாக்க வலயம் தாபித்தல்

1979 – 1979 ஆம் ஆண்டு கட்டுநாயக்க ஏற்றுமதி செயலாக்க வலயம் தாபித்தல். இதுவே இற்றைவரை பராமரிக்கப்பட வேண்டியதும், முதலாவதும், பெரியதுமான வலயமாகும்.

1978 – 1978 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் கீழ் கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு (கொபெபொஆ) தாபிக்கப்பட்டது.

ஒரே பார்வையில் இமுச இன் பொருளாதாரத்திற்கான பங்களிப்பு

வெநேமு உட்பாய்ச்சல் (2014-2023) - ஐஅ$ மிலி



- கடந்த 10 ஆண்டுகளில் பெறப்பட்ட மொத்த வெநேமு இல் 55% க்கும் மேல்
- 1978 இலிருந்து ஐஅ$ 21.9 பிலி க்கு மேலான ஒட்டு மொத்த வெநேமு உட்பாய்ச்சல்

இலங்கையில் முதலீடு செய்யும் முதல் பத்து நாடுகளிலிருந்தும் வெநேமு (2014 - 2023) - ஐஅ$ மிலி



வெநேமு உட்பாய்ச்சல் 2023

2023 இல் ஐஅ$ 0.7 பிலி க்கு மேலான வெநேமு உட்பாய்ச்சல்

மொத்த வெநேமு உட்பாய்ச்சலின் 23% உடன் சீனா முதலாவது இடத்தைப் பெற்ற வெநேமு ஆதார நாடாகியது.

மொத்த வெநேமு உட்பாய்ச்சலின் 22% உடன் இந்தியா இரண்டாவது இடத்தைப் பெற்ற வெநேமு ஆதார நாடாகியது.

பிரான்ஸ், சிங்கப்பூர், நெதர்லாந்து, மலேசியா என்பன ஒவ்வொன்றும் மொத்த வெநேமு உட்பாய்ச்சலின் 5% ஐச் செய்திருக்கின்றன.



தளவாடங்கள், சுற்றுலா, தகொதொ என்பவற்றை உள்ளடக்கிய சேவைத் துறை 38% இல் மிக உயர்ந்த வெநேமு உட்பாய்ச்சலைப் பதிவுசெய்தது.

32% இல் அடுத்த மிக உயர்ந்த வெநேமு உட்பாய்ச்சல் உற்பத்தித் துறையிலிருந்தாகும்.

தர வரிசையில் மூன்றாவதான உட்கட்டமைப்புத் துறை மொத்த வெநேமு உட்பாய்ச்சலின் 30% ஆகக் கணக்கிடப்பட்டது.

துறைவாரியாக வெநேமு உட்பாய்ச்சல் (2014 - 2023)



இமுச ஏற்றுமதி செயலாற்றுகைகள் - வணிக பொருட்கள் மற்றும் சேவைகள் (2014 - 2023)

(ஐஅ$ பிலி)



வணிக பொருட்கள் ஏற்றுமதிகள் (தேசிய எதிராக இமுச) (2014 - 2023)

(ஐஅ$ பிலி)



இமுச ஏற்றுமதிகள் 2023

- 2023 இல் இமுச ஏற்றுமதிகள் ஐஅ$ 8.1 பிலி
- வணிக பொருட்கள் ஏற்றுமதிகள் ஐஅ$ 7.3 பிலி



தேசிய மொத்த வணிக பொருட்கள் ஏற்றுமதியின் 62%

தேசிய கைத்தொழில் ஏற்றுமதியின் 76%



தேசிய தைத்த ஆடைகள் ஏற்றுமதியின் 96%

தேசிய றப்பர் ஏற்றுமதியின் 90%

தேசிய தோல், பயணப் பொருட்கள், மற்றும் காலணிகளின் ஏற்றுமதியின் 87%

தேசிய இயந்திரங்கள், இயந்திர உபகரணங்கள் ஏற்றுமதியின் 80%

தேசிய அச்சு கைத்தொழில் உற்பத்திகள் ஏற்றுமதியின் 80%

தேசிய போக்குவரத்து உபகரணங்களின் ஏற்றுமதியின் 80%

இமுச தொழில்முயற்சிகளின் வேலைவாய்ப்பு மொத்த நேரடி வேலைவாய்ப்பு (000")



இமுச தொழில்வாய்ப்பு 2023

- 465,000 மொத்த நேரடி வேலைவாய்ப்பு
- 1.4 மிலி. க்கு மேலாக மறைமுக வேலைவாய்ப்பு



- 274,000 தைத்த ஆடைகள் மற்றும் புடவை துறை
- 97,000 உற்பத்தித் துறையில்
- 25,000 தகதொ/வசெவெ துறை
- 15,000 சுற்றுலாத் துறை

இமுச தொழில்முயற்சிகளின் புவியியல் பரவலும், வேலைவாய்ப்பும் (2023)



இமுச தொழில்முயற்சிகளின் எண்ணிக்கை

தொழில்வாய்ப்பு எண்ணிக்கை

* திட்ட விரிவாக்கல்கள்

2023 இல் இமுச இன் செயலாற்றுகை

ஒரே பார்வையில் வருடம்

கிடைக்கப்பெற்ற முதலீட்டு முன்மொழிவுகள்

புதிய கருத்திட்டங்கள் (மதி.முத. ஐஅ$ 3 பிலி)	104
விரிவாக்கலுக்கான முன்மொழிவுகள் (மதி.முத. ஐஅ$ 0.26 பிலி)	40

பெற்றுக்கொண்ட முதலீடு

பெற்றுக்கொண்ட வெநேமு	ஐஅ$ 737 மிலி
பெற்றுக்கொண்ட உள்நாட்டு முதலீடு	ஐஅ$ 570 மிலி

ஒப்புதல்கள் வழங்கப்பட்டவை

புதிய கருத்திட்டங்கள் (மதி.முத. ஐஅ$ 1.83 பிலி)	68
விரிவாக்கங்கள் (மதி.முத. ஐஅ$ 0.23 பிலி)	38

இமுச தொழில்முயற்சிகளின் ஏற்றுமதிகள்

வணிக பொருட்கள் ஏற்றுமதிகள்	ஐஅ$ 7.3 பிலி
சேவை ஏற்றுமதிகள்	ஐஅ$ 815 மிலி

கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தங்கள்

புதிய கருத்திட்டங்கள் (மதி.முத. ஐஅ$ 0.48 பிலி)	42
விரிவாக்கங்கள் (மதி.முத. ஐஅ$ 0.24 பிலி)	50

இமுச தொழில்முயற்சிகளின் வேலைவாய்ப்பு

மொத்த நேரடி வேலைவாய்ப்பு	465,000*
வலய தொழில்முயற்சிகளின் வேலைவாய்ப்பு	135,000

- வலய தொழில்முயற்சிகள் அடங்கலாக

ஒப்புதல் வழங்கப்பட்ட கருத்திட்டங்கள் - 2023

106 கருத்திட்டங்களின் எண்ணிக்கை 68 புதியது மற்றும் 38 விரிவாக்கங்கள்	ஐஅ$ 2.06 பிலி மொத்த ஒப்புதல் வழங்கப்பட்ட முதலீடுகள்	21,397 மதிப்பிடப்பட்ட வேலை வாய்ப்புகள்

முதலீடு



மொத்த மதிப்பிடப்பட்ட முதலீடு: ஐஅ$ 2.06 பிலி
புதிய திட்டங்கள்: ஐஅ$ 1.83 பிலி (89%)
விரிவாக்கங்கள்: ஐஅ$ 0.23 பிலி (11%)

உரிமை



துறை



புவியியல் அமைவிடம்



முதலீட்டு செயலாற்றுகைகள் 2023

வெநேமு துறைசார் பங்களிப்பு

2023 இல் இலங்கை ஐஅகூ 737 மிலி. ஐ வேநேமு ஆகக் கவர்ந்து, இதனோடு உள்ள படத்தில் காட்டப்பட்டவாறு பல்வேறு துறைகளில் விநியோகிக்கப்பட்டது. உற்பத்தித் துறை வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்குக்கு மிகவும் கவர்ச்சிகரமானதாக வெளிப்பட்டு, மொத்த வெநேமு உட்பாய்ச்சலில் கணிசமான பங்காக 32% ஐ ஆதிக்கம் செலுத்தியது.

இது தேசத்தின் கைத்தொழில் அபிவிருத்தியில் இத்துறையின் வலுவான வேண்டுகோளையும், அதன் முக்கிய பங்கையும் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

சுற்றுலாவும், மையச் செயற்பாடுகளும் ஒவ்வொன்றும் 17% ஐ பெற்றுள்ள அதேவேளை, தொலைத்தொடர்பு 15% ஐக் கவர்ந்துள்ளது.

ஏனைய துறைகளுள் சொத்து அபிவிருத்தி 6% ஐயும், எரிபொருள், வாயு, பெற்றோலியம் என்பன 5% ஐயும், துறைமுக கொள்கலன் முனையங்கள் 4% ஐயும், ததொ மற்றும் வசெவெ 2% ஐயும் பெற்றுக்கொண்டன. இத்துறைகள் நாடு பூராகவும் நிலைபேறான வளர்ச்சி, உட்கட்டமைப்பு அதிகரித்தல், மற்றும் தொழில் வாய்ப்பை உருவாக்குதல் என்பவற்றை ஏற்படுத்துவதற்குத் தயாராக உள்ளன.



வெநேமு பங்களிப்பாளர்கள் 2023

முக்கிய நாடுகளினால் வெநேமு உட்பாய்ச்சல் (ஐஅ$ மிலி)



2023 இன்போது வெநேமு ஆதாரப் பொருளாதாரங்களுள் முதல் பத்து பங்களிக்கும் நாடுகள் இலங்கைக்குள் வெநேமு ஐ உட்செலுத்துவதற்குக் கூட்டாக முக்கிய பங்கு வகித்தன. மொத்த வெநேமு இல் 23% ஐப் பங்களித்து சீனா மிகப் பெரிய முதலீட்டாளராக வெளிப்பட்டது. அதனை நெருங்கியதாகத் தொடர்ந்து இந்தியா 22% ஆகி, வலுவான பொருளாதார உறவுகளையும், இந்த இரு நாடுகளுக்கும், நடத்தும் தேசத்திற்குமிடையே கூட்டுப் பங்காண்மையையும் எடுத்துக்காட்டுகிறது.

ஐரோப்பிய நாடுகளிலிருந்து பிரான்ஸ், இலங்கையில் முதலீடு செய்வதற்கு குறிப்பிடப்பட்ட ஆர்வத்தைக் குறிப்பிட்டு, மூன்றாவது மிகப் பெரிய பங்களிப்பாளராக மொத்த வெநேமு உட்பாய்ச்சலின் 10% ஐக் கணக்கிட்டது. நெதர்லாந்து 8% ஐச் சேர்த்துக் கொண்டதுடன், சிங்கப்பூர் 6% ஐ முதலீடு செய்து, இரண்டும் அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்களிலிருந்து இலங்கைக்குள் கணிசமான முதலீடுகளைச் செய்துகாட்டின.

மலேசியாவும், சீஷெல்ஸும் ஒவ்வொன்றும் 5% அளவில் முதலீடுசெய்து குறிப்பிடத்தக்க பிராந்திய ஈடுபாட்டைக் காட்டின. ஹொங்கொங் 4% பங்களித்து, ஆசியாவிலிருந்து வலுவான முதலீட்டை மேலும் வலியுறுத்தியது. ஐக்கிய அமெரிக்காவும், லக்ஸம்பேர்க்கும் முறையே 3% மற்றும் 2% இனால் பல்வேறு முதலீட்டு ஆதார பொருளாதாரங்களைப் பிரதிபலித்து, முதல் பத்து இடங்களைப் பிடித்தன.

உள்நாட்டு முதலீட்டின் துறைவாரியான பங்களிப்பு 2023

ஜனவரி முதல் டிஸம்பர் 2023 வரை இலங்கை முதலீட்டுச் சபை (இமுச) மொத்த உள்நாட்டு முதலீடாக ஐஅ$ 570 மிலி ஐ அறிக்கையிட்டுள்ளது. இந்த முதலீடுகளில் உற்பத்தித் துறை மிகப் பெரிய பங்கைக் கவர்ந்து, மொத்தத்தின் 37% உயர்வாக உள்ளது.

தொலைத்தொடர்புத் துறை உள்நாட்டு முதலீடுகளின் 22% ஐப் பெற்று, இரண்டாவது மிகப் பெரிய பங்களிப்பாளராகியது. ஏனைய சேவைகளிலும், உட்கட்டமைப்பிலும் முதலீடுகள் 14% ஆகக் கணக்கிடப்பட்டு, பொருளாதார வளர்ச்சியில் தங்களுடைய முக்கிய பங்கை வெளிப்படுத்தின. ததொ மற்றும் வசெவெ துறை முதலீடுகளின் 9% உறுதிப்படுத்தி, நவீன பொருளாதாரத்தில் தங்களுடைய முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டின.

துறைமுக கொள்கலன் முனையங்கள் துறை 8% ஐப் பெற்றுக்கொண்டு, வர்த்தகத்தை இலகுவாக்குவதற்கு அதன் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டியது. சொத்து அபிவிருத்தி மொத்த உள்நாட்டு முதலீட்டில் 7% ஐக் கவர்ந்த அதேவேளை, சுற்றுலாத் துறை 3% ஐக் கணக்கிட்டு, நாட்டின் சுற்றுலா உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்வதில் தொடர்ந்தும் ஆர்வத்தை வெளிப்படுத்தியது. விவசாயத் துறை மிகக் குறைவான பங்காக 0.02% ஐப் பெற்றுக்கொண்டது.



இமுச ஏற்றுமதி செயலாற்றுகைகள் 2023

இமுச ஏற்றுமதி கூடை - 2023

2023 இல் இமுச தொழில் முயற்சிகளின் மொத்த ஏற்றுமதிகளில் வணிகப் பொருட்கள் ஏற்றுமதியில் ஐஅ$ 7,334 மிலி ஐயும், சேவைகள் ஏற்றுமதியில் ஐஅ$ 815 மிலி ஐயும் உள்ளடக்கியதாக ஐஅ$ 8,149 மிலி ஐ அடைந்தது. இமுச வணிகப் பொருட்கள் ஏற்றுமதிகள், தேசிய வணிகப் பொருட்கள் ஏற்றுமதிகளின் குறிப்பிடத்தக்கதாக 62% ஐயும், தேசிய கைத்தொழில் ஏற்றுமதிகளை ஈர்க்கக்கூடியதாக 76% ஐயும் கணக்கிட்டது.

வணிகப் பொருட்கள் ஏற்றுமதிகளாவன கைத்தொழில் ஏற்றுமதிகள், விவசாய ஏற்றுமதிகள், கனிப்பொருள் ஏற்றுமதிகள் மற்றும் வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகளை உள்ளடக்கியதாகும்.

கைத்தொழில் ஏற்றுமதிகள் இமுச ஏற்றுமதி இலாகாவை ஆதிக்கம் செலுத்தி, மொத்த இமுச ஏற்றுமதிகளில் 86% ஐ ஏற்படுத்துகிறது. சேவைகள் ஏற்றுமதிகள் 10% ஐப் பிரதிநிதித்துவம் செய்து, ஏற்றுமதிப் பொருளாதாரத்தில் சேவைகள் துறையின் வளரும் முக்கியத்துவத்தைப் பிரதிபலித்தது. விவசாய ஏற்றுமதிகள் மொத்த இமுச ஏற்றுமதிகளுக்கு 4% பங்களிப்புச் செய்த அதேவேளை, கனிப்பொருள் ஏற்றுமதியும், வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகளும் முறையே 0.1% மற்றும் 0.03% ஐக் கணக்கிட்டன. இந்தப் புள்ளிவிபரங்கள் தேசிய ஏற்றுமதி பொருளாதாரத்திற்கு இமுச தொழில்முயற்சிகளின் கணிசமான பங்களிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன.



இமுச கைத்தொழில் ஏற்றுமதிகள் - 2023



2023 இல் இமுச தொழில்முயற்சிகள் கைத்தொழில் ஏற்றுமதிகளில் மொத்தமாக ஐஅ$ 7,032 மிலி ஐப் பதிவுசெய்தது. இந்த ஏற்றுமதிகளில் ஒரு குறிப்பிடத்தக்க 66%, ஏறத்தாழ ஐஅ$ 4,676 மிலி தொகையானது புடவை மற்றும் தைத்த ஆடைகள் துறையிலிருந்து பெறப்பட்டதுடன், கைத்தொழில் ஏற்றுமதி நிலப்பரப்பில் அதன் ஆதிக்கத்தை அடிக்கோடிடுகிறது. றப்பர் துறை 12% பங்களித்து, ஏறத்தாழ ஐஅ$ 814 மிலி தொகையான அதேவேளை, ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் மொத்தத்தின் 7% ஆகக் கணக்கிடப்பட்டது. இயந்திரம் மற்றும் இயந்திர உபகரணங்கள் 7% க்கு சமமானதாகி ஐஅ$ 477 மிலி ஆகியது.

இரத்தினம், வைரம் மற்றும் ஆபரணத் துறை 3% பங்களித்தது. உணவு, பானங்கள் மற்றும் புகையிலைத் துறை மற்றும் போக்குவரத்து உபகரணங்கள் துறை ஒவ்வொன்றும் ஏற்றுமதியின் 2% ஐப் பங்களிப்புச் செய்த அதேவேளை, அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் துறை 1% பங்களித்தது. புடவை மற்றும் தைத்த ஆடைகளுக்கான வலுவான முக்கியத்துவத்தைத் தொடர்ந்து, றப்பர், இயந்திரம் மற்றும் சிறப்பு கைத்தொழில் துறைகளிலிருந்தான இந்தத் தொகைகள் இமுச இன் கைத்தொழில் ஏற்றுமதிகளின் பன்முகப்படுத்தப்பட்ட தன்மையை எடுத்துக்காட்டுகின்றன.

இமுச ஏற்றுமதி செயலாக்க வலயங்கள்



இமுச இன் அதி கூடிய வணிகப் பொருட்களின் ஏற்றுமதிகள் சென்றடையும் இடங்கள்

2023 இல் இமுச தொழில்முயற்சிகள் வணிகப் பொருட்கள் ஏற்றுமதிகளில் மொத்தமாக ஐஅ$ 7,334 மிலி ஐப் பதிவு செய்தது. ஐக்கிய அமெரிக்காவே இந்த ஏற்றுமதிகளுள் 33% ஆக, ஏறத்தாழ ஐஅ$ 2,390 மிலி க்கு சமமாகக் கணக்கிட்டு, மிகப்பெரிய சந்தையாக இருந்தது. அதனைத் தொடர்ந்து ஐக்கிய இராச்சியம் கணிசமான 10% பங்குடன், இத்தாலி மொத்த ஏற்றுமதிகளில் 8% எனக் கணக்கிடப்பட்டது. ஜெர்மனி 6% பங்களித்த அதேவேளை, இந்தியா வணிகப் பொருட்கள் ஏற்றுமதிகள் சென்றடையும் இடங்களில் 5% ஐப் பிரதிநிதித்துவம் செய்தது.

பிரான்ஸ், நெதர்லாந்து, கனடா, மற்றும் பெல்ஜியம் ஒவ்வொன்றும் 3% ஐக் கணக்கிட்டு பல ஐரோப்பிய மற்றும் வட அமெரிக்க நாடுகளில் நன்கு விநியோகிக்கப்பட்ட சந்தை இருப்பை நிரூபிக்கிறது. அவுஸ்திரேலியாவும் மொத்த வணிகப் பொருட்கள் ஏற்றுமதியில் பங்களித்து, 2% பங்கை வகித்தது.

இமுச இன் அதி கூடிய சேவை ஏற்றுமதிகள் சென்றடையும் இடங்கள் - 2023

2023 இல் சேவை ஏற்றுமதிகளாக ஐஅ$ 815 மிலி ஐப் பதிவு செய்தது. இந்த ஏற்றுமதிகளின் விநியோகம் பல்வேறு உலகளாவிய சந்தை வாடிக்கையாளர்களைக் கவர்வதற்கான மூலோபாயத்தைப் பிரதிபலிக்கின்றன. குறிப்பாக ஐக்கிய அமெரிக்கா மிகப் பெரிய அடையுமிடமாக வெளிப்பட்டு, மொத்த சேவை ஏற்றுமதிகளின் 19% ஐ எடுத்துக்கொண்டது. ஐக்கிய இராச்சியம் மற்றும் பங்காளதேஷ் ஒவ்வொன்றும் 15% பங்களித்தன. பாகிஸ்தானும், ஐக்கிய அரபு எமிரேட்ஸும் சேவை ஏற்றுமதிகளின் 7% ஐக் கணக்கிட்டன. சுவீடனும், இந்தியாவும் 6% ஐக் கணக்கிட்டன. அவுஸ்திரேலியா, சைப்ரஸ், மற்றும் சிங்கப்பூர் என்பன சேவை ஏற்றுமதிகளின் 2% ஐக் கொண்ட ஏனைய குறிப்பிடத்தக்க அடையுமிடங்களாகும். இந்த விநியோகம் இமுச சேவை ஏற்றுமதிகளுக்கு அதன் உலகளாவிய தடத்தை விரிவாக்கி, பல்வேறு சந்தைகளுக்கு பிரயத்தனம் செய்த வெற்றிகரமான முயற்சியை அடிக்கோடிட்டுக்காட்டுகிறது.



இமுச இன் அதி கூடிய வணிகப் பொருட்கள் ஏற்றுமதிகள் சென்றடையும் இடங்கள் - 2023 (ஐஅ$ மிலி)

இமுச இன் அதி கூடிய சேவை ஏற்றுமதிகள் சென்றடையும் இடங்கள் - 2023 (ஐஅ$ மிலி)

வேலைவாய்ப்பு செயலாற்றுகைகள் 2023

2023 இல் மொத்தமாக 465,026 தனிநபர்கள் பல்வேறு கைத்தொழில்களில் ஈடுபட்டனர். தைத்த ஆடைகள் மற்றும் புடவைத் துறை வேலைவாய்ப்பிற்கு அதிகூடிய பங்களிப்புச் செய்து, தொழில் படையின் 59% ஐ உள்ளடக்கியது.

அதனைத் தொடர்ந்து ஏனைய உற்பத்திப் பொருட்கள் மொத்த வேலைவாய்ப்பில் 11% ஐப் பிரதிநிதித்துவம் செய்தன. தகதொ மற்றும் வசெவெ துறை தொழில் படையின் 6% இற்கு வேலைவாய்ப்புக்களை வழங்கிய அதேவேளை ஏனைய சேவைகள் 5% பங்களிப்புச் செய்தன. றப்பர் பொருட்கள் துறை மற்றும் உணவு, பானங்கள் மற்றும் புகையிலை துறை இரண்டும் ஒவ்வொன்றும் தொழில் படையின் 4% க்கு வேலை வழங்கி, வேலை உருவாக்கத்தில் தங்களுடைய கணிசமான பாகத்தை வெளிப்படுத்தின.

சுற்றுலாத் துறை மற்றும் சொத்து அபிவிருத்தி என்பன ஒவ்வொன்றும் மொத்த வேலைவாய்ப்பில் 3% ஐக் கணக்கிட்டு, பொருளாதார நடவடிக்கைகள் முன்னெடுப்பதிலும், வேலைவாய்ப்பை ஏற்படுத்துவதிலும் அவற்றின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தின. மேலும் தொலைத்தொடர்புகள், இயந்திரங்கள் மற்றும் போக்குவரத்து உபகரணங்கள் போன்ற துறைகள் வேலைவாய்ப்பிற்கு 2% பங்களிப்புச் செய்து, தொழில் படையை ஈடுபடுத்துவதில் அவற்றின் ஒப்பீட்டுத் தாக்கத்தை விளக்கின. அத்துடன், 1% ஆன வேலைவாய்ப்பு விவசாயத் துறை மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு துறைகளிலிருந்து உருவாகி, பொருளாதார அபிவிருத்திக்கு ஒரு முழுமையான அணுகுமுறையையும், இமுச இனால் பின்பற்றப்படும் வேலைவாய்ப்பு உருவாக்கத்தையும் வெளிப்படுத்தின.



* ஏனைய சேவைகள் விமான சேவைகள், கப்பல் திருத்தும் சேவைகள், கல்விசார் நிறுவனங்கள் போன்றவை அடங்கலாகும்.

உலக முதலீடுகளின் போக்கு 2023 - 2024

2023 இல் ஒரு சில ஐரோப்பிய வழித்தட பொருளாதாரத்தில் கணிசமான நிதிசார் ஏற்ற இறக்கத்தின் செல்வாக்கினால் உலகளாவிய வெளிநாட்டு நேரடி முதலீடு (வெநேமு) 2% இனால் சரிவடைந்து, ஐஅ$ 1.3 திரிலியனை அடைந்தது. இவ் விளைவுகளைத் தவிர, உலகளாவிய வெநேமு பாய்ச்சல்கள் 2022 இல் இருந்ததைவிட 10% குறைவாக இருந்தது. 2024 இல் சர்வதேச முதலீட்டின் கண்ணோட்டம் பலவீனமான வளர்ச்சி, பொருளாதார துண்டாடுதல், வர்த்தக மற்றும் புவியியல்சார் பதட்டநிலைகள், கைத்தொழில் கொள்கைகள் மற்றும் வழங்கல் சங்கிலி பல்வகைப்படுத்தல் என்பன காரணமாக சவாலாக அமைந்துள்ளது. இந்த சவால்கள் இருப்பினும், பன்னாட்டு தொழில்முயற்சிகள் (MNEs) உயர்ந்த இலாப மட்டங்களைத் தக்கவைத்திருப்பதுடன், நிதிசார் நிலைமைகள் சீரடைந்து வருவதுடன், 2023 இல் அதிகரித்த பசுமை வயல் கருத்திட்ட அறிவிப்புகள் வரும் ஆண்டில் சாத்தியமான மிதமான வளர்ச்சியையே பரிந்துரைக்கின்றன.

2023 இல் சர்வதேச கருத்திட்ட நிதி மற்றும் குறுக்கு எல்லை இணைத்தல் மற்றும் கையகப்படுத்தல்கள் (இ மற்றும் கை கள் - M & As) என்பன குறிப்பாக பலவீனமாக இருந்தன. அபிவிருத்தியடைந்த நாடுகளில் வெநேமு க்கு முக்கியமான இ மற்றும் கை கள் பெறுமதியில் 46% வீழ்ச்சியைக் கண்ட அதேவேளை, உட்கட்டமைப்பு முதலீட்டுக்கு இன்றியமையாத கருத்திட்ட நிதி 23% இனால் இறங்கியது. இறுக்கமான நிதிசார் நிலைமைகள், முதலீட்டாளர் நிச்சயமற்றதன்மை. நிதிசார் சந்தை ஸ்திரமின்மை மற்றும் அதிகரித்த ஒழுங்குமுறை ஆய்வு என்பன இச் சரிவுகளுக்குப் பங்களித்தன.

எவ்வாறாயினும் பசுமை வயல் முதலீட்டுத் திட்டங்கள் பிரதானமாக உற்பத்தியில் கருத்திட்ட எண்ணிக்கையில் 2% அதிகரிப்புடன் வாக்குறுதியைக் காட்டியதுடன், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் கவனம் செலுத்தியது. இது 15% உயர்வைக் கண்டது. அபிவிருத்தியடைந்த நாடுகளில் புதிய கருத்திட்ட அறிவிப்புகள் 6% இனால் குறைந்தன.

எவ்வாறாயினும், வருமான குழுக்களுக்குள், அபிவிருத்தியடைந்த பொருளாதாரத்தில் 9% வெநேமு அதிகரிப்புடன், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான வெநேமு பாய்ச்சல்கள் 7% இனால் வீழ்ச்சியடைந்து ஐஅ$ 867 பிலி ஆகியது. அதேவேளை குஅநா கள் (LDCs) கணிசமாக 17% அதிகரிப்பைக் காட்டின. மேலும், 2023 இல் உலகளாவிய வெளிநாட்டு நேரடி முதலீடு (வெநேமு) பிராந்தியங்கள் முழுவதிலும் கலப்பு போக்குகளைக் காட்டின. கருத்திட்ட நிதியில் உலகளாவிய வீழ்ச்சி பிராந்தியத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியபோதும், பசுமை வயல் முதலீடுகளுடன் ஆசியா வலுவானதாக இருந்தது. இருந்தபோதும், அபிவிருத்தியடைந்துவரும் ஆசியாவிற்கான வெநேமு உட்பாய்ச்சல்கள் 8% இனால் வீழ்ச்சியடைந்து, உலகில் இரண்டாவது மிகப்பெரிய வெநேமு ஐப் பெறுகின்ற சீனா அடங்கலாக ஒரு சரிவைப் பதிவுசெய்து, ஐஅ$ 621 பிலி ஆகியது. மொறிற்றரானியாவிலுள்ள பாரிய பசுமை ஐதரசன் கருத்திட்டம் அடங்கலாக குறிப்பிடத்தக்க பசுமை வயல் அறிவிப்புகளுடன் ஆபிரிக்காவின் வெநேமு உட்பாய்ச்சல்கள் 3% இனால் வீழ்ச்சியடைந்தது. இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் என்பன குறைவான கருத்திட்ட அறிவிப்புகளை அனுபவம் செய்த அதேவேளை, அபிவிருத்தியடைந்துவரும் பிராந்தியங்களில் சர்வதேச கருத்தட்ட நிதி ஒப்பந்தங்கள் கால்வாசியால் வீழ்ச்சிகண்டன.

குறுக்கு எல்லை இ மற்றும் கை கள்
(பெறுமதி)



சர்வதேச கருத்திட்ட நிதி
(எண்ணிக்கை)



பசுமை வயல் திட்டங்கள்
(எண்ணிக்கை)



வருமான குழுக்கள்



பொருளாதாரங்கள் குழுவாக்கம் மற்றும் பிராந்தியங்களின்படி வெநேமு உட்பாய்ச்சல்கள்



மூலம்: UNCTAD. FDI/MME database www.unctad.org/fdistatistics

கைத்தொழில் போக்குகள் உட்கட்டமைப்பு மற்றும் எண்மின் பொருளாதாரத் துறைகளில் கீழ்நோக்கிய முதலீட்டுப் போக்கையும், ஆனால் உற்பத்தி மற்றும் ஆபத்தான கனிப்பொருட்கள் பலமான வளர்ச்சியையும் காட்டின. உதாரணத்திற்கு, வாகனம், மின்னணுவியல் மற்றும் இயந்திர சாதனங்கள் கைத்தொழில்கள் போன்ற உலகளாவிய பெறுமதி சங்கிலி-ஊக்குவிப்பு துறைகள், வழங்கல் சங்கிலி மறுசீரமைப்பு காரணமாக கணிசமான வளர்ச்சியை அனுபவம் செய்தன. அதற்கிடையே, ஆபத்தான கனிப்பொருட்கள் பிரித்தெடுத்தல் மற்றும் செயலாக்கங்களில் முதலீடானது கருத்திட்ட எண்ணிக்கைகள் மற்றும் பெறுமதிகள் இரண்டிலும் ஏறத்தாழ இரட்டிப்பாகின.

2023 இல் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்குப் (நிஅஇ - SDG) பொருத்தமான துறைகளில் முதலீடு சரிந்தது. புதுப்பிக்கத்தக்க சக்தி, வலு மற்றும் போக்குவரத்து என்பவற்றில் பசுமை வயல் கருத்திட்ட அறிவிப்புகளில் ஒரு வளர்ச்சி இருந்தபோதிலும், பெறுமதி அடிப்படையில், நிஅஇ கருத்திட்டங்களில் முதலீடுகள், பாரிய உட்கட்டமைப்பு கருத்திட்டங்களைப் பாதித்து. சர்வதேச கருத்திட்ட நிதியில் கீழ் நோக்கியதன் காரணமாக சரிவை ஏற்படுத்தின. குறுக்கு எல்லை இ மற்றும் கை விற்பனைகளிலும், பிரதானமாக சேவைத் துறையில், குறிப்பாக ததொதொ கடன்பட்டு, கணிசமான சரிவைக் காணக்கூடியதாக இருந்தது. இ மற்றும் கை விற்பனைகளின் எண்ணிக்கை பிரித்தெடுத்தல் மற்றும் வாகனங்கள் தவிர, அனைத்து துறை செங்குத்துகளிலும் கைவிடப்பட்டன.

2023 இல் முதலீட்டுக் கொள்கை நடவடிக்கைகள் பெரும்பாலும் முதலீட்டாளர்களுக்கு சாதகமாக இருந்தன. விசேஷமாக அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் நிர்வாக செயல்முறைகளை எளிதாக்கி அல்லது நெறிப்படுத்தி, ஊக்குவிப்புத் திட்டங்களை அறிமுகம்செய்து, முதலீட்டை ஊக்குவிப்பதற்கும், எளிதாக்குவதற்குமான பெரும்பாலான முயற்சிகளை மேற்கொண்டு, மிகவும் சாதகமான கொள்கை நடவடிக்கைகளின் 86% ஐப் பிரதிநிதித்துவப் படுத்தியது.

முதலீட்டாளர்களுக்கு கூடுதலான சாதகமான அளவின் பங்கு



முதலீட்டு ஊக்குவிப்புகளின் அறிமுகம் அல்லது விரிவாக்கமானது அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் இரண்டிலும் சேவைகள் துறை, புதுப்பிக்கத்தக்க சக்தி, சுத்தமான தொழில்நுட்பத்தையும், உயர் தொழில்நுட்ப உற்பத்தியையும் ஆதரிக்கும் உற்பத்தி கைத்தொழில்கள் என்பவற்றில் முதலீட்டை மேம்படுத்தலில் வளர்ந்துவரும் கவனத்துடன், விசேஷமான பொருளாதார வலயங்களுடன் தொடர்புடைய ஊக்குவிப்புகளையும், மற்றும் துறை சாந்த ஊக்குவிப்புகளையும் உள்ளடக்கி 2023 இல் முதலீட்டாளர்களுக்கு கூடுதல் சாதகமாக கொள்கை நடவடிக்கைகளின் மூன்றில் ஒன்றைப் பிரதிநிதித்துவப்படுத்தியது.

வகை வாரியாக மேலும் சாதகமான அளவுகள்



ஆனால் மாறாக, அபிவிருத்தி அடைந்த நாடுகளில் முதலீட்டாளர்களுக்கு கூடுதலாக சாதகமான கொள்கைகளின் முக்கியத்துவம் சரியத் தொடங்கி, மொத்த சாதகமான நடவடிக்கைகளில் 43% ஐ மாத்திரம் பிரதிநிதித்துவப்படுத்தின. அபிவிருத்தி அடைந்த நாடுகளில் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் அதிகரித்து, நுழைவு மற்றும் சிகிச்சை மற்றும் அறுவைச் சிகிச்சை என்பவற்றில் கட்டுப்பாடுகள் பின்பற்றப்பட்டன.

ஒழுங்குமுறை உரிமைகளுடன் முதலீட்டை எளிதாக்குதலை சமப்படுத்தும் நோக்கத்துடன், குறிப்பாக மிகவும் ஏழ்மையான நாடுகளின் அபாயங்களைக் குறைப்பதில், செயற்பாடுகள் மெதுவாக இருந்தபோதிலும், சர்வதேச முதலீட்டு ஒப்பந்தங்களின் சீர்திருத்தத்திற்கான முயற்சிகள் தொடர்கிறது.

2023 இல் அரைவாசிக்கும் குறைவான பாரம்பரிய இருதரப்பு ஒப்பந்தங்களுடன், 29 புதிய சர்வதேச முதலீட்டு ஒப்பந்தங்கள் (சமுஒ IIAs) முடிவுசெய்யப்பட்டன. அநேகமான புதிய ஒப்பந்தங்கள் முதலீட்டு ஏற்பாடுகளுடன் பரந்த பொருளாதார ஒப்பந்தங்களாக இருந்தன. புதிய ஒப்பந்தங்களில் முதலீட்டை எளிதாக்குதல் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி என்பன அடங்கலாக, பரந்த அளவிலான பிரச்சனைகளை ஒழுங்குபடுத்தி, உரிமையைப் பாதுகாப்பதற்கான அம்சங்களை உள்ளடக்கி சமுஒ ஆட்சியைச் சீர்திருத்துவதற்கான முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

இலங்கையை வெநேமு க்கு ஒரு கவர்ச்சியான இடமாக மேம்படுத்தல்

மேம்படுத்தல் அலுவல்கள்

4	வலைப்பக்கங்கள்
15	வசதியளிக்கும் நிகழ்ச்சிகள்
81	16 மெய்நிகர் மற்றும் 65 நேரில் கூட்டங்கள்
57	பிரதிநிதிகள் உள்முகம்
09	சென்றடையும் (outreach) பணிகள்
24	நிகழ்வுகளும் வர்த்தக மன்றங்களும்
398	நடாத்தப்பட்ட முவமை (IFC) விசாரணைகள்

ஊடக அலுவல்கள்

LinkedIn	Twitter	Facebook
25,000 + பின்பற்றுவோர்	3,000 + பின்பற்றுவோர்	1,500 + பின்பற்றுவோர்

2024 ஜனவரி 01 அளவில் மொத்த சமூக ஊடகங்களைப் பின்பற்றுவோர் - 29,500

பின்பற்று

2023 இல் புதிதாகப் பின்பற்றுவோர் - 11,480

பத்திரிகை வெளியீடுகள்	252
சமூக ஊடக மேடைக்காக முழுமையான தயாரிப்பு	22
45 வது ஆண்டு நிறைவு அனுபந்தம் அநிஇலி (ANCL) குழுவுடன் வெளிவந்தது	01

நாங்கள் பதிவுசெய்பவை

- ஒப்பந்தம் கைச்சாத்திடல்
- ஏற்றுமதிகள் சம்பந்தமாக இமுச தொழில்முயற்சிகளின் துறைவாரியான செயலாற்றுகை
- வலய மற்றும் தொழிற்சாலை விஜயங்களும், அந்தந்த செயற்பாடுகளும்
- நிகழ்வுகள், மன்றங்கள் கொண்டாட்டங்களில் இமுச பங்குபற்றுதல்
- இமுச இன் திறப்பு விழாக்கள் - ஒப்புதல் வழங்கிய தொழிற்சாலைகள்
- நஅஅ (UDA) இனால் ஒப்புதல் வழங்கிய அபிவிருத்தித் திட்டங்கள்
- தூதுவர்கள் உட்பட பிரபல்யமான நபர்களின் இமுச விஜயம்
- பங்குதாரர்களுடனான முக்கிய கூட்டங்கள்

இலங்கை முதலீட்டுச் சபை

வெளிநாட்டு நேரடி முதலீட்டை மேம்படுத்துவதற்கான இலங்கை அரசாங்கத்தின் கேந்திர முகவர்.
பயனர் பெயர் - Investin_SL

விசேட நிகழ்வுகள்

நாளொன்றுக்கு இரண்டு ட்வீட்களை (tweets) இடுதல்

இமுச இணையத்தளத்தின் கீழ் ஒரு கீச்சக காலவரிசையை ட்விட்டரை உட்புகுத்தல்

#InvestinSL பெயருடைய ஹாஷ்ரக் (hashtag)

வீடியோக்கள் உள்ளடங்கியதான ட்விட் இடுதல்

மேம்படுத்தல் அலுவல்கள்

2023 ஆம் ஆண்டின்போது இலங்கை முதலீட்டுச் சபை (இமுச) பல்வேறு மேம்படுத்தல் நடவடிக்கைகளை நிறைவேற்றியதுடன், இருதரப்பு மற்றும் பிராந்திய கூட்டங்கள், முதலீட்டாளர்களுக்கு வசதியளிக்கும் நிகழ்ச்சிகள், பங்குதாரர்களுடன் உறவுகளை வளர்த்தல், மேம்படுத்தல் நிகழ்வுகளில் பங்குபற்றியதுடன், ஒழுங்கமைத்தும், சென்றடையும் பணிகள் மூலமும் அதன் பொருளாதார இராஜதந்திரத்தைப் பலப்படுத்தியது. இமுச இன் சாதனைகள் அதன் முக்கிய பணியாக இலங்கையில் முதலீட்டினை மேம்படுத்துவதற்கான இடமாக, ஒரேயொரு மேம்படுத்தும் முகவராக இலங்கையின் தனித்துவமான பண்புகள், சாத்தியமான முதலீட்டு வாய்ப்புக்கள், முதலீட்டு காலநிலையில் புதுப்பிப்புகளை முன்னிலைப்படுத்தி, முன்னுரிமைத் துறைகளை இலக்குவைத்து, காட்சிப்படுத்துகிறது.

இருதரப்பு மற்றும் பிராந்திய கூட்டங்கள்

தாய்லாந்து - இலங்கை சுவஉ (FTA)

தாய்லாந்திலுள்ள இலங்கைத் தூதரகம் 2023 நவம்பர் 27 - 29 வரை தாய்லாந்து, பாங்கொக்கில் இலங்கை-தாய்லாந்து சுதந்திர வர்த்தக உடன்படிக்கை பேச்சுவார்த்தைகள் 8வது சுற்றை நிறைவு செய்வதற்கு, சர்வதேச வர்த்தக மேம்படுத்தல் திணைக்களம், இராஜரீக தாய் அரசாங்கத்தின் வர்த்தக அமைச்சு என்பவற்றுடன் சேர்ந்து வர்த்தகம் மற்றும் இலங்கையிலும், தாய்லாந்திலும் முதலீட்டுக்கான வாய்ப்பு சம்பந்தமான கருத்தரங்கு ஒன்றை ஒழுங்குசெய்தது. முதலீட்டு மேம்படுத்தல் நிறைவேற்றுப் பணிப்பாளர், நெருங்கிய கால முதலீட்டு முன்னுரிமை மற்றும் நீண்ட கால வளர்ச்சி மூலோபாயங்கள் என்பவற்றை முன்னிலைப்படுத்தி, இலங்கையின் பொருளாதார நிலைமை, மீட்பு மற்றும் எதிர்கால திட்டங்கள் பற்றி சமர்ப்பித்தார்.

தேசிய நிகழ்வுகள்

தரமான முதலீடுகளைக் கவர்வதில் மேலும் வாய்ப்புகளுக்காக சர்வதேச பொருளாதார ஒத்துழைப்பை வளர்க்கும் முயற்சியுடன், இலங்கையை நம்பிக்கைக்குரிய முதலீட்டுக்கான இடமாக மேம்படுத்துவதற்காகவும் இமுச இன் முக்கிய பங்குதாரர்களால் 2023 இன் முதல் மற்றும் மூன்றாவது காலாண்டில் பல்வேறு நிகழ்வுகள் தொடராக ஒழுங்குசெய்யப்பட்டது. ஒவ்வொரு நிகழ்வும் அலுவல்கள், உரையாடல், கூட்டுப்பங்குதாரர்களைக் கட்டியெழுப்புதல், முக்கிய துறைகளில் கலந்துரையாடல்களை எளிதாக்குதல், மற்றும் இலங்கையின் வளர்ச்சியின் சாத்தியம் என்பவற்றிற்கு ஒரு மூலோபாய தளமாக அமைந்தன.

இவகைச (FCCISL) - ரஷ்யா - இலங்கை பொருளாதார மன்றம் (24 ஜனவரி 2023)

இலங்கைக்கும், ரஷ்யாவிற்குமிடையே பொருளாதார உறவில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாக இந்த மன்றம் குறிப்பிடப்பட்டது. இது இலங்கையின் வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்தினால் ரஷ்யாவிலுள்ள இலங்கைத் தூதரகம், வெளிவிவகார அமைச்சின் பொருளாதார விவகாரங்கள் பிரிவு, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை என்பவற்றுடன் இணைந்து ஒழுங்குசெய்யப்பட்டது. இந்த நிகழ்வின்போது ரஷ்ய பிரதிநிதிகளுக்கு இமுச இன் தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகத்துடன் பயனுள்ள கலந்துரையாடல் மேற்கொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டது. அதன்படி, இந்த நிகழ்வானது பங்குதாரர்களுக்கு இரண்டு நாடுகளிலிருந்தும் இருதரப்பு வர்த்தகம், முதலீடு மற்றும் ஒத்துழைப்பு என்பவற்றிற்கான வழிகளை ஆராய்வதற்கு ஒரு சுறுசுறுப்பான அரங்கத்தை வழங்கியது.

இலங்கை சுத்தமான சக்தி உச்சிமாநாடு (27 மார்ச் 2023)

புதுப்பிக்கத்தக்க சக்தி மற்றும் நிலைபேறானதன்மை என்பவற்றிற்கான இலங்கையின் பொறுப்பை வலியுறுத்தி, சுத்தமான சக்தி உச்சிமாநாடு 27 மார்ச் 2023 இல் நடத்தப்பட்டது. இது, கைத்தொழில் தலைவர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் புதிய கண்டுபிடிப்பாளர்களை சுத்தமான சக்தி அபிவிருத்தி மற்றும் முதலீட்டுக்கான வழிகளை ஆராய்வதற்காக ஒன்று சேர்த்தது. ஜனாதிபதி கௌ. ரணில் விக்ரமசிங்கவின் தொலைநோக்கு தலைமைத்துவத்தின் கீழ் இலங்கையின் சுத்தமான சக்தி மாற்றத்தை ஒரு பலமான, வெளிப்படையான, மற்றும் முதலீட்டாளர் நட்பு கொள்கை ஆட்சி மூலம் துரிதப்படுத்தும் அதேவேளை, சுறுசுறுப்பான, மீள்தன்மையுடைய வணிக நட்புடைய கொள்கை மற்றும் ஒழுங்குமுறை சூழல் என்பன ஏற்படுவதை நோக்கி, முக்கிய கொள்கை சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இமுச இன் முதலீட்டு மேம்படுத்தல் நிறைவேற்றுப் பணிப்பாளர் இந் நிகழ்விற்கு இலங்கை மத்திய வங்கி, இலங்கை மின்சார சபை மற்றும் சுற்றாடல் அமைச்சு என்பவற்றைப் பிரதிநிதித்துவம் செய்த அதிகாரிகளுடன் சமூகமளித்தார்.

ஏஎச்கே ஸ்ரீலங்காவும் ஜெர்மன் பிரதிநிதிகளும் (24 ஏப்ரல் 2023)

ஏஎச்கே ஸ்ரீலங்காவின் பிரதான பிரதிநிதி Ms. மேரி அந்தோனியா வொன் ஷொன்பர்க்கின் தலைமையில் ஏஎச்கே இன் பெருநிறுவன விவகாரங்கள்/ஏற்றுமதி மேம்படுத்தல் பிரிவு தலைவர் திரு மலிந்த கஜநாயக்க மற்றும் கென்ரினென்ரல், ஹபாலே, லிண்டே (சிலோன் ஒக்ஸிஜின்), எஸ்கிமோ பஷன், க்ரம்ஸ்கி, ஏ அன்ட் ஆர் பஷன், லங்கா லெதர் பஷன், மற்றும் போகல க்ரபைற் நிறுவனங்களின் பிரதிநிதிகள் அடங்கலாக சில ஜெர்மன் முதலீட்டாளர்கள் இமுச தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகத்தை ஏப்ரல் 24, 2023 சந்தித்தனர். இமுச இன் சாலை வரைபடத்தையும், புதிய ஜெர்மன் வெநேமு களுக்கான வாய்ப்புக்களையும், தற்போதைய முதலீட்டாளர்களுக்கான விரிவாக்கங்களையும் புரிந்துகொள்வதே பிரதானமான நோக்கமாக இருந்தது.

மெசேகஇச (ஸ்லாஸ்கொம் - SLASSCOM) தேசிய கூர்மதி விருதுகள் (16 ஜூன் 2023)

மென்பொருள் மற்றும் சேவைகள் கம்பனிகளின் இலங்கை சங்க தேசிய கூர்மதி விருதுகள் இலங்கை முழுவதிலுமுள்ள பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், மற்றும் கம்பனிகளிலிருந்து சிறந்த திறமை மற்றும் சாதனைகளை அடைந்த தனிநபர்கள் மற்றும் குழுக்களுக்கு வழங்கப்பட்டன. விருதுகள் “சிறந்த வாடிக்கையாளர் விநியோக புதிய கண்டுபிடிப்பு”, “புதிய தொடக்கம்”, “சிறந்த இடையூறு விளைவிக்கும் உற்பத்தி கண்டுபிடிப்பு”, மற்றும் “ஆண்டின் பெண் தொழில்முயற்சியாளர்” என்பன அடங்கலாக பல்வேறு வகைகளை உள்ளடக்கியிருந்தது. இலங்கையின் ததொ மற்றும் வசெவெ கைத்தொழிலானது உலகளாவிய ரீதியில் வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்யும் ஒரு முக்கிய ஏற்றுமதித் துறையாகும். புதிய கண்டுபிடிப்புகள் இந்த விருது வழங்குவதில் முக்கிய பங்கு வகிப்பதுடன், இந்த விருதுகள் இக் கைத்தொழிலில் மேலும் தனிநபர்களையும், கம்பனிகளையும் தொடர்ந்து அவர்களுடைய எண்ணக்கருக்கள், செயல்முறைகள், மற்றும் உற்பத்தியில் தூண்டுதல்செய்து, சிறந்த இலங்கைப் படைப்பாற்றலை முன்னிலைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டதாகும். இலங்கை முதலீட்டுச் சபையானது இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் (ICTA), மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி சபை என்பவற்றுடன் இணைந்து, தேசிய பங்குதாரர் நிறுவனமாக இந்த நிகழ்விற்கு ஆதரவு வழங்கியது.

பிரான்சு வணிக பிரதிநிதிகள் (3 நவம்பர் 2023)

ஜீன் அலெக்ஸான்றா EGEA, இலங்கைக்கான பிரான்ஸ் தூதரக பொருளாதார ஆலோசகர் தலைமையில் பிரான்ஸ் வணிக பிரதிநிதிகள் 3 நவம்பர் 2023 இல் இமுச க்கு விஜயம் செய்து, பணிப்பாளர் நாயகம் மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளர் (முதலீட்டு மேம்படுத்தல்) ஆகியோரைச் சந்தித்தனர். கலந்துரையாடல் சக்தி, விமான போக்குவரத்து, சவமை (ITC), உயர் தொழில்நுட்பம் மற்றும் 4.0 கைத்தொழிலை அடிப்படையாகக்கொண்ட துல்லியமான உற்பத்தி என்ற பல்துறைகளில் முதலீட்டுக்கான வாய்ப்புக்களைத் தேடும் அடிப்படையில் இருந்தது.

மெசேகஇச (SLASSCOM) வசெவெ உச்சிமாநாடு (டிஸம்பர் 2023)

உச்சிமாநாடு, கைத்தொழில் தலைவர்கள், நிபுணர்கள் மற்றும் பங்குதாரர்களுக்கு இக் கைத்தொழிலின் எதிர்கால திசையையிட்டுக் கலந்துரையாட ஒரு முக்கிய தளத்தை அமைத்துக்கொடுத்து, இலங்கையின் ததொ/வசெவெ துறையின் விரைவான வளர்ச்சியையும், முக்கியத்துவத்தையும் முன்னிலைப்படுத்தியது. இந்த குழுவின் கலந்துரையாடலில் ததொ/வசெவெ கைத்தொழிலின் வெற்றி மற்றும் நிலைபேறானதன்மை என்பவற்றிற்கான முக்கிய பண்புகள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், உலகளாவிய வசெவெ நிலப்பரப்பில் இலங்கையின் பங்கு, இலங்கை முதலீட்டுச் சபையின் முதலீட்டு மேம்படுத்தல் நிறைவேற்றுப் பணிப்பாளர் மற்றும் ஏனைய பல கைத்தொழில் நிபுணர்களின் அம்சங்களும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

சர்வதேச நிகழ்வுகள்

சமா 28 (COP 28) உலக காலநிலை உச்சிமாநாடு (30 நவம்பர் 2023)

2023 ஐக்கிய நாடுகள் காலநிலை மாற்றம் மகாநாடு (சமா 28) காலநிலை மாற்ற நெருக்கடி பற்றி உரையாடி, வெப்ப அதிகரிப்பை மட்டுப்படுத்தி, 2050 அளவில் நிகர-பூஜ்ய உமிழ்வுகளை அடைவதற்கான வழிகளுக்கு உடன்படுவது பற்றி உரையாடுவதற்காக ஐக்கிய அரபு எமிறேற்ஸில் நடத்தப்பட்டது. இலங்கை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க காலநிலை சம்பந்தமான ஆய்வு மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றத்தை நோக்கமாகக் கொண்ட சர்வதேச காலநிலை மாற்ற பல்கலைக்கழகம் பற்றிய தனது இலட்சிய திட்டத்தை வெளியிட்டார். 2022 இல் எகிப்தில் நடந்த சமா 27 இன்போது ஜனாதிபதி விக்ரமசிங்கவினால் ஆரம்பத்தில் முன்மொழியப்பட்ட இந்த முன்முயற்சி ஏற்கனவே அமுலுக்கு வந்துள்ளது. பல்கலைக்கழகத்திற்காக மத்திய மாகாணத்தில் நுவரெலியா மாவட்டத்தில் 600 ஏக்கர் காணியை அரசாங்கம் நியமித்துள்ளதைப் பார்த்துள்ளார்கள். துபாயில் சமா 28 இலான அறிவிப்பு எண்ணற்ற சர்வதேச பங்குதாரர்களால் உற்சாகத்துடன் வரவேற்கப்பட்டது. பசுமையான வெநேமு ஐக் கவர்வதற்கான வாய்ப்புகளை ஆராய்வதற்காக சிரேஷ்ட பதில் பணிப்பாளரும் (சூழல்), பிரதிப் பணிபாளாரும் (முதலீட்டை மேம்படுத்தல்) இந் நிகழ்ச்சியில் இமுச யைப் பிரதிநிதித்துவம் செய்தார்கள்.

வெளிநோக்கிய பணிகள்

இலக்குவைத்த நாடுகளிலிருந்து மேலும் இலாபகரமான முதலீடுகளைக் கவர்வதற்காக. வெளிநாடுகளிலுள்ள சாத்தியமான முதலீட்டாளர்களோடு நேரடியாக ஈடுபடுவதற்காக இமுச அதிகாரிகள் எண்ணற்ற வெளிநாட்டு பணிகளில் இறங்கியுள்ளார்கள். இது இலங்கையின் முதலீட்டு வாய்ப்புக்கள், வணிக காலநிலை, ஒருவர் மீது ஒருவர் மூலம் முதலீட்டு அலுவல்களில் போட்டியான அனுகூலங்கள் என்பவற்றை இமுச காட்சிப்படுத்துவதற்கு இடமளிக்கும். இந்தத் தனிப்பட்ட தொடர்பானது நம்பிக்கையை உருவாக்குவதுடன், வருங்கால முதலீட்டாளர்களிடையே ஆர்வத்தை அதிகரிக்கச் செய்கிறது.

சவுதி - இலங்கை இணைந்த செயற்குழு (21-23 மே 2023)

2003 இல் கைச்சாத்திடப்பட்ட கட்டமைப்பு ஒப்பந்தத்தின் கீழ் உருவாக்கப்பட்ட இலங்கை -சவுதி இணைந்த ஆணைக்குழுவின் முதலாவது அமர்வு 21 - 23 மே 2023 சவுதி அரேபியா, றியாட்டில் நடாத்தப்பட்டது. இலங்கைத் தூதுக்குழுவில் பங்குபற்றிய சிரேஷ்ட அதிகாரிகள் வெளிவிவகார அமைச்சு, சுகாதார அமைச்சு, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, கல்வி அமைச்சு, முதலீட்டை மேம்படுத்தல் அமைச்சு, தொழில்நுட்ப அமைச்சு மற்றும் கொழும்பு துறைமுக பொருளாதார ஆணைக்குழு என்பவற்றிலிருந்து அடங்குவர். இந்த விஜயத்தின்போது இரு நாடுகளுக்குமிடையே பரஸ்பர நலன் பற்றிய விடயங்களை ஆராய்ந்து, கலந்துரையாடுவதற்கான ஒரு தளத்தை அமைத்துக்கொடுக்கும் நோக்கத்துடன், இரு நாட்டு வெளிவிவகார அமைச்சுக்களுக்கும் இடையே ஒரு புஒ (MoU) கைச்சாத்திடப்பட்டது.

தெற்கு ஆசியா மற்றும் தென்கிழக்கு ஆசியா வணிக தலைவர்கள் உச்சிமாநாடு (27 - 29 ஜீன் 2023)

“தசாப்தத்தின் வாய்ப்புக்களைப் பகிர்ந்து, பிராந்தியத்தின் செழுமையை உருவாக்குங்கள்” என்ற கருப்பொருளில் தெற்கு ஆசியா மற்றும் தென்கிழக்கு ஆசியா வணிக தலைவர்கள் உச்சிமாநாடு 27 - 29 ஜீன் 2023 வரை நடைபெற்றது. உச்சிமாநாடு, பெல்ட் மற்றும் சாலை முயற்சி (BRI), செங்டு-சொங்கிங் இரட்டை நகர பொருாதார வட்டம், பிவிபொப (RCEP) உடன்படிக்கை மற்றும் புதிய மேற்கு நிலம்-கடல் தாழ்வார கட்டுமானம் (New Western Land-Sea Corridor construction) போன்ற முக்கிய வாய்ப்புக்களில் கவனம் செலுத்தி, இருதரப்பு மற்றும் பலதரப்பு பொருளாதாரம் மற்றும் வர்த்தக ஒத்துழைப்பு பற்றி ஆராய்ந்தது. சினாவிற்கும், தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் ஒத்துழைப்பானது ஆழமான பொருளாதார மற்றும் வர்த்தக பரிமாற்றத்திற்கான ஆதரவை ஏற்படுத்தியுள்ளது.

சீனாவில் முதலீடு, வர்த்தகம் மற்றும் சுற்றலா மன்றம் (16 அக்டோபர் 2023)

அக்டோபர் 16, 2023 இல் சீனாவில் முதலீடு, வர்த்தகம் மற்றும் சுற்றலா மன்றம் என்ற முக்கிய நிகழ்வில் இமுச தலைவரும், முதலீடு மேம்படுத்தல் நிறைவேற்றுப் பணிப்பாளரும் எதிர்கால வாய்ப்புக்களை வளர்த்தல், வெளிப்பட்டுக் கொண்டிருக்கும் பசுமை மற்றும் எண்மின் பொருளாதார முயற்சிகள் என்ற இக் களத்தில் தேசத்தின் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை முன்னிலைப்படுத்தி, ஒரு மூலோபாய மையமாகப் பார்க்கும்படி சீன முதலீட்டாளர்களை ஊக்குவித்தல் என்பவற்றில் வலுவான கவனம் செலுத்தி, மன்றத்தில் கலந்துகொண்டனர். இந்த மன்றமானது பெருமளவு சீன கம்பனிகளின் பிரதிநிதிகளினது பிரசன்னத்தால் சிறப்படைந்தது. இக் கம்பனிகளில் சில ஏற்கெனவே இலங்கையில் முதலீடு செய்துள்ளன. ஏனையவை முதலீட்டுக்கான வாய்ப்புக்களை ஆராய்கின்றவையாகும்.

சர்வதேச மன்றங்களில் பங்குபற்றல்

ஐக்கிய நாடுகள் ஆசிய பசுபிக் புதிய கண்டுபிடிப்பு மன்றம்: ஸியாமென், சீனா

முதலீடு மற்றும் வர்த்தகத்திற்கான சீன சர்வதேச கண்காட்சியின்போது சீனாவில் ஸியாமெனிலுள்ள ஸியாமென் சர்வதேச மாநாடு மற்றும் கண்காட்சி நிலையத்தில் 9 செப்டெம்பர் 2023 அன்று நிலைபேறான அபிவிருத்திக்கு எண்மின் பொருளாதாரத்தில் வெநேமு ஐ அதிகரித்தல் என்ற ஐக்கிய நாடுகள் ஆசிய பசுபிக் புதிய கண்டுபிடிப்பு மன்றம் நடைபெற்றது.

இந்த மன்றமானது ஆசியா மற்றும் பசுபிக்கிற்கான ஐக்கிய நாடுகள் பொருளாதார மற்றும் சமூக ஆணையம் (எஸ்கப் - ESCAP) மற்றும் ஆசிய பசுபிக் புதிய கண்டுபிடிப்பு மன்றத்தின் இரண்டாவது மறுசெய்கையான முதலீட்டை மேம்படுத்தும் முகவர்களின் உலக சங்கமும் இணைந்து ஒழுங்குசெய்யப்பட்டதாகும். இரண்டுமே எஸ்கப் கருத்திட்டமான "நிலையான அபிவிருத்தி இலக்குகள் மீதான முன்னேற்றத்தைத் துரிதப்படுத்துவதற்கு விஞ்ஞானம், தொழில்நுட்பம், மற்றும் புதிய கண்டுபிடிப்பு கொள்கைகளைப் பயன்படுத்தி, ஆசிய-பசுபிக் நாடுகளின் திறனைக் கட்டியெழுப்புதல்" க்கு முக்கிய வழங்கல்களாக இருந்ததுடன், சீனா அரசாங்கத்தினால் நிதி வழங்கப்பட்டது.

இமுச பணிப்பாளர் நாயகம் எண்மின் வணிகத்திலிருந்து வெநேமு ஐ மேம்படுத்தல் என்ற 3 வது அமர்வைத் தொடர்ந்து, பார்வையாளர்களுடனான கலந்துரையாடல்/கே ப (Q&A) அமர்வில் பங்குபற்றினார். எண்மின் வணிகங்களை மேம்படுத்துவதற்கு எவ்வாறு வெநேமு ஐப் பயன்படுத்த முடியும், இத் துறையில் வெநேமு ஐக் கவர்வதற்கு இலங்கை பயன்படுத்தும் மூலோபாயங்கள், எண்மின் வெநேமு ஐக் கவர்வதற்கு இலங்கையிலுள்ள முதலீட்டு வாய்ப்புக்கள், இது சம்பந்தமான சவால்களை எவ்வாறு தாண்டுவது என்பவற்றில் இவ்வமர்வில் கவனம் செலுத்தப்பட்டது.

வர்த்தகம், முதலீடு, தொழில்முயற்சி மற்றும் வணிக புதிய கண்டுபிடிப்புகள் பற்றிய குழு - யுனெஸ்கப் (UNESCAP)

வர்த்தகம், முதலீடு, தொழில்முயற்சி மற்றும் வணிக புதிய கண்டுபிடிப்புகள் பற்றிய குழுவின் ஆரம்ப அமர்வு பாங்கொக்கிலுள்ள ஐக்கிய நாடுகள் மாநாட்டு நிலையத்தில் 22 - 24 பெப்ரவரி 2023 வரை இடம்பெற்றது. இக் காலத்தில் முதலீட்டை மேம்படுத்துவதுடன், நிலைபேறான அபிவிருத்திக்கு வசதியளித்தல் என்ற நோக்கத்துடன் பல்வேறு நிகழ்வுகளை ஒருங்கிணைப்பதற்காக முதலீட்டை மேம்படுத்தும் முகவர்களின் உலக சங்கத்துடன் (வைப்பா - WAIPA) எஸ்கப் ஆனது ஒத்துழைத்தது. இந்த நிகழ்வுகளானது பிராந்திய முதலீட்டு மேம்படுத்தல் முகவர்களின் ஒன்றுகூடல் ஒன்று, நிலைபேறான அபிவிருத்தி மற்றும் எண்மின் பொருளாதார முதலீடு என்பவற்றிற்கான முதலீட்டு மேம்பாட்டை அதிகரித்தல் என்பதில் கவனம் செலுத்தி இரண்டு செயலமர்வுகள், ஆசிய பசுபிக்கில் எண்மின் பொருளாதாரத்தில் வெநேமு ஐ மேம்படுத்துவது பற்றிய யுனெஸ்கப் கொள்கை வழிகாட்டி நூல் திரைநீக்கம் ஆகிய பல்வேறு செயற்பாடுகளை உள்ளடக்கியிருந்தது. தொடர்ந்து வர்த்தகம், முதலீடு, வணிக கண்டுபிடிப்பு பற்றிய அமர்வில் அரசுகளுக்கிடையேயான குழு நிஅஇ களுக்காக (SDGs) முதலீட்டைத் திரட்டுவதில் கவனம் செலுத்தியது. யுனெஸ்கப் மற்றும் வைப்பா விற்கு இடையேயான ஒத்துழைப்பானது ஆசிய பசுபிக் நாடுகள் முழுவதிலும் முதலீட்டு மேம்பாட்டு முகவர்களிடையே பேச்சுவார்த்தையை வளர்த்தல், நிலைபேறான அபிவிருத்திக்காக வெநேமு ஐ மேம்படுத்துவது பற்றிய நுண்ணறிவு பரிமாற்றத்திற்கு வசதியளித்தல் மற்றும் எண்மின் பொருளாதாரத்தில் வெநேமு ஐ மேம்படுத்தலுடன் காலநிலை மாற்றத்தைத் தெரிவிப்பதற்கான திறன்களை வளர்த்தல் என்பவற்றில் கவனம் செலுத்தியது. இந்த சர்வதேச ஒன்றுகூடலின்போது இமுச இலிருந்து நிறைவேற்றுப் பணிப்பாளர் (ஆய்வு மற்றும் கொள்கை பரிந்துரைத்தல்), முதலீட்டின் தாக்கத்தைத் திரட்டுதலுடன் நிலைபேறான அபிவிருத்திக்கான வெளிநாட்டு நேரடி முதலீடு மற்றும் நிலைபேறான அிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சிநிரல் அமுல்படுத்தல் என்பனவற்றில் கவனம் செலுத்தி, நாட்டு அறிக்கையை வழங்கினார்.

சர்வதேச ஒப்பந்த பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றல்

SLTFTA

இலங்கை தாய்லாந்து சுதந்தர வர்த்தக உடன்படிக்கை

இலங்கை தாய்லாந்து சுதந்திர வர்த்தக உடன்படிக்கையானது (SLTFTA) செப்டம்பர் 2018 க்குப் பின்னர் நான்கு வருட இடைவெளிக்குப் பின் ஜனவரி 2023 இல் மீண்டும் தொடங்கியதுடன், 2023 இல் ஏழு சுற்று பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று, டிஸம்பர் 2023 இல் சுவஉ (FTA) நிறைவுபெற்று, 2024 பெப்ரவரி 3ஆம் திகதி இரண்டு நாடுகளுகளுக்குமிடையே கைச்சாத்திடப்பட்டது. இதாசுவஉ ஆனது பொருட்களில் வர்த்தகம், சேவைகளில் வர்த்தகம், சுங்க மற்றும் பொருளாதார கூட்டுறவு, புலமைச்சொத்து, தோற்ற விதிகள், மற்றும் சுகாதாரம், தாவரங்கள் சம்பந்தமான நோய்கள் அடங்கலாக இலங்கையால் கைச்சாத்திடப்பட்ட இரண்டாவது விரிவான வர்த்தகம் பற்றிய சகல அம்சங்களையும் உள்ளடக்கியதான சுவஉ என்பது குறிப்பிடத்தக்கது.

இமுச இன் பணிப்பாளர் நாயகம் அமைச்சரவையால் நியமிக்கப்பட்டு, தேசிய வர்த்தக பேச்சுவார்த்தைகளில் குழுவில் அங்கத்தவராக இருப்பதுடன், முதலீடு மீதான பணிக்குழுத் தலைவராகவும் உள்ளார். அத்துடன், சேவைகளில் வர்த்தகம் மற்றும் தோற்ற விதிகளின் பணிக்குழுக்களில் இமுச அதன் பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருந்தது.

SL - India ETCA

இலங்கை இந்தியா பொருளாதார மற்றும் தொழில்நுட்ப கூட்டுறவு உடன்படிக்கை/இலங்கை இந்தியா இருதரப்பு முதலீட்டு ஒப்பந்தம்

இலங்கை இந்தியா பொருளாதார மற்றும் தொழில்நுட்ப கூட்டுறவு உடன்படிக்கை (இ-இந்தியா பொதொகூஉ) 2018 இல் 11 வது சுற்று கலந்துரையாடலிலிருந்து மீண்டும் ஆரம்பித்து, 12 வது சுற்று பேச்சுவார்த்தை இலங்கையில், கொழும்பில் அக்டோபர் 2023 இல் நடைபெற்றது. சேவைகளில் வர்த்தகம் மற்றும் தோற்ற விதிகளின் பணிக்குழுக்களில் இமுச அதன் உத்தியோகபூர்வமான பிரதிநிதித்துவத்தைக் கொண்டுள்ளது.

சமாந்தரமாக பேச்சுவார்த்தைக் குழு, பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் இரு நாடுகளுக்குமிடையேயான இருதரப்பு முதலீட்டு ஒப்பந்தம் (இமுஒ - BIT) மீதான ஆரம்ப கலந்துரையாடல்களை டிஸம்பர் 2023 இல் மீள ஆரம்பித்தது.

TIFA

14 வது ஐஅநா-இலங்கை வர்த்தக மற்றும் முதலீட்டு கட்டமைப்பு உடன்படிக்கை (TIFA) சபைக் கூட்டம்

ஐக்கிய அமெரிக்காவும், இலங்கையும் 14 வது வர்த்தக மற்றும் முதலீட்டு கட்டமைப்பு உடன்படிக்கை (TIFA) சபைக் கூட்டத்தை செப்டம்பர் 2023 இல் கொழும்பில் கூடியது. தொழில்நுட்ப-மட்டக் கூட்டமானது வர்த்தகம், முதலீடு, சுங்கம், தொழில், புலமைச்சொத்து, விவசாயம், மற்றும் ஏனைய பொருத்தமான துறைகளைச் சார்ந்த நிபுணத்துவம்பெற்ற உத்தியோகத்தர்கள் அடங்கலாக இரு நாடுகளின் பிரதிநிதிகளைப் பிரதிநிதித்துவம் செய்தது. கூட்டத்தின்போது இரு நாடுகளும் பரந்த அளவிலான இருதரப்பு வர்த்தகம், மற்றும் முதலீடு சம்பந்தமான தலைப்புகளை மறுபரிசீலனை செய்தன. முதலீட்டு காலநிலையைப் பாதிக்கும் கொள்கைகள், அண்மைக்கால தொழிலாளர் சீர்திருத்தங்கள், புலமைச்சொத்து பாதுகாப்பு மற்றும் அமுல்படுத்தல், சுங்க மற்றும் வர்த்தக வசதியளித்தல், வர்த்தகம் மீதான தொழில்நுட்பத் தடைகள், தைத்த ஆடைகள், இரத்தினக் கற்கள், ஆபரணங்கள் மற்றும் விவசாயப் பொருட்களை அணுகுவதற்கான சந்தை என்பன இதில் அடங்கலாகும்.

இரு சாராரும் இலங்கையில் வெளிநாட்டு நேரடி முதலீட்டுக்கான (வெநேமு) ஒப்புதல் வழங்குதலில் வெளிப்படைத்தன்மை மற்றும் செயல்திறன், நேர்மையற்ற தன்மைக்கு பலமான எதிரான நடவடிக்கைகள் என்பன உள்நாட்டு பொருளாதார வளர்ச்சிக்கும், வெநேமு ஐக் கவர்வதற்கும் உதவும் மிகவும் அவசியமான நடவடிக்கைகள் என்பதை இனங்கண்டு, அவற்றின் முக்கியத்துவம் பற்றி வலியுறுத்தின. பணிப்பாளர் நாயகமும், நிறைவேற்றுப் பணிப்பாளரும் (ஆய்வு மற்றும் கொள்கை பரிந்துரைத்தல்) இந் நிகழ்வின்போது இலங்கை முதலீட்டுச் சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தி, இருதரப்பு கலந்துரையாடல்களில் பங்களித்தனர்.

சர்வதேச பங்குதாரர்களுடன் பணியாற்றல்

சஅஜஐநாமு (USAID) உடன் ஒத்துழைப்பு

சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகள் முகவர் பல்வேறு மூலோபாயங்கள் மூலம் செழிப்பை அதிகரித்தல், முன்னேற்றம் அடங்கலான பொருளாதார வளர்ச்சி, வெளிநாட்டு நேரடி முதலீட்டை (FDI) வலுவூட்டல், நாட்டின் வள மீள்எழுச்சியை அதிர்ச்சி மற்றும் அழுத்தத்திற்கு எதிராக பலப்படுத்துதல் என்பவற்றிற்காக பாட்னர் (PARTNER) திட்டத்துடன் (வர்த்தகம், தேசிய செலவினம் மற்றும் வருமானம் என்பவற்றின் முடிவுகளைத் துரிதப்படுத்துவதற்கான பங்குதாரர்) ஒத்துழைத்தது. டிலொயிற்றி கென்சல்ரன்ஸி எல்எல்சீ (Deloitte Consultancy LLC) இந்த முன்முயற்சி இலங்கையில் அமுல்படுத்துவதை மேற்பார்வை செய்கிறது. இந்த முயற்சியின் ஓர் அங்கமாக யூஎஸ்எயிட் (USAID) ஆனது இலங்கை முதலீட்டுச் சபைக்கு (இமுச) தொழில்நுட்ப உதவி மற்றும் முதலீட்டு மேம்படுத்தல், முதலீட்டுக்கு வசதியளித்தல், முதலீடு சம்பந்தமான ஆய்வு மற்றும் கொள்கை பரிந்துரைத்தல் போன்ற துறைகளில் திறனைக் கட்டியெழுப்புதல் என்பவற்றை வழங்குவதற்கு உறுதியளித்துள்ளது.

ஐநாஅறி (UNDP) உடன் அலுவல்

முதலீட்டிற்கு வசதியளித்தலைத் விரைவாக்கல் மற்றும் வணிகம் செய்வதை இலகுவாக்குவதை செம்மைப்படுதல் என்பவற்றின் அவசியத்தை உணர்ந்து, இலங்கை முதலீட்டுச் சபையானது (இமுச) ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சியின் (ஐநாஅறி) ஆதரவை நாடியுள்ளது. மேலும் விரைவாக சேவையை வழங்குவதற்காக முதலீட்டாளர் செயற்பாடுகளை ஒழுங்குமுறை செயற்பாடுகளால் மேம்படுத்துவதன் மூலம் செயற்பாட்டை நெறிப்படுத்துவதே இதன் நோக்கமாகும். முதலீட்டு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துதற்கு ஒப்புதல் கடிதங்களை வழங்குதல் அடங்கலாக இமுச இன் ஒப்புதல் நடவடிக்கையை எண்மின்மயமாக்கல் உள்ளிட்ட ஏனைய முயற்சிகளுடன், முதலீட்டாளர்கள் மற்றும் சட்டத் துறை சார்ந்தவர்களுக்கு வசதியளிப்பதற்காகவும், உலகளாவிய தரத்திற்கு இணையாக இமுச உம். ஐநாஅறி உம் கூட்டாக மாதிரி ஒப்பந்தங்களைத் தொகுக்கும் வேலையைச் செய்கின்றன. அத்துடன், இமுச உத்தியோகத்தர்களுக்கு மாற்று சர்ச்சை தீர்க்கும் வழிமுறைகள் அடங்கலாக. சர்வதேச முதலீட்டு நடைமுறைகள் மற்றும் சர்ச்சை தீர்க்கும் வழிமுறைகள் பற்றி பயிற்சி வழங்குவதற்காக திறனைக் கட்டியெழுப்பும் முயற்சிகளுக்கான நடவடிக்கைகளும் இடம்பெற்று வருகின்றன.

யுனெஸ்கப் (UNESCAP) உடன் ஒத்துழைப்பு

இமுச இன் செயற்பாடுகளின் திறனை மேம்படுத்துவதையும், நிறுவன திறனை அதிகரிப்பதையும் நோக்கமாகக்கொண்டு, நிபுணத்துவமான தொழில்நுட்ப அறிவையும், திறன் மேம்பாட்டு முயற்சிகளையும் வழங்கி, இலங்கைக்கும், இமுச க்கும் உதவுவதாக யுனெஸ்கப் உறுதிசெய்துள்ளது. இந்த ஒத்துழைப்பின் ஒரு அங்கமாக இமுச இற்கு ஒரு மேம்படுத்தும் யுக்தியை அபிவிருத்தி செய்வதற்காக யுனெஸ்கப் தொழில்நுடப உதவியை வழங்கிவருகிறது. இது எண்மின் வெளிநாட்டு நேரடி முதலீட்டை (வெநேமு) மேம்படுத்தவதற்கான முன் முயற்சியை உள்ளடக்கியதாகும். இந்த ஆதரவானது எண்மின் வெநேமு ஐக் கவர்வது மற்றும் முதலீட்டு மேம்பாட்டு செயற்பாடுகளை எண்மின்மயப் படுத்தலுக்கான தொழில்நுட்ப மூலோபாயங்களை உள்ளடக்கியதாகும். மேலும், இந்தத் துறையில் இமுச இன் திறன்களை மேம்படுத்துவதற்காக யுனெஸ்கப் ஆனது சர்வதேச முதலீட்டு உடன்படிக்கை பேச்சுவார்த்தைகள் பற்றிய திறனைக் கட்டியெழுப்பும் அமர்வுகளை இலகுவாக்குகிறது.

எங்களுடைய முதலீட்டாளர்களிடமிருந்து கேட்பதற்கு





திரு ரோலன்ட் கார்ல் ஷியூப்

தலைவர்/முகாமைத்துவப் பணிப்பாளர்
ஆர்கேஎஸ் லங்கா தனி. லிமி.

கிராம்ஸ்கி லங்கா வைச் சேர்ந்த ஜெர்மனியிலிருந்து இலங்கையில் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள திரு கிராம்ஸ்கி, நாட்டில் ஒரு வெள்ளி ஆபரணங்களை உற்பத்தி செய்யும் இயந்திரத்தை நிறுவும்படி என்னை உற்சாகப்படுத்தினார். நான் 1998 இல் வந்து, இரண்டு வாரங்களுக்குள் கட்டுநாயக்க ஏசெவ இல் விரைவில் ஒரு பொருத்தமான காணியை இனங்கண்டு கொண்டேன். ஆறு வாரங்களுக்குள், முழு நடவடிக்கையும், காணியைக் கண்டுபிடித்து, தொழிற்சாலையை ஆரம்பிப்பது என்பது குறிப்பிடத்தக்க திறமையாகும். செயற்பாடுகள் ஒளிவு மறைவின்றி இருந்தன. அத்துடன் நான் ஸ்தாபித்து, உற்பத்தி செயல்முறையை நெறிப்படுத்தி, எனது இலக்கை அடைவதற்கு சம்பந்தப்பட்ட எல்லோரிடமிருந்தும் எனக்குக் கிடைத்த ஆதரவு பாராட்டத்தக்கதாகும்.

எங்களுடைய தொழிற்சாலை அன்பிற்கினியவர்களின் சாம்பல் ஊற்றப்பட்ட ஆபரணங்களை உருவாக்குவதில் வல்லுனராய் இருந்து, உலகளாவிய ரீதியில் போட்டி விலையில் விற்கப்படுகிறது. உள்ளூர் தொழிற்படை உயர்ந்த மட்டத்தில் கற்றல் மற்றும் பயிற்சித் திறனை வெளிப்படுத்தியது. வெளிநாடுகளில் வாய்ப்புக்களை அநேகமாகத் தேடும் இலங்கையைச் சேர்ந்த தகைமை வாய்ந்த நபர்களுக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், இங்கிருந்து எங்களுடைய கம்பனி போன்றவற்றிற்குப் பங்களித்து, நாட்டின் தொடர்ச்சியான வெற்றிக்குப் பங்களிப்பதைக் கருத்திற் கொள்ளுமாறு அவர்களை ஊக்கப்படுத்துகிறேன்.

இலங்கை ஆராய்வதற்கு ஒரு அற்புதமான நாடு என பரிந்துரைக்கிறேன்.

திரு பியரே ப்ரின்ஜியர்ஸ்

தலைவர்,
ஓஷன் வொயேஜர் இன்ரநஷனல் தனி லிமி

இலங்கையிலுள்ள இமுச ஊடாக ஒரு வெற்றிபெற்ற தொழில்முயற்சியாளர் மற்றும் முதலீட்டாளராக என்னுடைய பயணமானது 1980 களின் ஆரம்பத்தில் என்னால் தொடக்கிவைக்கப்பட்ட இரண்டு மிகவும் வெற்றிகரமான கைத்தொழில் ரயர் உற்பத்தி திட்டங்களுடனுமாகும். இந்தத் திட்டங்கள் உலக வரைபடத்தில் இலங்கையை கைத்தொழிலில் ரயர் உற்பத்திக்கு ஒரு முன்னணி இடமாக்கியது. இமுச ஆனது வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ஏனைய அனைத்து நிறுவனங்களுடனும் தொடர்பு கொள்வதை எளிதாக்குபவராக நடந்து, வெற்றியையும் வளர்ச்சியையும் அடைவதற்கு அவர்களின் ஆர்வத்திற்கும், தேவைகளுக்கும் முன்னுரிமை வழங்கி, தொடர்ந்தும் பலத்த ஆதரவு வழங்குவதற்கு நன்றி. இன்று என்னுடைய திட்டங்கள் பல மிச்சலின், மற்றும் யோக்கஹாம போன்ற பாரிய பல்லின நிறுவனங்களின் கவனத்தை ஈர்த்து, அவர்கள் திட்டங்களை வாங்கி, அதன் மூலம் ஒரு அரச முகவரான இமுச இனால் வழங்கப்பட்ட திறமை, வளைந்துகொடுக்கும் தன்மை, சேவை என்பவற்றால் இலங்கை மீதான தங்களுடைய நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளனர்.

இமுச ஆனது 45 வருடங்களுக்கு முன்னர் அது ஆரம்பித்த காலத்திலிருந்து வெளிநாட்டு முதலீட்டாளர்கள், மற்றும் தொழில்முயற்சியாளர்களுக்கு நம்பத்தகுந்த ஆதரவை அவர்கள் எதிர்பார்த்தவாறு வழங்குவதுடன், ஆரம்ப ஒப்பந்தம், மற்றும் அதனைத் தொடர்ந்த ஏதாவது விரிவாக்கத்தில் ஒப்புதல் அளித்த நிபந்தனைகளுக்கு எப்போதும் மரியாதை கொடுத்து, அதே பாதையில் தொடர்ந்து முன்னேறி வருகிறது.

ரயர் வணிகத்திலிருந்து ஓய்வெடுத்தது முதல் எங்களுடைய அடுத்த தலைமுறை குடும்பம் வைத்திருக்கும் கம்பனி மூலம் புதிய ஓஷன் வொயேஜர் இன்ரர்நஷனல் மூலம் சீ லெய்ஷர் யக்ரிங் குரூப் என்ற புதிய துறையை, கட்டுமரங்கள், பாய்க்கப்பல்களை உற்பத்தி செய்து, கடல் சுற்றுலா கடலோர பகல் மற்றும் பல நாள் பயண கப்பல்களை அபிவிருத்தி செய்து, ஏற்றுமதி செய்வதற்கும், இலங்கையிலும் சர்வதேச சந்தையிலும் பயன்படுத்துவதற்கு பூட்டிக் கடலோர பயண படகுகளில் முதலீடு செய்வதை ஆரம்பித்துள்ளேன். விடயங்களை எளிதாக முன்னோக்கி நகர்த்துவதற்கு இருக்க வேண்டிய இடமாக இலங்கையையும், அதன் முகவரான இமுச ஐயும் இன்னும் தெரிவுசெய்கிறேன்.

திரு சண்றோ வெரோனெஸி

தாபகர் மற்றும் தலைவர்

ஒனிவேர்ஸ் - இத்தாலி

ஒனிவேர்ஸ் ஆனது 1986 இல் நிறுவப்பட்ட இத்தாலிய ஒரு பலதரப்பட்ட வியாபாரக் குறியீட்டு நிறுவனமாகும். இன்று இந்தக் குழுவிடம் சொந்தமாக நாகரீக வியாபாரக் குறியீடுகளான கல்ஸிடோனியா, இன்ரிமிஸிமி, இன்ரிமிஸிமி யூஓஎம்ஓ, ரெஸினிஸ், ரெஸினிஸ் கிட்ஸ், பல்கனெறி, அற்றெலியர் எமி, அன்ரோனியோ மாரஸ், என்பவற்றின் சர்வதேச சில்லறை வியாபாரம் உள்ளது. இந்தக் குழுவானது உணவு மற்றும் மதுபானக் கைத்தொழிலில் சிக்னோவினோ, ரெனிமென்ரி லிஓனி, லா ஜியூவா மற்றும் போதெரெ கார்டியா பிராண்டி வியாபாரக் குறியீடுகள் மூலமும், அண்மையில் கையகப்படுத்தலைத் தொடர்ந்து கடல் பயணம் சம்பந்தமான கைத்தொழிலான கிராண்ட் சொலெயில் யக்ற்ஸ், பர்டோ யக்ற்ஸ், மற்றும் வன் னச் யக்ற்ஸ் வியாபாரக் குறியீடுகள் மூலமும் ஈடுபட்டுள்ளது.

எங்களுடைய முதலாவது வியாபாரக் குறியீடான "கல்ஸிடோனியா" பின்னப்பட்ட சாமான்கள், காலுறை, கடற்கரையில் அணியும் உடை, உள்ளாடை பிரதானமாக மார்புக் கச்சு, பெண்களுக்கான உள்ளாடை என்பவற்றை விற்றது. பின்னப்பட்ட சாமான்களும், காலுறையும் முதலில் எங்களுடைய நிறுவனத்தினால் இத்தாலியில் உற்பத்தி செய்யப்பட்ட தருணத்தில் உள்ளாடை வழங்குவதற்கு நாங்கள் சிறிய ஐரோப்பிய தொழிற்சாலைகளில் தங்கியிருக்க வேண்டியிருந்தது. 1990 களின் நடுப்பகுதியில் எங்களுடைய இரண்டாவது வியாபாரக் குறியீடான "இன்ரிமிஸிமி" அறிமுகமானதுடன், எங்களுடைய விற்பனை வளர ஆரம்பித்தது. தரம், விலை, குறித்த நேரத்தில் விநியோகம், வேலைசெய்யும் நிலைமை, ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட அனுகூலங்கள் என்பவற்றைச் சிறந்த கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கு எங்களுடைய சொந்த உற்பத்தி வசதியைக் கொண்டிருக்க வேண்டிய தேவையை நாங்கள் உணர்ந்தோம்.

1998 இல் எங்களுடைய சொந்த உற்பத்தியை ஆரம்பிப்பதற்கான சரியான இடம் இலங்கையென நாங்கள் அடையாளம் கண்டு, குழுவின் ஒரு பகுதியாக 1999 இல் ஒமேகா லைனை நாங்கள் ஆரம்பித்தோம். இதுவரை நாங்கள் ஒமேகா லைன், சிரியோ, அல்பா ஏபரல்ஸ் மற்றும் பென்ஜி லிமிடட் என்ற நான்கு சட்டபூர்வமான நிறுவனங்களுடன், 7 தொழிற்சாலைகளிலும் முதலீடு செய்திருக்கிறோம். தற்சமயம் எங்களிடம் ஏறத்தாழ 15,500 ஊழியர்கள் உள்ளதுடன், எங்களுடைய தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் மொத்த ஆடைகளில் 60% ற்கும் கூடுதலானவை இலங்கை உற்பத்தியாகும்.

எங்களுடைய இலங்கைச் செயற்பாடுகளே எங்களுடைய முற்றுமுழுதான வளர்ச்சிக்கு உந்துசக்தியாகப் பின்னால் உள்ளது. பல ஆண்டுகளில் 5,600 க்கும் மேற்பட்ட களஞ்சியங்களைத் திறக்கக்கூடியதான அணி இருப்பதற்கு அவர்களுடைய ஆதரவே முக்கியமானது.

நாங்கள் ஏற்கெனவே ஏறத்தாழ ஐஅ$ 350 மில். ஐ முதலீடு செய்துள்ளதுடன், தொடர்ந்து இலங்கையில் முதலீடு செய்து வருகிறோம். இலங்கை ஊழியர்கள் இத்தாலிய தொழில்நுட்ப பதவியினரின் உதவியுடன் விரைவாகக் கற்று, இலங்கை நிறுவனங்களின் வளர்ச்சிக்குத் தம்மால் முடிந்தளவு வழங்கிக்கொண்டு இருக்கிறார்கள்.

துரதிர்ஷ்டவசமாக 2 - 3 வருடங்களாக நாடு ஒரு கஷ்டமான சூழ்நிலையைச் சந்திக்கவேண்டி இருந்தது. ஆனால் முதலீட்டு காலநிலை மாற ஆரம்பித்தது. இமுச உம், இலங்கையும் முதலீடு செய்வதற்கு அதிகளவு விரும்பப்படும் நாடாக ஆகவேண்டும் என்று நான் வாழ்த்துகிறேன்.

திரு ஜோக்கிம் வெற்ஸ்

பிநிஅ

லைடீஸ் டயமன்ட்ஸ் தனி லிமி

லைடீஸ் டயமன்ட்ஸ் தனி லிமி இன் பிநிஅ ஆக இமுச இன் வருடாந்த அறிக்கைக்காக இந்தக் கூற்றைச் சமர்ப்பிப்பதில் நான் பெருமையடைகிறேன். ஏறத்தாழ 30 வருடங்களாக எங்களுடைய நிறுவனமானது இமுச இனால் ஒப்புதல் வழங்கப்பட்ட பெருமையான நிறுவனமாக, இந்த அழகான நாட்டுக்குள் வைரங்கள் வெட்டும் கலை மற்றும் கைவினை மற்றும் மெருகூட்டலில் அர்ப்பணித்துள்ளது.

எங்களுடைய பயணம் முழுவதும் இலங்கை முதலீட்டுச் சபையின் அசையாத ஆதரவே எங்களுடைய வெற்றிக்குக் காரணமாக இருந்துவருகிறது. இந்த ஆதரவானது குறிப்பாக சவாலான காலமான கொவிட்-19 தொற்றுநோய் காலத்தில் தெளிவாக இருந்தது. எங்களுடைய செயற்பாடுகள் தொடர்ந்து சுமூகமாக இடம்பெறுவதற்கு இமுச இன் முயற்சிகளும், உதவிகளும் முக்கிய பாகத்தை வகித்தன.

எங்களுடைய நிறுவனமானது ஒரு பெல்ஜிய பிரஜைக்குச் சொந்தமாக இருந்ததுடன், அவர்களால் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன், தொடர்ந்து அதி உயர் தரத்தையும் சிறப்பையும் கொண்டிருந்தன. நாங்கள் உள்ளூர் பொருளாதாரத்திற்குப் பங்களித்தது மாத்திரமல்ல, எங்களுடைய வணிக வழக்கங்கள் மற்றும் சமூகத்துடனான தொடர்புகள் என்பன பெல்ஜியத்திற்கும், இந்த நாட்டிற்குமிடையே ஒரு கலாச்சார பரிமாற்றத்தையும் வளர்த்தன.

ஒரு சாதகமான வணிகச் சூழலை வளர்ப்பதற்கான இமுச இன் அர்ப்பணிப்பானது எங்களுடைய செயற்பாடுகளைச் செழிக்கவும், விரிவுபடுத்தவும் இடமளித்துள்ளது. இந்தப் பலமான கூட்டினைத் தொடர்ந்துகொண்டு செல்வதுடன், இங்கு டயமன்ட் கைத்தொழிலின் பொருளாதார வளர்ச்சிக்கும், அபிவிருத்திக்கும் மேலும் பங்களிக்க வேண்டுமென எதிர்பார்க்கிறோம்.

உங்களுடைய தொடர்ச்சியான ஆதரவிற்கும், ஒத்துழைப்பிற்கும் நன்றி.

திரு மார்க் மொபாற்றி
பிநிஅ
ஐஎப்எஸ் (IFS)

ஐஎப்எஸ் இன் உலகளாவிய வெற்றிக்கு இலங்கையின் பங்கு முக்கியமானது. ஐஎப்எஸ் ஆனது வணிகங்கள் தங்கு தடையின்றி, திறமையுடன் செயற்படுவதற்கு, சேவையும், சக்தியுமே எங்களுடைய கிரகம் என்று ஆக்குகின்ற நிறுவனங்களுக்கு தொவதி (ERP), தொசொமு (EAM), மற்றும் வநிஇ (FSM) என்பவற்றில் செநு (AI) சக்தியூட்டப்பட்ட தொழில்முயற்சி பிரயோக தொழில்நுட்ப தீர்வுகளை வழங்குவதன் மூலம் உதவுகிறது. இப்பொழுது நாங்கள் உலகிலுள்ள அதி வேகமாக வளர்ந்துவரும் மென்பொருள் நிறுவனங்களுள் ஒன்றாக இருக்கிறோம். பலமான இரட்டை இலக்க வளர்ச்சியை ஆறு தொடர்ச்சியான ஆண்டுகளாக அடைந்ததுடன், ஐஅ$ 10 பிலி. க்கு மேலான சந்தை விலைமதிப்பையும் அடைந்துள்ளோம். அசாதாரணமான திறமை, பணி நெறிமுறை மற்றும் இலங்கை மக்களின் கலாச்சாரம் என்பன எங்களுடைய தீர்வுகளின் அபிவிருத்தியிலும், எங்களுடைய நிறுவன வளர்ச்சியிலும் முக்கிய பங்காற்றி உள்ளது.

வெறுமனே 26 ஊழியர்களுடன் 1997 இல் எளிமையாக ஆரம்பித்த ஐஎப்எஸ் இலங்கை சக்திநிலையமாக வளர்ந்துள்ளது. இப்பொழுது நாங்கள் 2,600 க்கும் மேற்பட்ட ஊழியர்களுடன் நாட்டில் மிகப் பெரிய இலக்குடைய தொழில்நுட்ப தொழில் வழங்குனராக இருக்கிறோம். கணிசமான அளவிலான எங்களுடைய உலகளாவிய தயாரிப்பு, ஆதரவு மற்றும் ஆ ம அ (R&D) நடவடிக்கைகள் கொழும்பிலிருந்தே நடத்தப்படுவது இங்கு காணப்படும் குறிப்பிடத்தக்க மென்பொருள் பொறியியல் திறமை மற்றும் மீள்தன்மையை எடுத்துக்காட்டுகிறது. அந்த ஆண்டுகளுக்கு முன்னர் ஐஎப்எஸ் மனதில் பதியக்கூடிய மென்பொருள் மற்றும் இலங்கைப் பல்கலைக் கழகங்களில் பொறியியல் பயிற்சி, மற்றும் பட்டதாரிகளின் பலமான மொழியியல் திறன்கள் என்பவற்றில் மகத்தான ஆற்றலைக் கொண்டிருந்தது. ஆச்சரியமில்லாது, இலங்கை மென்பொருள் பொறியியலாளர்களின் தரமும், பங்களிப்பும் இப்போது உலகெங்கும் இனங்காணப்பட்டுள்ளது. 2030 அளவில் நாங்கள் இலங்கையின் பொருளாதாரத்திற்கு ஐஅ$ 1 பிலி. க்கு மேலாகப் பங்களிப்புச் செய்திருப்போம் என்பதில் பெருமைப்படுகிறோம்.

நாங்கள் இலங்கையில் எங்களுடைய முதலீட்டைச் செய்வதற்கு உறுதியளித்துள்ளதுடன், அண்மைக் காலத்தில் எங்களுடைய எண்ணிக்கையை மேலும் 1000 ஊழியர்களால் அதிகரிப்பதற்கும் திட்டமிடுகிறோம். இலங்கையும், அதன் மக்களும் எப்போதும் எங்களுடைய நிறுவனத்தின் டீஎன்ஏ (DNA) இன் இன்றியமையாத பாகமாக இருப்பார்கள்.



எங்களுடைய முதலீட்டாளர்களின் சாதனைகள்

ஹேலீஸ் பப்ரிக் பிஎல்சீ

முன்னணி புடவை உற்பத்தியாளரும், ஹேலீஸ் குழுமத்தின் அங்கத்தவருமான ஹேலீஸ் பப்ரிக் பீஎல்சீ அதன் நிலைபேறான பயணத்தில் தாய்லாந்தில் இடம்பெற்ற மதிப்பிற்குரிய ஈஎஸ்ஜீ (ESG) உலக உச்சிமாநாடு மற்றும் வளர்ச்சி, மீள்எழுச்சி, புதிய கண்டுபிடிப்பு மற்றும் திறன் (GRIT) விருதுகளின்போது, “சிறந்த எஸ்டீஜி இம்பக்ற் விருதினால்” (SDG impact award - நிஅஇ விளைவு விருது) கௌரவிக்கப்பட்டபோது இன்னுமோர் முக்கிய மைல்கல்லை எட்டியது.

இந்த விருதுகள் பிராந்தியத்தில் ஒரு முன்னணி ஆலோசனை நிறுவனமான கோப்ஸ்ரேஜ் (Corpstage) மற்றும் ஈஎஸ்ஜீ றிசேச் பௌண்டேஷன் (ESG Research Foundation) இனால் ஒழுங்குசெய்யப்பட்டன. விளைவுமிக்க சூழல், சமூகம் மற்றும் ஆட்சி (ESG - சூசஆ) நடைமுறைகள் மூலம் நிலைபேறான உலகத்தை நோக்கி முன்னேறுகின்ற முதன்மையான நிறுவனங்களை இனங்காணும் அதேவேளை இவ் விருதானது பொறுப்புள்ள முதலாளித்துவத்தையும், பசுமை முயற்சிகளையும் முன்னெடுப்பதையும் இலக்காகக் கொண்டுள்ளது.

ரிக்கிரி ரோய்ஸ்

இந்த ஆண்டின் பசுமைக் குறியீடு (Green brand) - எஸ்எல்ஜஎம் குறியீடு சிறந்த விருதுகள்

உலகில் கார்பன் தடயங்களைக் குறைக்க நேரடியாக உதவியதும், நிலைபேறான சந்தைப்படுத்தல் நடைமுறைகளை இணைத்துக் கொண்டதுமான ஒரு தர குறியீட்டிற்கு “இந்த ஆண்டின் பசுமைக் குறியீடு” விருது வழங்கப்பட்டது. சூற்றுச் சூழல் விழிப்புடன் இருக்கும்போது, முடிந்தவரை சுற்றுச் சூழலில் குறைந்த தாக்கத்தை ஏற்படுத்தும் வணிகத்தினூடான தங்கள் பணிகளையும், நடைமுறைகளையும் தனியான வருவாய் உந்துலிலிருந்து வணிக அபிலாஷைகளை சமநிலைப் படுத்துவதற்கு எப்படி “டிக்கிரி” மாற்றினார் என்பதை அங்கீகரித்து இந்த விருது விரும்பப்பட்டது.

ஆண்டின் ஏற்றுமதிக் குறியீடு - எஸ்எல்ஜஎம் குறியீடு சிறந்த விருதுகள்

இந்த விருதானது ரிக்கிரியை (Tikiri) அதன் மனதில் பதியக்கூடியதும், உலகளாவிய இருப்பைக் கொண்டாடுகின்றதுடன், மூலோபாய சந்தையில் கவனம் என்பவற்றிற்காக இந்த ஆண்டின் மிகவும் நம்பிக்கைக்குரிய ஏற்றுமதிக் குறியீடாக இனங்கண்டுகொண்டது. இலக்கு வைக்கப்பட்ட சந்தைகளில் ரிக்கிரியின் குறியீட்டைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் கைத்தொழிலில் ஒரு அளவுகோலை அமைத்து, பல்வேறு பிராந்தியங்களில் மாற்றியமைத்து, வளர்வதற்கான அதன் திறனை வெளிப்படுத்தியுள்ளன. ஒவ்வொரு கவனம் செலுத்தும் சந்தையும் அதன் சர்வதேச செல்வாக்கு மற்றும் வெற்றியைத் தொடர்ந்து விரிவுபடுத்துவதற்கான திறனை வெளிப்படுத்தும் பல்வேறு வகைகளுக்குள் ஊடுருவி, ஒரு வலுவான அடித்தளத்தை நிறுவுவதில் அதன் நிபுணத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது.

மாஸ் ஹோல்டிங்ஸ் (MAS Holdings)

மாஸ்: ஓஷன் ஸ்ரெயினர்

மாஸ் ஹோல்டிங்ஸ் ஓஷன் ஸ்ரெயினர் ஆனாது "வோட்டர் கற்றகரி ஒப் பாஸ்ற் கம்பனிஸ் 2022 உலகத்தை மாற்றும் யோசனைக்கான விருதுகள்" (Water Category of fast Company's 2022 World Changing Ideas awards) இல் இறுதிப் போட்டியாளர் எனப் பெயர்பெற்றது. சுத்தமான தொழில்நுட்பம், புதுமையான பெருநிறுவன முயற்சிகள், நகரங்கள் மற்றும் கட்டடங்களுக்கான துணிச்சலான புதிய வடிவமைப்புகள், ஆக்கபூர்வமான சமூக கண்டுபிடிப்புகளின் வளர்ச்சியை ஆதரிக்கின்ற ஏனைய படைப்பு வேலைகள், சமூக சமத்துவமின்மையின் போக்கை மாற்றுதல், காலநிலை மாற்றம் மற்றும் பொது சுகாதார நெருக்கடிகள் என்பவற்றைக் கௌரவித்தே. பாஸ்ற் கம்பனிஸ் 2022 உலகத்தை மாற்றும் யோசனைக்கான விருதுகளுக்கான வெற்றியாளர்கள் அறிவிக்கப்பட்டது. "ஓஷன் ஸ்ரெயினர்" ஆனது இலங்கையில் கொழும்பில் தெஹிவளை கால்வாயில் நிறுவப்பட்டுள்ள ஒரு பரீட்சார்த்த மிதக்கும் குப்பைப் பொறியாகும். அது 2020 ஆகஸ்ட் மாதம் அதன் தொடக்கத்திலிருந்து நாடு முழுவதும் திறந்த மூல கூட்டாண்மை மூலம் ஏனைய எட்டு இடங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

நொயோன் லங்கா : நிலைபேறானதன்மை

2004 இல் நிறுவப்பட்டது. நொயோன் லங்கா ஆனது தெற்கு ஆசியாவின் மிகப்பெரிய தைத்த ஆடைகள் உற்பத்தியாளரான மாஸ் ஹோல்டிங்ஸின் (MAS Holdings) துணை நிறுவனமாகும். இந்த நிறுவனத்தின் பொறிக்கப்பட்ட நெசவு நூலால் பின்னப்பட்ட சேகரிப்புகள் உயர் ரக துணிகளிலிருந்து விளையாட்டுகளுக்கான துணிகள், அத்துடன் நெருக்கமான உடைகள், உறங்கும் ஆடைகள், பெண்களின் ஆரோக்கிய தொழில்நுட்பம் வரையாகும். பல்வேறு வகையான லேஸ்கள் (lace) ஆடம்பரமான மென்மையான பட்டு மற்றும் பலவழிகளில் நீளக்கூடியதிலிருந்து உயர் உறுதியான பொறிக்கப்பட்ட லேஸ் துணி வரையாகும். சாயமிடும் புதிய கண்டுபிடிப்பானது முற்றிலும் இயற்கைச் சாயத்திலிருந்து செய்யப்பட்ட லேஸ் ஆடைகளைக் கொண்டிருப்பதற்கு நெருக்கமாக இக் கைத்தொழிலைக் கொண்டுவருகின்றது.

நொயோன் லங்காவின் இயற்கைச் சாய தீர்வானது தடையின்றித் தொடர்ந்து செல்கின்ற தேசிய நோக்கம் அல்லது நிலைபேறான வரைபடத்திற்கு அண்மைக்கால முன்னேற்றமாகும். அத்துடன் தற்போதுள்ள சுற்றுச் சூழல் சலுகைகளின் தொகுப்பில் மக்கக்கூடிய மற்றும் மறுசுழற்சி செய்யப்பட்டவையும், மறுசுழற்சி செய்யப்பட்ட பொலிதீன் குடும்பத்தைச் (polyethylene terephthalate) சேர்ந்த போத்தல்களும் (PET) அடங்கும்.

செயற்கைச் சாயத்துடன் ஒப்பிடும்போது நொயோன் லங்காவின் தீர்வானது கழிவுநீரில் குறிப்பிடத்தக்க இரசாயன சுமையைக் குறைப்பதுடன், நச்சு இரசாயனங்கள் பூஜ்யமாக இருப்பதையும் உறுதிசெய்வதுடன், ஏறத்தாழ முறையே 30 மற்றும் 15 வீத நீரையும், சக்தியையும் சேமிக்கிறது.

ஆண்டுக்கான குறிப்பிடப்பட்ட சிறப்பம்சங்கள்

வணிக அலுவல்களைச் சீர்ப்படுத்துவதற்கு எண்மின்மயமாக்கல்

2023 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் எண்மின்மயமாக்கல் திட்டத்தின் கீழ் இமுச இன் தொழில்முயற்சிகளுக்கும், முதலீட்டாளர்களுக்கும், அத்துடன் உள்ளக நடவடிக்கைகளுக்கும் சேவை வழங்குவதை சீர்ப்படுத்துவதற்காக இமுச இன் தகவல் தொழில்நுட்பப் பிரிவு பல்வேறு புதிய கணனி பிரயோகங்களை வெளியிட்டது.

முக்கிய பூர்வாங்க வேலையில் ஒன்றானது தொழில்முயற்சிகள் தங்களுடைய தீர்வையற்ற பொருட்களுக்கான ஒப்புதலைப் பெறுவதுடன், இறக்குமதி/ஏற்றுமதி கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளை மிகவும் திறமையான முறையில் செய்வதற்கு ஒரு நிகழ்நிலை மேடையை அறிமுகம் செய்வதாகும். இந்த வலை பிரயோகத்தை அமுல்படுத்திய பின்னர் தொழில்முயற்சிகள் இந்த ஒப்புதல்களைப் பெறுவதற்கு இமுச கட்டடத்திற்கு வரவேண்டிய அவசியம் இருக்காது. இது அவர்களுடைய நேரத்தையும், பணத்தையும் சேமிக்கும்.

மேலும், தொழில்முயற்சிகள் ஒப்புதல் வழங்கப்பட்ட மட்டத்திற்குள் தங்களுடைய கொடுக்கல் வாங்கல்களைச் செய்கின்றனவா என்பதை மதிப்பீடு செய்வதற்கு தொழில்முயற்சிகளின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி விகிதங்களை இணக்கம் செய்வதற்கு தன்னியக்க முறைமையை அமுல்படுத்தியது. தொழில்முயற்சிகள் வேண்டியவாறு தொழிற்படவில்லையெனில், முறைமையானது எந்த மனித ஈடுபாடுமின்றி அவர்களுடைய சேவைகளைத் தானகவே இடைநிறுத்தக்கூடிய நுண்ணறிவு கொண்டதாகும்.

2023 இல் இலங்கை முதலீட்டுச் சபையானது (இமுச) ஆட்சேர்ப்பு நடவடிக்கையை நெறிப்படுத்துவதற்கு ஒரு நிகழ்நிலை வலை போர்டலை (web portal) ஆரம்பித்தது. இது அவர்களுடைய எண்மின் மாற்ற மூலோபாயத்தில் ஒரு முக்கிய மைல்கல்லாக ஆகியதுடன், அரச திணைக்களங்களுக்கும் ஒரு முன்மாதிரியாகவும் அமைந்தது. இந்தப் புதுமையான கண்டுபிடிப்பு மேடையானது தொழில் தேடுகின்றவர்கள் பதிவு செய்து, இமுச வெப்தளத்தினூடாக நேரடியாக இமுச இலுள்ள வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்க முடியும். இந்த முறைமை துரிதமாக விண்ணப்பங்களைச் செயற்படுத்துவதுடன், ஆட்சேர்ப்பு நடவடிக்கை முழுவதும் விண்ணப்பதாரருக்கும், இமுச க்குமிடையே எண்ணற்ற தடவைகள் நிகழ்நிலை தொடர்பாடலுக்கு வசதியளிக்கிறது. இந்த முயற்சியானது திறனையும், பயன்படுத்துவவர்களின் அனுபவத்தையும் அதிகரித்து, முன்னர் கையால் கையாளப்பட்ட பல்வேறு மவ நடவடிக்கைகளை வெற்றிகரமாக எண்மின்மயமாக்கியுள்ளது.

மேலும், இமுச ஆனது ஊழியர்களின் கடன் வழங்கும் நடவடிக்கைகளை முகாமைத்துவம் செய்வதற்கும், முன்னர் கையால் கையாளப்பட்ட செயற்பாட்டினை ஒழுங்குபடுத்துவதற்கும் மேலும் ஒரு நிகழ்நிலை தன்னியக்க முறைமையை அறிமுகம் செய்துள்ளது. இந்த முன்னேற்றங்களைக் கட்டியெழுப்பி, இமுச ஆனது இமுச வலயங்களை தலைமையகத்திலுள்ள மத்திய தரவு மையத்துடன் தொடர்புபடுத்துவதற்கு புதிய தொழில்நுட்பங்களை அமுல்படுத்தியது. இந்த முயற்சியானது வலைப்பின்னல் வேகத்தை அதிகரித்ததுடன், இணைய தொடர்புகளுடன் சம்பந்தமான செலவுகளைக் குறைத்து, நிறுவனத்தின் எண்மின் மாற்றம் மற்றும் தொழிற்பாட்டு திறன் என்பவற்றிற்கு மேலும் ஆதரவு வழங்குகிறது.

பசுமை வழி வசதி

2023 இல் செயல்திறன் மற்றும் நிலைபேறானதன்மை என்பவற்றை நோக்கிய நகர்வில், இலங்கை முதலீட்டுச் சபையானது (இமுச) ஒரு தெரிவு செய்யப்பட்ட ஏற்றுமதி சார்ந்த தொழில்முயற்சிகள் குழுவிற்கு பசுமை வழி வசதியை வழங்கியது.

முதலீடுகளைக் கவரும் முக்கியமானதான இமுச இன் பசுமை வழி வசதியனது சேவைகளைத் துரிதப்படுத்தி, ஏற்றுமதி சார்ந்த தொழில்முயற்சிகளின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி நடவடிக்கைகளுக்கு வழிகாட்டுவதற்கான நேரத்தைக் குறைப்பதை இலக்காகக் கொண்டுள்ளது. பசுமை வழி வசதியானது ஏற்றுமதி சார்ந்த தொழில்முயற்சிகள் இறக்குமதி சரக்குகளை விடுவித்து, பௌதீகமாகச் சரிபார்த்தல் செய்யாது, ஏற்றுமதி சரக்குகளுக்கு அனுப்புவதற்கான வசதியை வழங்குகிறது. (சரக்கில் 10% மாத்திரமே பௌதீகமாகச் சரிபார்க்கப்படும்.)

செயற்பட்டு, சொத்தை அனுபவிக்கக்கூடிய ஒப்பந்த காலமாக குறைந்தது ஐந்து வருடங்கள் நிறைவுசெய்த இமுச இல் பதிவுசெய்யப்பட்ட தொழில்முயற்சிகளிலிருந்து மொத்தமாக 116 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றன.

அதற்கேற்ப, இலங்கைச் சுங்கத்திலிருந்து விடுவிப்பதைப் பெற்றபின்னர், பல்வேறு துறைகளிலிருந்து 35 தொழில்முயற்சிகள் பசுமை வழி வசதியிலிருந்து இந்த நன்மையைப் பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இமுச ஆனது தொடர்ந்து முதலீடுகளுக்கு வசதியளிப்பதில் முன்னணியில் இருப்பதால் பசுமை வழி வசதியானது ஒரு வழிகாட்டி ஒளியாகத் தொழிற்பட்டு, தொழில்முயற்சிகளுக்கு ஒரு சுமுகமான தொழிற்பாட்டிற்கும், சூழல் பொறுப்பிற்கும் வழிகாட்டுகிறது. இந்த இணக்கமான கலவையான திறமையும், நிலைபேறான தன்மையும் ஒரு வணிக நட்புடனான சூழலை இலங்கையில் உருவாக்குவதற்கு இமுச இன் அர்ப்பணிப்பை நிரூபித்துக் காட்டுகிறது.

இமுச வலயங்களில் சீர்திருத்தப்பட்ட வசதிகள்

இமுச நிறுவனங்களுக்கு மேலும் சிறந்த சேவையை வழங்குவதற்கான தொடர்ந்த முயற்சியாக 2023 இலும் இமுச வலயங்களுக்குள் இமுச கழிவுநீர் சுத்திகரிக்கும் நிலையங்களைப் பெரிதாக்குதல், நீர் சுத்திகரிக்கும் நிலையங்கள் மற்றும் நீர் வழங்கல் முறைமையைப் பெரிதாக்குதல், செல்வதற்கான வீதிகளைச் சீர்திருத்துதல், புதிய வீதிகளை அமைத்தல், மூசுதொ (CCTV) நிறுவுதல், எல்லை வேலிகளைச் சீர்திருத்துதல், நிர்வாகப் பிரிவுகளை மீள்புதுப்பித்தல், வீதிகளுக்கான விளக்குகளை சீர்திருத்துதல் போன்ற பல்வேறு உட்கட்டமைப்பு அபிவிருத்திகளுக்கு கணிசமான மூலதன பாதீட்டை செலவழித்தது. 2023 இல் இந் நிகழ்ச்சிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பாதீடு ரூபா 2.3 பிலி ஆகும். இன்னுமோர் ஒதுக்கீடாக 2024 க்கு ரூபா 2.8 பிலி. தொடர்ந்து இருக்கும்.

மேலும் ஏறாவூரிலும், அம்பாந்தோட்டையிலுமுள்ள இரண்டு புதிய வலயங்களின் அபிவிருத்திகள் 2023 முழுவதும் தொடர்ந்தன. அபிவிருத்திக்குப் பின்னர் ஏறாவூர் வலயமானது புடவை உற்பத்திக்காக அர்ப்பணிக்கப்பட்ட வலயமாகவும், அம்பாந்தோட்டை வலயமானது மருந்தாக்கத்திற்கான வலயமாகவும் அர்ப்பணிக்கப்பட்டு தொடர்ந்து திறக்கப்படும்.

பிங்கிரிய ஏற்றுமதி செயலாக்க வலயம்

2023 ஆம் ஆண்டிற்கான திட்டமிடப்பட்ட செயற்பாடு பிங்கிரிய ஏசெவ க்கு செல்வதற்கான வீதியை அபிவிருத்தி செய்வதாகும். செல்வதற்கான வீதியின் மொத்த நீளம் 6.05 கிமீ ஆகும். இது துந்தோட்ட முதல் வத்துவத்த (4.85 கிமீ.) மற்றும் வத்துவத்த முதல் ஹெற்றியாகொட்டுவ வரை (1.2 கிமீ) என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. நிர்மாண வேலைகள் நிரல் அமைச்சிற்கும், வீஅஅ (RDA) க்குமிடையே கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை மூலம் வீதி அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டது.

4.85 கிமீ பிரிவிற்குள் 6 மதகுகளின் பகுதி நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன், வீதியை அகலமாக்குவதற்குத் தனியார் காணிகளைக் கையகப்படுத்தும் நடவடிக்கை இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது. எஞ்சிய 1.2 கிமீ பிரிவானது ஏசெவ இன் எல்லை வலயத்தினூடாகச் செல்கின்றதுடன், கெட்டியான சாலைகள் அமைப்பதற்கான கலவைப்பொருள் தயாரித்தல் அந்தப் பிரிவில் பூர்த்தியாகியுள்ளது. எஞ்சிய 0.2 கிமீ பிரிவு நிர்மாண வேலை இடம்பெற்றுக்கொண்டிருக்கிறது. மொத்தமாக ஆண்டு முன்னேற்றம் 45% ஆகும்.

வகவத்தை கைத்தொழில் வலயம்

செல்லும் வீதியும், மின்சாரம் விநியோகிக்கும் கம்பிச்சட்ட உப நிலையம் ஒன்றினதும் நிர்மாண வேலை பூர்த்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டது. நிர்மாண வேலைகள் நிரல் அமைச்சிற்கும், சம்பந்தப்பட்ட பங்குதாரர்களுக்குமிடையே கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் வீதி அபிவிருத்தி சபைக்கும் (வீஅச RDA), இலங்கை மின்சார சபைக்கும் (இமிச CEB) முறையே ஒப்படைக்கப்பட்டன.

செல்வதற்கான வீதியில் ஆபத்தான பகுதிகள் வீஅஅ (RDA) இனால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், கட்டுப்படுத்தும் பாதுகாப்பு அமைப்புப் பலகைகளும், மின்சாரம் விநியோகிக்கும் கம்பிச்சட்ட உப நிலையத்தின் தொடர்பாடல் உபகரணமும் இமிச (CEB) இனால் நிறுவப்பட்டும் உள்ளன. மொத்த ஆண்டு முன்னேற்றம் 70% இனாலாகும்.

அரபொக்க மற்றும் மிரிஜ்ஜவில ஏசெவ

ஏற்கெனவே உள்ள நீர் மற்றும் சக்தி விநியோக அதிகரிப்பு 2023 இறுதியளவில் நிறைவேற்றுவதற்குத் திட்டமிடப்பட்டது. அத்துடன் இந்த வேலை சுகாதார அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டது. 2023 முடிவில் மொத்த முன்னேற்றம் 10% ஆகும்.

புடவை உற்பத்தி வலயம், ஏறாவூர்

செல்வதற்கான வீதி (6 கிமீ) அமைக்கும் நடவடிக்கையும், ஆரம்ப நீர் மற்றும் சக்தி விநியோக வழங்கலும் 2023 முடிவதற்குள் நிறைவேற்றுவதற்குத் திட்டமிடப்பட்டது. இந்த வேலை கைத்தொழில் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டது. 2023 முடிவில் மொத்த முன்னேற்றம் 15% ஆகும்.

புதிய வலயங்கள் தாபித்தல்

இந்த நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு வடக்கு, கிழக்கு, வட மேல் மற்றும் தென் மாகாணங்களில் காணிகள் இனங்காணப்பட்டுள்ளன. அவை அமைந்துள்ள இடங்களாவன முறையே காங்கேசன்துறை, பரந்தன், மாங்குளம், கப்பல்துறை, பிங்கிரிய, இரணவில மற்றும் அம்பாந்தோட்டையாகும்.

மனித மூலதனம்

எங்களுடைய மக்கள்

எங்களுடைய மக்களே எங்களுடைய மிகப்பெரிய சொத்தாகும். அத்துடன் தேசத்தைப் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியை நோக்கி இட்டுச்செல்கின்ற இமுச இன் பயணத்தில் மிகவும் முக்கியமானவர்களாவார்கள். இந்த தேசிய பொறுப்பை நிறைவேற்றுவதற்கு எங்களுடைய மக்களுக்கு தொழில்துறைசார் மற்றும் தனிப்பட்ட வரம்புகள் இரண்டிலும் வேண்டிய ஆதரவு எப்போதும் வழங்கப்படுகிறது.

அரச துறையில் மிகவும் இனங்காணப்பட்ட நிறவனங்களில் ஒன்றான இமுச ஆனது 1978 இல் ஆரம்பிக்கபட்டது முதல் பல்வேறு பின்னணியைக் கொண்ட மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கியுள்ளது. இதன் பிரதிபலனாக இமுச மாறுபட்ட கண்ணோட்டங்களுடனான திறனுள்ள அணிகளைக் கொண்டுள்ளதுடன், இதுவே நாட்டை சர்வதேச அரங்கிற்குக் கொண்டுசெல்வதற்கான பலமுமாகும். முகாமைத்துவ முறைமைகளும் செயற்பாடுகளும் தங்களுடைய பல்தரப்பட்ட திறமையுள்ளவர்களுக்கு சமமான வாய்ப்புடன், பாதுகாப்பாகப் பணிபுரியும் சூழலையும் உறுதிப்படுத்துகிறது.

மக்களை முகாமைத்துவம் செய்வதில் எங்களுடைய அணுகுமுறை

முன்னேற்றத்திற்கான சந்தர்ப்பங்களை வழங்கும் அதேவேளை திறனைக் கவர்ந்து, தக்கவைத்து, திறனை ஊக்குவிக்கின்ற எங்களுடைய மக்களை மையமாகக்கொண்ட மிகவும் வலுவான அணுகுமுறையினால் ஊக்கம், சந்தோஷம் இரண்டையும் கொண்ட தொழில் படையைக் கொண்டிருக்க முடிகிறது. இதனால், நிறுவனத்திற்கான ஒரு மதிப்பை உருவாக்குவதன் மூலம் எங்களுடைய தேசிய பொறுப்பை நிறைவேற்றுவது உறுதிப்படுத்துகிறது. எங்களுடைய மனித வளங்கள் முகாமைத்துவத்தின் கடமைகளாவன ஆட்சேர்த்தல் மற்றும் தெரிவு, விடுமுறைகள் மற்றும் வரவு முகாமைத்துவம், மனிதவள அபிவிருத்தி, செயலாற்றுகை முகாமைத்துவம், இழப்பீடு மற்றும் நலன்புரி சலுகைகள் மற்றும் ஒழுக்காற்று முகாமைத்துவம் என்பவற்றை உள்ளடக்கியதாகும். இந்தக் கடமைகள் அமுல்படுத்தப்பட்டு, மையத்தில் கண்காணிக்கப்படுவதால் எங்களுடைய ஊழியர்களின் தொழில்துறைசார் வாழ்க்கையை அதிகரிப்பதுடன், நன்றாக ஆதரவு வழங்குவதும் உறுதிப்படுத்தப்படுகிறது. மேலும், நாங்கள் இந்தக் கடமைகளைச் செயற்படுத்துவதற்காக நியாயமான, நெறிமுறையான மற்றும் உள்ளடக்கிய அணுகுமுறையைப் பின்பற்றுகிறோம்.

பொதுச் சேவையானது இமுச இன் பகிரப்பட்ட நோக்காகவும், உந்துசக்தியாகவும் இருப்பதால் எங்களுடைய செயற்பாடுகள் அரச சட்டங்கள், ஒழுங்குமுறைகள் மற்றும் கொள்கைத் தீர்மானங்களுடன் இணங்குகின்றன. இமுச ஆனது வெநேமு ஐக் கவர்தல் மற்றும் வசதியளித்தல் என்பவற்றிற்கான உச்ச நிறுவனம் என்பதால் எங்களுடைய தேசத்திற்கான இமுச இன் பொறுப்பை நாங்கள் ஒருபோதும் குறைத்து மதிப்பிடுவதில்லை. அதனால் மேற்கொள்ளப்படும் எந்த நடவடிக்கையும் இந்தத் தேசிய பொறுப்பை மனதில் கொண்டே மேற்கொள்ளப்படுகிறது. நம்பகத்தன்மை மற்றும் இசைவு சம்பந்தமாக அரச நிறுவனங்களைப் பாதுகாப்பதற்காக உள்ள கொள்கைகளால் மக்கள் கடமைகள் அனைத்தும் வழிநடத்தப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

வணிகத்தின் வெற்றிக்கு சரியான நேரத்தில் சரியான பொருத்தமான ஆட்சேர்ப்பு செய்வது முக்கியமானது என்பதைத் தொடர்ந்து அங்கீகரிப்பதுடன், ஊழியர்களின் கற்றல் மற்றும் மேம்பாட்டு முயற்சிகளை அதிகரிப்பதற்கு இந்த மனித வள அபிவிருத்தி கடமையானது உறுதியளிக்கும் அதேவேளை, வெளிப்படையான செயல்முறை மூலம் அதனை உறுதிசெய்கிறது. நேரம் மற்றும் வருகை கடமைகள் எண்மின் முறையில் முகாமைத்துவம் செய்யப்படும் அதேவேளை இழப்பீடும், நலன்புரிகளும் மற்றும் ஊழியர் நலன்புரி கடமைகளும் எங்களுடைய மக்களுக்கு அவர்களின் அர்ப்பணிப்பு மற்றும் சிறப்பிற்காக சமமாக வெகுமதி வழங்கப்படுகிறது என்பது உறுதிசெய்யப்படுகிறது.

அந்த முறைமைகள் அனைத்தும் எங்களுடைய ஊழியர்களுக்கு வழிகாட்டுவதுடன், ஆதரவு வழங்கவும் உள்ளதுடன் அவர்கள் தங்களை பொறுப்புடன் நடத்திக்கொள்வார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. ஒழுக்காற்று முகாமைத்துவக் கடமையானது ஊழியரின் தவறான நடத்தை உடனடியாகக் கவனிக்கப்படும் என்பது உறுதிசெய்யப்படுவதுடன், வேலைக்கு இடையூறு ஏற்படுவதைத் தடுப்பது குறைக்கப்படுகிறது.

எங்களுடைய மக்களின் அமைப்பு

இமுச இன் அணி முழுமையாக கொழும்பிலுள்ள தலைமையகத்தில் 379 எண்ணிக்கையான மக்களையும், நாடெங்கிலும் ஏனைய வெவ்வேறு இடங்களில் 733 எண்ணிக்கையான மக்களையும் கொண்டுள்ளது. எங்களுடைய ஊழியர் கோப்பில் மூன்று ஊழியர் பிரிவுகள் உள்ளன. எங்களுடைய அணியில் நிறைவேற்று மட்டத்தை உள்ளடக்கிய 47% ஆனோர் தலைமையகத்திலும், ஏற்றுமதி செயலாக்க வலயங்களிலும், பூங்காக்களிலும் இருக்கின்றார்கள். எஞ்சிய 53% எங்களுடைய அணியில் நிறைவேற்று மட்டம் அல்லாதவர்களைக் கொண்ட முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் ஆரம்ப நிலை பணியாளர்களை உள்ளடக்கியதாகும். அவற்றுள் 21% ஆனோர் முகாமைத்துவ உதவியாளர்களும், 32% ஆனோர் ஆநி தர பணியாளர்களாவார்கள்.

இமுச இல் நாங்கள் பன்முகத்தன்மையையும், ஒவ்வொரு தனிநபருடைய தனித்தன்மையையும் அரவணைப்பதுடன், அது எங்களுடைய மிகப்பெரிய பலங்களில் ஒன்றென நாங்கள் நம்புகின்றோம். சபைக்குள் ஆண்களும், பெண்களும் அவர்களின் தொழில் மூலம் முன்னேறுவதற்கான சந்தர்ப்பத்தை நாங்கள் வழங்குகிறோம். ஆண், பெண் பிரதிநிதித்துவம் சகல ஊழியர் கோப்பிலிருந்தும் புலப்படும்.

எங்களுடைய பணியானது பல்வேறு கல்விசார் மற்றும் தொழில்துறைசார் பின்னணிகளையும் கொண்ட ஊழியர்களை உள்ளடக்கியதாகும். 1112 ஊழியர்களில் 516 பேர் நிறைவேற்று வகையினராவார்கள். அவர்களுள் 280 பேர் பட்டதாரிகளாவார்கள். 167 பேர் முதுமானிப் பட்டம் பெற்றவர்கள். 33 பேர் தொழில்துறைசார் நிறுவனங்களில் அங்கத்துவம் பெற்றவர்களாவார்கள். அத்துடன் 23 ஊழியர்கள் முதுமானிப் பட்டம், தொழில்துறைசார் அங்கத்துவம் இரண்டையும் கொண்டிருக்கிறார்கள். வணிக நிர்வாகம், விஞ்ஞானம், பொருளாதாரம், பொறியியல், பொது முகாமைத்துவம், கணக்கியல், சமூக விஞ்ஞானம், சட்டம் மற்றும் சுங்க நிர்வாகம் என்று பல்வேறு துறைகளில் எங்களுடைய ஊழியர்களின் கல்விப் பின்னணியின் பன்முகத்தன்மையினால் சபையானது தொடர்ந்தும் பல அனுகூலங்களைப் பெறுகிறது.



கற்றல் மற்றும் தொழில்துறைசார் மேம்பாட்டிற்கான ஒரு உகந்த சூழலை அமைத்திருப்பதால் எங்களுடைய ஊழியர்களின் தொடர்ச்சியான வளர்ச்சியானது, நிறுவனத்தின் வெற்றிக்கு, குறிப்பாக சவாலான செயற்பாட்டு நிலைமைகளிலும் முக்கியமானது என்று நாங்கள் நம்புகிறோம். ஆகவே இமுச ஆனது கல்வி, பதவி உயர்வு, மற்றும் விடுமுறை ஆகியவற்றிற்கான விரிவான கொள்கைகளை அறிமுகப்படுத்தியுள்ளது. இது ஊழியர்கள் தங்களுடைய தொழில்துறை மேம்பாட்டு இலக்குகளைத் தொடர்வதற்காக இமுச இன் உறுதிப்பாட்டைப் பிரதிபலிக்கிறது.

பயிற்சியும், முன்னேற்றமும்

இமுச இல் நாங்கள் ஊழியர்களுக்கு அவர்களுடைய தொழில்துறை மற்றும் தனிப்பட்ட முன்னேற்றத்திற்கு ஆதரவு வழங்குகிறோம். நாங்கள் நிறுவனத்திற்குள் 24 பயிற்சி நிகழ்ச்சிகளும், 45 க்கு மேற்பட்ட வெளிவாரி பயிற்சி நிகழ்ச்சிகளும் நிறைவேற்று, நிறைவேற்று அல்லாத தரத்தினருக்கும், ஆநி ஊழியர்களுக்கும் நடத்தியுள்ளோம். ஏறத்தாழ 570 ஊழியர்கள் நிறைவேற்று தரத்திலும், 160 ஊழியர்கள் நிறைவேற்று அல்லாத தரத்தினர் மற்றும் ஆநி தரத்தினர் நிறுவனத்திற்குள்ளான பயிற்சி நிகழ்ச்சிகள், மற்றும் வெளிவாரி பயிற்சி நிகழ்ச்சிகள் ஊடாகப் பயிற்றப்பட்டுள்ளனர்

சமூக தாக்கம்

பகற்காப்பு நிலையங்கள் தாபித்தல் (குழந்தைகள் பகல் காப்பகம் crèches)

பகற்காப்பு நிலையங்கள் மற்றும் முன்பள்ளிகள் ஏற்றுமதி செயலாக்க வலயங்களுக்குள் (ஏசெவ) தாபிப்பது தங்களுடைய குழந்தைகள் வலயங்களுக்குள் பாதுகாப்பான சூழலில் இருக்கிறார்கள் என்பதை உறுதிசெய்துகொண்டு, தங்களுடைய வேலைகளைத் தொடர விரும்பும் ஊழியர்களுக்கு ஒரு நடைமுறையினான தீர்வை வழங்குகிறது. இந்த முயற்சியானது உயர்ந்த அளவிலான தொழில் பிறழ்வைக் குறைப்பதற்கு உதவுவதுடன், சாத்தியமான புதிதாகச் சேர்ந்துகொள்கின்றவர்களுக்கு வலயம் பற்றி நல்ல அபிப்பிராயத்தையும் ஏற்படுத்துகிறது.

2023 இறுதியளவில் கட்டுநாயக்க ஏற்றுமதி செயலாக்க வலயத்திலுள்ள பகற்காப்பு நிலையம் மொத்தமாக 45 குழந்தைகளுக்கு வசதியளித்துள்ளது. பியகம மற்றும் மாவத்தகம ஏற்றுமதி செயலாக்க வலயங்களிலுள்ள பகற்காப்பு நிலையங்கள் முறையே 25 மற்றும் 37 குழந்தைகளுக்கு வசதியளித்துள்ளது.

தொழிலாளர்களுக்கு வசதியளிக்கும் நிலையங்கள் தாபித்தல்

2023 இல் கட்டுநாயக்க, பியகம, ஹொக்கல, வத்துபிற்றிவல ஏற்றுமதி செயலாக்க வலயங்ளிலும், கண்டி கைத்தொழில் பூங்காவிலுமாக ஐந்து வசதியளிக்கும் நிலையங்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த வசதியளிக்கும் நிலையங்களாவன அந்தந்த வலயங்ளிலுள்ள தொழிற்சங்க நிர்வாகிகள் தொழில்முயற்சிகளுக்குள் தொழில்பார்க்கும் தங்களுடைய அங்கத்தவர்களைச் சந்திப்பதற்காகவே பிரதானமாக நிறுவப்பட்டன. தேவையானபோது இந்தத் தொடர்புகள் சுதந்திரமாகவும், தனிப்பட்ட முறையிலும் நடக்கலாம் என்பதை உறுதிசெய்யும். இந்த அனைத்து மையங்களிலிருந்தும், கட்டுநாயக்க ஏற்றுமதி செயலாக்க வலயத்தில் ((கஏசெவ) அமைந்துள்ள வசதியளிக்கும் நிலையம் மாத்திரமே 2023 இல் தொழிற்சங்கங்களினால் பயன்படுத்தப்பட்டது. அவர்களுடைய கிளை தொழிற்சங்க அங்கத்தவர்களுடன் மொத்தம் ஒன்பது கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்தல்

இலங்கை முதலீட்டுச் சபை (இமுச) தொழிற்சாலை ஊழியர்களுக்கும், முகாமைத்துவ அலுவலர்களுக்கும் தொடர்புடைய அரச நிறுவனங்களின் உதவியுடன், கைத்தொழில் உறவுகள் திணைக்களத்தினூடாக விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், பயிற்சிபட்டறைகள், கருத்தரங்குகள் என்பவற்றை நடத்தி வருகிறது. இந்த நிகழ்ச்சிகள் சமூக உரைாடல், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு, ஒழுக்கமான வேலை நடைமுறைகள், பணியிட ஒத்துழைப்பு மற்றும் பணியிட தயார்நிலை என்பன அடங்கலாக பல்வேறு விடயப் பரப்பினை உள்ளடக்கியதாகும். 2023 இல் மொத்தம் 392 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மேற்கூறப்பட்ட விடயப் பரப்பில் தொழில்முயற்சியின் ஏற்றுமதி செயலாக்க வலயத்திற்குள்ளும், வெளியேயும் அமைந்துள்ள தொழில்முயற்சியின் தொழிற்சாலை ஊழியர்களுக்கும், முகாமைத்துவ அதிகாரிகளுக்கும் நடாத்தப்பட்டன.

பாடசாலை மாணவர்களுக்கு தொழில் ஆய்வு நிகழ்ச்சிகள்

அரசாங்கத்தினாலான புதிய கல்வி சீர்திருத்தங்கள் பாடசாலை மாணவர்களுக்கு கோட்பாடு மற்றும் நடைமுறை அறிவு இரண்டையும் கொண்டதான தொழிற் கல்வி வாய்ப்புக்களை வழங்குகிறது. இந்த சீர்திருத்தங்களுக்கு அமைவாக, மேல் மாகாண கல்வித் திணைக்களம், இமுச மற்றும் ஜெற்விங் குரூப் ஒப் ஹொற்றல்ஸுடன் இணைந்து 2023 இல் பாடசாலை மாணவர்களுக்கு ஒரு தொழில் ஆய்வு நிகழ்ச்சியைத் தொடக்கியது.

பிரிவு கடமைகளும், செயற்பாடுகளும்

முதலீட்டை மேம்படுத்தல்

புதிய முதலீட்டாளர்கள் முதலில் தொடர்புகொள்ளும் இடம் முதலீட்டை மேம்படுத்தும் பிரிவாகும். முதலீட்டை மேம்படுத்தும் பிரிவின் முக்கிய கடமையானது ஒரு அபிப்பிராயத்தைக் கட்டியெழுப்புவதாகும். இது இலங்கை பற்றிய ஆக்கபூர்வமான ஓர் அபிப்பிராயத்தைக் கட்டி எழுப்புவதுடன், அதனை இலாபகரமான முதலீட்டுக்கானதோர் இடமாக அடையாளப்படுத்துவதையும் உள்ளடக்கியதாகும். இது வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முதலீட்டைக் கவர்தல், வளர்த்தல் மற்றும் தக்கவைத்துக் கொள்ளல் என்று பல ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை உள்ளடக்கியதாகும்.

முதலீட்டு வரைபடம் மூலம் நாட்டை அடையாளப்படுத்திக் கொள்வதும், ஏற்கனவே உள்ள வாய்ப்புக்களை சாத்தியமான முதலீட்டாளர்களுக்கு வழிகாட்டுவதும் இந்தப் பிரிவின் பொறுப்பாகும். இது முதலீட்டாளர்களைச் சென்றடைவதை (outreach) ஒழுங்காக நடத்துவது. மற்றும் குறிப்பிட்ட துறைகள், சந்தைகள், திட்டங்கள் மற்றும் நிலைபேறான மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கு ஆதரவான தேசிய முன்னுரிமைகளுடன் இணைந்த நடவடிக்கைகளில் கவனம் செலுத்தி, உயர் தரத்திலான முதலீடுகளைக் கவர்வது என்பவற்றை உள்ளடக்கியதாகும்.

பங்குதாரர் முகாமைத்துவம் என்பது பிரிவு சார்ந்த செயற்பாடுகளின் இன்னோர் எடுத்துக்காட்டாகும். இது முதலீட்டை மேம்படுத்துதல் மற்றும் வசதியளித்தலை தங்குதடையின்றி ஆக்குவதற்கு தூதரகங்கள், அமைச்சுக்கள், நிரல் முகவர்கள், மற்றும் ஒழுங்குமுறை அமைப்புகள் என்பவற்றுடன் உறவை விரிவாக்குகிறது.

ஆய்வு மற்றும் கொள்கை ஆலோசனை

இமுச இலுள்ள ஆய்வு மற்றும் ஆலோசனைப் பிரிவானது முன்மொழிதல் மற்றும் வெநேமு கொள்கைளுடன் தொடர்புடையவற்றை மேம்படுத்துவதில் ஆலோசனை வழங்குவது, முதலீடு தொடர்பான கொள்கைச் சீர்திருத்தங்களை இயக்குவதில் முக்கிய சக்தியாகச் செயற்படுவது என்பதில் உறுதியாக உள்ளது. இமுச இன் ஆய்வு மற்றும் ஆலோசனைப் பிரிவானது வணிகச் சூழலை மேம்படுத்துவதை இலக்காகக்கொண்டு, முதலீடு சமபந்தமான விடயங்கள் பற்றி ஆய்வு மேற்கொள்வதுடன், கொள்கை மேம்பாட்டிற்கான ஆலோசனை வழங்குவதற்கும் பொறுப்பானதாகும்.

இந்தக் கட்டமைப்பிற்குள் இமுச இன் ஆய்வு மற்றும் ஆலோசனைப் பிரிவானது கொள்கைச் சூழலை மதிப்பீடு செய்வதுடன், பல்வேறு கொள்கைகள், சட்டம், நடைமுறைகளை மேம்படுத்துவதற்கான சிபாரிசுகளைச் செய்வதற்கான பொறுப்பையும் ஏற்றுள்ளது. இந்த முயற்சிகளாவன இலங்கையின் வணிகச் சூழலை மேம்படுத்துவதில் அரசாங்கத்திற்கு உதவிசெய்து, அதன் மூலம் அவசியமான வெளிநாட்டு மற்றும் உள்ளூர் முதலீடுகளைக் கவர்வதை இலக்காகக் கொண்டுள்ளது.

இப் பிரிவின் பொறுப்புக்களாவன முதலீட்டு வாய்ப்பு சுயவிபரங்களை ஏற்படுத்துதல், முதலீடுகளுக்கான முன்னுரிமைத் துறைகளை இனங்காண்பதற்கு குறிப்பிட்ட நாட்டு, மற்றும் குறிப்பிட்ட துறை ஆய்வுகளை மேற்கொள்ளல், தகவல் அடங்கிய சிறுபிரசுரங்களை உருவாக்குதல், போட்டி மற்றும் ஒப்பீட்டு நன்மைகளின் அடிப்படையில் உத்திகளை வகுத்தல், முதலீடு தொடர்பான தரவுகளைத் தொகுத்தல், பகுப்பாய்தல், மற்றும் பரப்புதல், முதலீட்டுக்கான தடைகளை இனங்காணல் மற்றும் தீர்வு நடவடிக்கைகளை முன்மொழிதல், முதலீடு மற்றும் வர்த்தக பேச்சுவார்த்தைகளில் பங்களித்தல் என்பனவற்றை உள்ளடக்கியதாகும். ஆய்வு மற்றும் ஆலோசனைப் பிரிவு நிறுவனத்தின் பகிரப்பட்ட நோக்கங்களை முன்னேற்றுவதற்கு ஆதரவான பிரிவுகளின் கூட்டு முயற்சிகளைப் பயன்படுத்தி இந்தப் பணிகளில் ஈடுபடுகிறது.

முதலீட்டு மதிப்பீடு

முதலீட்டு மதிப்பீட்டுப் பிரிவுக்கு முதலீடுகளுக்கு வசதியளித்தல் மற்றும் ஒப்புதல் வழங்கும் நடவடிக்கையை குறைந்த பட்ச காலக்கெடுக்குள் துரிதப்படுத்துவது என்ற பொறுப்புக்கள் சுமத்தப்பட்டுள்ளது. தடையின்றி வசதியளிக்கும் நடவடிக்கையானது, விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் ஆரம்ப நிலையிலிருந்து திட்டங்கள் இலங்கையில் நடந்துகொண்டிருக்கும் காலம் வரை உள்ளடக்கியதாகும்.

முதலீட்டு மதிப்பீட்டுப் பிரிவு ஆரம்பித்திலிருந்து முதலீட்டுத் துறைகளை இனங்காண்பது மற்றும் அதன் பணியாளர்களால் திரட்டப்பட்ட அறிவு மற்றும் நடைமுறை அனுபவங்களின் அடிப்படையில் தொழிற்சாலைக் கொள்கைகளை ஏற்படுத்துவதற்கான உள்ளீடுகளுக்கு முன்னுரிமை வழங்குவது என்பதில் முக்கிய பங்கு வகித்துள்ளது. பணிப்பாளர் நாயகத்தின் நேரடி மேற்பார்வையிலும், தலைமைத்துவத்திலும் செயற்பட்டு கொண்டிருக்கும் இப் பிரிவானது அதன் முயற்சிகளில் மூலோபாய வழிகாட்டல்களையும், மேற்பார்வையையும் உறுதி செய்கிறது.

முதலீட்டு மதிப்பீட்டுப் பிரிவின் கடமைகளில் அடங்குவன: முதலீட்டு முன்மொழிவுகளை மதிப்பிடுதல், திட்ட முன்மொழிவுகளைச் சிபாரிசு செய்தல், சுங்கத் தீர்வு மற்றும் ஏனைய விதிவிலக்குகளை வழங்கி கருத்திட்டங்களுக்கு வசதியளித்தல், வணிகத்தின் நோக்கத்தை மாற்றுவதற்கான ஒப்புதல் வழங்குதல், அமைவிடம், உற்பத்திப் பொருள், நடவடிக்கை போன்றவற்றிற்கு ஒப்புதல் வழங்குதல், செயற்பாட்டு பிரச்சனைகளில் தலையிட்டு, தீர்வு வழங்குதல், வெநேமு எதிர்வுகூறல் தயாரித்தல், வெளிநாட்டவர்களுக்கு விசா சிபாரிசு செய்தல், பல்வேறு முதலீட்டாளர்கள் மன்றத்தில் பங்குபற்றுதல், கொள்கை தயாரிக்கும் குழுவில் பங்குபற்றுதல், அமைச்சரவை விஞ்ஞாபனம் தயாரித்தல், நிரல் முகவர்கள் மற்றும் நிரல் அமைச்சுக்களுடன் தொடர்பாடலும், ஒருங்கிணைத்தலும், பல்வேறு அரச முகவர்களின் விசாரணைகளுக்கு சமூகமளித்தலும், பதிலளித்தலும், கருத்திட்ட விபரங்களுடன் முதமு (MIS) யை இற்றைப்படுத்தல் என்பனவாகும்.

திரையிடல் குழு

தொடர்புடைய பிரிவுகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய திரையிடல் குழுவானது ஏற்கெனவே உள்ள மற்றும் தொடர்புடைய முதலீட்டாளர்கள் இருவரும் முதலீடு சம்பந்தமான தீர்மானங்களைக் கூட்டாகவும், திறமையாகவும் எடுப்பதற்கு நிறுவப்பட்டுள்ளது. இந்த அமைப்பானது ஒப்புதல் வழங்கும் நடவடிக்கையைத் துரிதப்படுத்துவதை இலக்காகக் கொண்டது. குழுவுக்கு ஏனைய நிரந்தர குழு அங்கத்தவர்களின் பங்குபற்றுதலுடன் இமுச இன் பணிப்பாளர் நாயகம் தலைமை தாங்குகிறார். இந்தத் திரையிடல் குழுவானது வாரமொருமுறை அல்லது தேவையானபோது கூடுகிறது.

தேவையற்ற தாமதத்தைக் குறைப்பதற்காக ஒப்புதல் நடவடிக்கைகளில் ஈடுட்டுள்ள சகல பிாவுகளின் தலைவா்களும் தீர்மானம் எடுப்பதில் பங்குபற்றுகிறார்கள். வேண்டிய ஒப்புதல் வழங்கும் மட்டம் எதுவென்பதை, அதாவது திரையிடல் குழுவா, தலைவரா, பணிப்பாளர் சபையா அல்லது சம்பந்தமான நிரல் முகவரா என்பதைக் குழு தீர்மானிக்கும். ஒருவருக்கொருவரின் நிபுணத்துவம் மற்றும் அறிவு பரிமாற்றமானது தீர்மானம் எடுப்பதில் ஒரு ஒருங்கிணைந்த தாக்கத்தை உருவாக்கி, செயற்பாட்டை மேலும் பயனுள்ளதாகவும், நிறைவேற்றுவதற்கு இலகுவானதாகவும் ஆக்குகிறது.

முதலீட்டு வசதியளித்தல் ஒருங்கிணைப்புக் குழு (முவஒகு - IFCC)

2022 இல் தாபிக்கப்பட்ட முதலீட்டு வசதியளித்தல் ஒருங்கிணைப்புக் குழுவானது (முவஒகு) கௌரவ முதலீட்டு ஊகக்குவிப்பு இராஜாங்க அமைச்சரின் அனுசரணையின் கீழ் சம்பந்தப்பட்ட நிரல் முகவர்களின் முக்கிய பிரதிநிதிகளுடன் மாதாந்தக் கூட்டத்தை நடத்துகிறது. முதலீட்டு ஒப்பதலுக்கான செயற்பாட்டு காலத்தைக் குறைத்து, மேம்படுத்தப்பட்ட நிறுவனங்களுக்கிடையோன ஒருங்கிணைப்பு மூலம் சமகால மற்றும் சாத்தியமான முதலீட்டாளர்கள் முகம்கொடுக்கும் தடைகளைத் தீர்ப்பதே இந்தக் கூட்டங்களின் முக்கிய இலக்காகும். முதலீட்டாளர்கள் பல முகவர்களிடம் மீண்டும் மீண்டும் வருகைதராது வேண்டிய ஒப்புதல்களைப் பெறுவதற்கு இடமளிப்பதற்காக சம்பந்தப்பட்ட முகவர்கள் ஒன்றகூடி துரிதமான தீர்மானங்களை எடுப்பதற்கான பொது மேடையாக முவஒகு சேவையாற்றுகிறது. முதலீட்டு செயற்பாட்டை நெறிப்படுத்தி, மேம்படுத்துவதற்காக ஒரு சாதகமான முதலீட்டு காலநிலையை உருவாக்கி, நிலைபேறான முதலீட்டு வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக முவஒகு ஒரு முக்கிய பாகத்தை வகிக்கிறது.

முதலீட்டாளர் சேவைகள்

இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 வது பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட முதலீட்டாளர்களுக்காக வழங்கப்படும் சேவைக்கு, பிரதானமாக ஏற்றுமதி மற்றும் இறக்குமதிகளுக்காக வழங்கப்படும் சேவைக்குப் பின்னரான சேவைகளுக்காக முதலீட்டாளர் சேவைகள் பிரிவினால் வசதிகள் வழங்கப்படுகின்றன. மேற்கூறப்பட்ட சேவைகளை வழங்குவதற்காக இந்தப் பிரிவிற்கு ஒன்பது சரக்குப் பொருள் சரிபார்க்கும் நிலையங்களுடன் கொழும்பு உவமை, கட்டுநாயக்க, பியகம, ஹொரக்கல ஏற்றுமதி செயலாக்க வலயங்கள் மற்றும் கண்டி தொழில்நுட்பப் பூங்கா ஆகிய இடங்களில் ஐந்து முதலீட்டாளர் சேவைகள் நிலையங்கள் அமைந்துள்ளன.

முதலீட்டாளர் சேவைகள் பிரிவானது ஏற்றுமதி/இறக்குமதி (CusDecs) ஆவணங்களைத் தயாரித்தல், சரக்குப் பொருள் ஏற்றுமதி/இறக்குமதியைச் சரிபார்த்தல், உற்பத்திக்கான சான்றிதழ் வழங்குதல், இணைந்த குதங்களிலிருந்து பொருட்களை நீக்குவதற்கான ஒப்புதல் வழங்கல், துணை ஒப்பந்தங்கள், பரிமாற்றங்கள், உள்நாட்டு விற்பனைகள் மற்றும் மூலப் பொருட்களையும் இயந்திரங்களையும் கடன் அடிப்படையில் வழங்கல் மற்றும் பொருட்கள் மீள் இறக்குமதி மற்றும் மீள் ஏற்றுமதிக்கான ஒப்புதல் வழங்கல் என்பவற்றிற்குப் பொறுப்பாகும். மேலும், இமுச தொழில்முயற்சிகளினால் முகம்கொடுக்கும் பிரச்சனைகள் சம்பந்தமாக அரச நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுதல், மறைமுக ஏற்றுமதிக்காக கிபொப (GRN) ஐச் செயற்படுத்துதலும், ஒப்புதல் வழங்கலும், ததொ/வசெவெ கருத்திட்டங்களுக்காக வலை சமர்ப்பித்தலை (web submission) செயற்படுத்தல், வெளிநாட்டவர்களுக்கு விசாக்கள் வழங்குவதற்காக குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு சிபாரிசு செய்தல் (வலய தொழில்முயற்சிகளுக்கு மாத்திரம்) என்பன இப் பிரிவினால் வழங்கப்படும் ஏனைய பிரத்தியேகமான கடமைகளாகும்.

கருத்திட்ட கண்காணிப்பு

கருத்திட்ட கண்காணிப்புப் பிரிவின் பிரதாமான கடமை இமுச யின் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து. வர்த்தக செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்களின் செயலாற்றுகையைப் பரிசீலனை செய்வதாகும். இந்த நடைமுறையானது இமுச யினால் ஒப்புதல் வழங்கப்பட்ட வர்த்தக செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள மொத்த காலஎல்லையை உள்ளடக்கிய முறையாகவும், தொடர்ந்த நடவடிக்கையாகவும் உள்ளது. இமுச யின் சட்டத்தின் 16 மற்றும் 17 ஆம் பிரிவுகள் இரண்டினதும் கீழ் ஒப்புதல் வழங்கப்பட்ட நிறுவனங்களின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிசார் கூற்றுக்கள், அரையாண்டு செயலாற்றுகைக் கூற்றுக்கள் மற்றும் அத்தகைய கருத்திட்டங்கள் பற்றிய தொழில்வாய்ப்புக்களின் புள்ளி விபரங்கள் போன்றவற்றின் அடிப்படையில் கால இடைவெளியில் சேகரிக்கப்பட்ட தகவல்களைக் கொண்டு, பரிசீலிக்கப்படுகின்றன.

பிரிவினால் கையாளப்படும் ஏனைய முக்கிய விடயங்களாவன: வரிச் சலுகைக்கு தகைமை பெற்றுள்ள நிறுவனங்களுக்கு வரிச் சான்றிதழ் வழங்குதல், கருத்திட்டத்தின் சுற்றோட்டத்தின் முடிவை எட்டியுள்ள கருத்திட்ட ஒப்பந்தங்களையும், இமுச யின் ஒப்பந்தத்திலுள்ள நிபந்தனைகளுக்கு இணங்காதவற்றையும் உரிய முறையில் முடிவுறுத்தல், இமுச சட்டத்தின் 16 மற்றும் 17 ஆம் பிரிவுகள் இரண்டின் கீழும் கருத்திட்டங்களைப் பரிசீலனை செய்வதற்கு சம்பந்தப்பட்ட பிரிவுகளினால் தீர்மானங்கள் எடுப்பதற்கு செயற்பாட்டு அறிக்கைகளை வழங்குதலும், சாதாரணமாக முடிவுறுத்தலுடன், ஒப்பந்தங்களை முடிவுறுத்தியுள்ள கருத்திட்டங்களின் பட்டியல் ஒன்றை, அந்த நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்த வெநாவஅ (FCBU) ஐ மீளப்பெறுவதற்கு சம்பந்தப்பட்ட கொமர்ஷல் வங்கிகளுக்கு காலாண்டு ரீதியாக சமர்ப்பித்தல் என்பன ஆகும்.

கருத்திட்டம் அமுல்படுத்தல்

கருத்திட்டம் அமுல்படுத்தல் பிரிவினுடைய முக்கியமான நோக்கமானது இமுச உடன் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்திலுள்ள நிபந்தனைகளை அமுல்படுத்தல் நிகழ்ச்சியுடன் இணைங்கியதாக்கி, கருத்திட்டங்களுக்கு வெற்றிகரமான வசதிகளை உறுதிப்படுத்துதலாகும். பிரிவின் முக்கிய கடமையானது ஒரு ஒப்பந்தம் கைச்சத்திடப்பட்ட பின்னர் அந்தக் கருத்திட்டம் வணிகமயமாக்கல் நிலையை விரைவில் அடையக்கூடியதாக முதலீட்டாளர்களுக்கு வசதியளித்தலாகும். ஒரு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதும், கஅ பிரிவானது கருத்திட்டங்கள் தொடரக்கூடியவையும், சாத்தியமானவையுமென உறுதிப்படுத்தவதற்கு ஒரு ஒழுங்கான அடிப்படையில் அவர்களுக்கு அறிக்கைகளைச் சமர்ப்பிக்கவேண்டும் என்பதை முதலீட்டாளர்களுக்குத் தெரியப்படுத்துவதற்காக அடிப்படை வழிகாட்டல்கள் வழங்குகிறது.

மேலும், கஅ பிரிவானது கருத்திட்டங்களை அமுல்படுத்துவதற்கான தாமதத்திற்கு ஏனைய நிரல் நிறுவனங்களுக்குள்ள பிரச்சனைகளை/தடைகளை அடையாளங்காணல், அவ்வாறான பிரச்சனைகளைச் சமாளிப்பதற்கு முதலீட்டாளர்களுக்கு உதவி செய்தல், கருத்திட்டத்தின் உண்மையான நிலையை உறுதி செய்வதற்கு விசாரணை செய்தலும், பரிசீலனை செய்தலும், புதிய கருத்திட்டங்களுக்கு ஆரம்ப முதலீட்டாளர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துதல், கருத்திட்ட அமுலாக்க காலத்தை நீடிப்பதற்கு ஒப்புதல் வழங்குதல், இமுச யினால் பராமரிக்கப்படும் முகாமைத்துவ தகவல் முறைமைக்கு (முதமு - MIS) கருத்திட்டங்களின் நிலை மாற்றங்களை இற்றைப்படுத்துதல், கருத்திட்டங்களின் வணிக நடவடிக்கைகளின் தொடக்கத்தை அடையாளம் காணல், அமுல்படுத்தும் செயலாக்கங்களில் தோல்வியடைந்த அல்லது கைவிடப்பட்ட கருத்திட்டங்களை இனங்கண்டு, தொடர்புடைய கோப்புக்களை ஒப்பந்தத்தை முடிவுறுத்தலுக்காக கருத்திட்ட கண்காணிப்புப் பிரிவிற்கு மாற்றுதல் என்பவற்றைச் செயற்படுத்துகிறது.

சட்டமுறை

சட்டமுறைப் பிரிவின் பிரதான பாகமானது இமுச சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் முதலீட்டிற்குப் பொருந்தக்கூடிய சட்ட ஆட்சியில் முதலீட்டாளர் தொடர்பான சேவைகளை வழங்குவதும், திட்ட ஒப்புதலுக்கான வசதியளித்தல் என்பதுமாகும். இந்தப் பிரிவானது இமுச க்கு எதிரான நிறுவன வழக்குகளில் கூட்டாண்மைச் சட்ட விவகாரங்களில் அதன் பங்கைப் பொறுத்து, கடமைகளை நிறைவேற்றுவதுடன், அதன் சட்ட நலன்களைப் பாதுகாப்பதற்காக இமுச சார்பாக சட்ட நடவடிக்கைகளை ஆரம்பிக்கிறது.

முதலீட்டாளர்களுக்கு வசதியளிக்கும் சட்ட சேவைகள் ஆலோசனை இயல்புடையதாகும். இது இமுச சட்டம் 17 ஆம் பிரிவின் கீழ் கருத்திட்டங்களைத் தாபிப்பதற்குப் பொருந்தக்கூடியதாக இலங்கையில் சட்ட ஆட்சி பற்றிய தகவல்களைப் பரப்புவதை உள்ளடக்கியதாகும். நிதிச் சட்டத்தின் கீழ் மூலோபாய அபிவிருத்தி கருத்திட்டங்கள் சட்டம் மற்றும் மைய விதிமுறைகள் இலங்கையில் கருத்திட்டங்களை நிறுவுவதற்கு கம்பனிகளின் நிறுவனத்தின் சரத்தினைப் பார்வையிட்டு, ஒப்புதல் வழங்கல், மேலே உள்ளவை தவிர, சட்டமுறைப் பிரிவானது இமுச க்குச் சொந்தமான காணிகளை முதலீட்டாளர்கள் தங்களுடைய தொழிற்சாலைகளை அமைப்பதற்கு வழங்குவதன் மூலம் முதலீட்டாளர் தொடர்பான சேவைகளை விரிவுபடுத்துவதில் ஈடுபடுகிறது.

தொழில்நுட்ப சேவைகள்

தொழில்நுட்ப சேவைகள் பிரிவானது இமுச யினால் முகாமைத்துவம் செய்யப்படும் ஏற்றுமதி செயலாக்க வலயங்கள் மற்றும் கைத்தொழில் பூங்காக்கள் சம்பந்தமான கட்டமைப்பு அபிவிருத்திகளின் செயல்திட்டத்தின் ஒட்டுமொத்த கட்டுப்பாட்டிற்கான முக்கிய பொறுப்பைக் கொண்டுள்ளது. இப் பிரிவின் ஏனைய முக்கிய பொறுப்புக்களாவன புதிய முதலீட்டு வலயங்களுக்கான களத்தை அடையாளம் காணுதல், புதிய முதலீட்டு வலயங்களைத் திட்டமிட்டு அபிவிருத்தி செய்தல், ஆரம்ப அபிவிருத்தி வேலைளை மேற்கொள்ளல், நீர் வழங்கல், கழிவு நீர் அகற்றல் மற்றும் திண்மக் கழிவுகள் அகற்றல் போன்ற சேவைகளைச் செயற்படுத்துவதற்கும், பராமரிப்பதற்குமான தொழில்நுட்ப உதவி வழங்கல், காலியான காணிகளை அடையாளம் கண்டு, புதிய கருத்திட்டங்களைத் தாபிப்பதற்காக விளம்பரம் செய்தல், குறைவான செயல்திறன் காரணமாக அரசாங்கத்தினால் கையகப்படுத்தப்பட்ட காணிகளில் புதிய கருத்திட்டங்கள் அமுல்படுத்தல் என்பனவாகும்.

மேலும் இப் பிரிவானது சூழல் பிரச்சனைகளையும், பொது மக்களின் அக்கறைகள் தொடர்பான நிலைமைகளை எதிர்கொண்டுள்ள கைத்தொழில் வலயங்களைப் பார்வையிட்டு, தொழில்நுட்ப விடயங்கள் சம்பந்தமான சிபாரிசுகளை வழங்கும் கடமையையும் மேற்கொள்கிறது.

பொறியியல் ஒப்புதல்கள் மற்றும் விசேஷ கருத்திட்டங்கள்

பொறியியல் ஒப்புதல்கள் மற்றும் விசேஷ கருத்திட்டங்கள் பிரிவானது (பொஒ மற்றும் விக) முதலீட்டாளர் வசதியளித்தல் என்பதன் இரண்டு முக்கிய விடயங்களான பொறியியல் ஒப்புதல்கள் மற்றும் காணி சம்பந்தப்பட்ட வசதியளித்தல் என்பவற்றில் முக்கியமாக ஈடுபட்டுள்ளது.

பிரிவின் பொறியியல் ஒப்புதல்கள் பகுதியானது நான்கு முக்கிய சேவைகளை வழங்குவதற்காக இமுச யின் ஒழுங்குபடுத்தும் கரமாகத் தொழிற்படுகிறது: அவையாவன அமைவிட ஒப்பதல் வழங்கல், கட்டட அமைப்பு ஒப்புதல் வழங்கல், சுங்க வரியற்ற அடிப்படையில் நிர்மாணம் சம்பந்தப்பட்ட பொருட்களை இறக்குமதி செய்வதற்கான அளவுச் சான்றிதழ் வழங்கல் மற்றும் இமுச சட்டம் 17 வது பிரிவின் கீழ் இமுச இனால் ஒப்புதல் வழங்கப்பட்ட கருத்திட்டங்களுக்கு இணங்கச் சான்றிதழ் வழங்கல் என்பனவாகும்.

காணி மற்றும் சம்பந்தப்பட்ட வசதியளித்தல் பிரிவானது பல சேவைகளை வழங்குவதற்குப் பொறுப்பானது. அவை அரச/தனியார் காணிகளை முதலீட்டு வலயங்கள் தாபிப்பதற்காகக் கையகப்படுத்தல் மற்றும் அந்நியப்படுத்துதலை மேற்கொள்ளல், முதலீட்டுக் கருத்திட்டங்களைத் தாபிப்பதற்கு முதலீட்டாளர்கள் காணிகளைப் பெறுவதற்கு வசதியளித்தல், இமுச வலயங்களுக்கு வெளியே அமைந்துள்ள இமுச க்குச் சொந்தமான காணிகள் பற்றிய தரவுத் தளத்தைப் பராமரித்தல், காணி சம்பந்தமான விடயங்கள் பற்றி இமுச யின் சட்டப் பிரிவு மற்றும் ஏனைய பிரிவுகளுக்கு உதவுதல், காணி சம்பந்தமான விடயங்கள் பற்றி தொடர்புடைய நிரல் முகவர்கள் மற்றும் அமைச்சுக்களுடன் ஒருங்கிணைத்தல் என்பன அடங்கலாகும்.

இமுச வலயங்களின் அபிவிருத்திக்கு வசதியளித்தல்

முன்மொழியப்பட்ட முதலீட்டு வலயங்கள் அரச கொள்கைத் தீர்மானங்கள் மற்றும் அரச உத்தரவுகளின் பேரில் அமுல்படுத்தப்படும். அதன்படி, வலயங்களின் வருமானத்திற்காக காணிகளைக் கையகப்படுத்தியதைத் தொடர்ந்து, முன்மொழியப்பட்ட புதிய வலயங்கள் தாபிப்பதற்கு அமைச்சரவை ஒப்புதல் பெறுவது பொஒ மற்றும் விக பிரிவினால் கையாளப்படும் இன்னுமோர் முக்கிய கடமையாகும்.

அத்துடன் புதிய வலயங்களைத் தாபிக்கும்போது தேசிய நீர் வழங்கல், வடிகால் அமைப்புச் சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை, இலங்கை மின்சார சபை போன்ற நிரல் அமைச்சுக்கள் மற்றும் பங்குதாரர் முகவர்களுடன் ஒருங்கிணைந்து ஒப்புதல்களைப் பெற்றுக்கொள்ளல் அடங்கலாக வலயங்களின் எல்லை வரை கட்டமைப்புக்களை வழங்குதல், முன்னேற்ற அறிக்கை போன்றவை வழங்கல் என்பன தற்போது பொஒ மற்றும் விக பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது.

சூழல் முகாமைத்துவம்

இமுச யின் எல்லைக்குட்பட்ட கருத்திட்டங்கள் தொடர்பான சூழல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் சம்பந்தமான கடமைகள் சூழல் முகாமைத்துவப் பிரிவினால் நிறைவேற்றப்படுகின்றன. இப் பிரிவின் பொறுப்புக்களாவன சுற்றுச் சூழல் பாதுகாப்பு மற்றும் இமுச யின் கருத்திட்டங்களின் இணக்கத்தை உறுதிசெய்வதை நோக்கமாகக் கொண்ட பல்வேறு முக்கியமான பணிகளை உள்ளடக்கியதாகும்.

முதலாவதாக, இப் பிரிவிற்கு புதிய கருத்திட்டங்கள் முன்மொழியப்பட்ட முயற்சிகள் சுற்றுச் சூழல் தரங்களுக்கு அமைவாக உள்ளன என்பதை உறுதிப்படுத்துவதுடன், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் (CEA) உடன்பாட்டுடன் சூழல் அனுமதி வழங்கல் பணிக்கப்பட்டுள்ளது. அத்துடன் செயற்பாட்டு கருத்திட்டங்களுக்காக சுற்றுச் சூழல் பாதுகாப்புக்களை நிலைநாட்டுவதற்கு மசூஅ யின் (CEA) ஆலோசனையுடன் சூழல் பாதுகாக்கும் அனுமதிப்பத்திரங்கள்

சூபாஅ - EPL) வழங்கல் பிரிவினால் கட்டளையிடப்பட்டுள்ளது. மேலும் இப் பிரிவானது தொலைத் தொடர்புக் கோபுரங்களை நிறுவுவதற்கான சுற்றாடல் பரிந்துரைகளை (ERR) தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்திற்கு (தொஒஆ - TRC) வழங்குகிறது.

பிரிவின் ஏனைய முக்கிய பொறுப்புக்களாவன சுற்றுச்சூழல் குறைகளை நிவர்த்தி செய்தல், மாசுபடுதல் பற்றிய முறைப்பாடுகளை விசாரணை செய்தல், தேவையான மாசு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை செயற்படுத்துவதன் மூலம் தீர்மானங்களை எளிதாக்குதல், ஏற்றுமதி செயலாக்க வலயங்களில் வெளியேற்றப்பட்ட தொழில்துறை கழிவுகளைக் கவனித்தல் மற்றும் நிறுவப்பட்ட தரத்தைக் கடைப்பிடிப்பதை உறுதி செய்வதன் மூலம் சுற்றுச்சூழல் சீரழிவுக்கு எதிராகப் பாதுகாத்தல் என்பனவாகும்.

பிரிவானது இந்த உடன்படிக்கைகளில் கையொப்பமிட்ட இலங்கையின் அர்ப்பணிப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் சர்வதேச சுற்றுச்சூழல் மாநாடுகள் மற்றும் இரசாயன ஒழுங்குமுறைகளுக்கு ஆப்பணிக்கப்பட்ட தேசிய குழுக்களுக்கும் மேலும் பங்களிக்கிறது. இத்துடன், சூழல் முகாமைத்துவப் பிரிவானது முறையான கழிவுநீர் சுத்திகரிப்பு மற்றும் திண்மக் கழிவுகளை அகற்றுதலுக்கு இமுச யின் கைத்தொழில்களுக்கு முகாமைத்துவ மற்றும் வடிவமைப்பு தொழில்நுட்ப வசதிகளை வழங்குதவதற்கும், சுபாம/ஆசஆ (EIA/IEE)ஆய்வுகளை மேற்கொள்வதில் இமுச கைத்தொழில்கள்/ கருத்திட்டங்களுக்கு உதவுவதற்கும் உறுதிபூண்டுள்ளது.

தகவல் தொழில்நுட்பம்

தகவல் தொழில்நுட்பப் பிரிவிற்கு மூலோபாயம் செய்தல், உருவாக்குதல், கட்டுமானம், மதிப்பிடல் மற்றும் இமுச க்கான ததொ தீர்வுகளை செயற்படுத்துதல் என்பன ஒப்படைக்கப்பட்டுள்ளது. பெறுதல், வரிசைப்படுத்தல் மற்றும் நிறுவனத்தின் ததொதொ (ICT) வளங்களைப் பராமரித்தல் என்பவற்றை மேற்பார்வை செய்வதுடன், பிரிவானது அதன் பயனர்களின் அனைத்து ததொ தேவைகளையும் பூர்த்திசெய்வதற்காக 24 மணி நேரமும் சேவை வழங்குவதை உறுதிப்படுத்தி, தொடர்பாடலுக்கான வன்பொருள் மற்றும் மென்பொருள் அடங்கிய ததொ (IT) கட்டமைப்பை வழங்குவதற்காக கூட்டாண்மை வலையமைப்பை நிர்வகிக்கிறது.

பிரிவின் முக்கியமான பொறுப்புக்கள் இமுச யின் ததொதொ (ICT) உட்கட்டமைப்பை நிறுவப்பட்ட, மீண்டும் செய்யக்கூடிய நடவடிக்கைகள் மூலம் சகல பயனர்களுக்கும் நிலையான தொழில்நுட்ப சூழலை நிர்வகிப்பதை உறுதிப்படுத்துவதாகும். இது வடிவமைப்பு, அபிவிருத்தி, அமுல்படுத்தல், இமுச யின் அதிகாரபூர்வ வெப்தளம், தொழில்முயற்சிகளுக்கு நிகழ்நிலை ஒப்புதல் மேடை, கொடுப்பனவு முறைமைகள், முகாமைத்துவ தகவல் முறைமைகள், தானியக்கி கருவிகள், மொபைல் பயன்பாடுகள், வெளிப்புற நிறுவனங்களுடனான இடைமுகம் அடங்கலாகப் பல்வேறு கணனி அமைப்புக்களைப் பராமரித்தல் என்பவற்றை உள்ளடக்கியதாகும். அத்துடன், இப் பிரிவானது மின்னஞ்சல் நிர்வாகம், வலைப்பின்னலை அணுகல், சீசீரீவீ (CCTV) கண்காணிப்பு, வீடியோ மாநாட்டு திறன்கள், உள்ளக மற்றும் வெளியக பங்குதாரர்கள் இருவருக்கும் பயனர் உதவி, எஸ்எம்எஸ் (SMS) நுழைவாயில் மற்றும் வளங்கள் கண்காணிப்பு என்பன அடங்கலாக விரிவான ததொ சேவைகளை நிறுவனத்திற்கு வழங்குகிறது.

மேலும், வலைப்பின்னல், முறைமைகள், கூட்டாண்மை தரவுத்தளங்கள் என்பவற்றிற்கு பயர்வோல்ஸ், வைரஸ் தடுப்பு மென்பொருள், ஒருமுறை கடவுச்சொல் (OTP) அங்கீகாரம், பயனர் அணுகல் கட்டுப்பாடுகள், உள்நுழைவு சான்றிதழ்களின் முகாமைத்துவம் மற்றும் முக்கியமான தகவல்களைப் பாதுகாப்பதற்கு இஇபாமை (SLCERT) மூலம் பாதுகாப்பு மதிப்பீடுகளை நடத்துதல் போன்ற நியம பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பயன்படுத்துதல் என பாதுகாப்பிற்கு முன்னுரிமை வழங்குகிறது.

ஊடகம் மற்றும் பிரச்சாரம்

ஊடகப் பிரிவின் நோக்கமானது இலங்கை முதலீட்டுச் சபையின் முக்கிய மூலோபாய தொடர்பாடல் குறிக்கோள்களை அமுல்படுத்துவதாகும். இலங்கை பற்றி ஒரு ஆக்கபூர்வமான அபிப்பிராயத்தைக் கட்டியெழுப்புவதுடன், முதலீட்டுக்கான வாய்ப்புக்கள் மற்றும் இலங்கையை முதலீடுகளுக்கான முதலாவது தெரிவாக மேம்படுத்துதல் பற்றிய தகவல்களைப் பரப்புகின்ற முக்கிய பாகத்தை வகிப்பதும் அதன் முக்கிய பொறுப்பாகும்.

பிரிவினது கடமைகளாவன, இமுச யின் நோக்கு மற்றும் பணியைப் பரப்புதல், இலங்கையின் குறியீட்டு நிலைப்படுத்தலை நிறுவுதல், தேசத்தைக் கட்டியெழுப்பும் சூழலில் இமுச யை குறியிடல், இமுச யின் சந்தைப்படுத்தல் மேம்பாட்டு திட்டங்களின் அடிப்படையில் ஒரு ஊடக மூலோபாய திட்டத்தை வழங்குதல், தேவைப்படும்போது மூலோபாய உத்திகள், உள்ளக தொடர்புகள் உத்திகளை வழங்குதல் மற்றும் அமுல்படுத்துதல், இமுச யின் அதிகாரபூர்வ ஊடக தொடர்பாளராகப் பணிபுரிதல் மற்றும் இமுச யின் சகல ஊடக தொடர்புகளுக்கும் பொறுப்பாக இருத்தல் என்பவனவாகும்.

வலய முகாமைத்துவம்

முதலீட்டாளர் வசதியளித்தலை அதிகமாக்குவதை நோக்கமாகக் கொண்டு, இலங்கை முதலீட்டுச் சபையானது 15 ஏற்றுமதி செயலாக்க வலயங்களையும்/கைத்தொழில்பூங்காவையும் இலங்கையைச் சுற்றி தாபித்துள்ளது. இவை இமுச யின் வலய முகாமைத்துவப் பிரிவினால் நிர்வகிக்கப்படுகிறது.

ஒரு சாதகமான சூழலை எளிதாக்கும் வகையில் வலய முகாமைத்துவம் முதலீட்டாளர்களுக்கு பல்வேறு சேவைகளை வழங்குகின்றது. இவை நம்பகமான உட்கட்டமைப்பு வழங்கல் (மின்சாரம், நீர் சுத்திகரிப்பு, கழிவு நீர் சுத்திகரிப்பு, செல்வதற்கான பாதை போன்றவை), பொறியியல் ஒப்புதல்களும் வழிகாட்டல்களும், ஏற்றுமதி/இறக்குமதி ஆவணப்படுத்தலை செயற்படுத்துதலும் சரக்குப் பொருட்களைச் சரிபார்த்தலும், ஆலோசனை சேவைகளும் மற்றும் ஆரோக்கியமான கைத்தொழில் உறவுகளைப் பராமரிப்பதற்கான வழிகாட்டல்களும், தீயணைப்பு உட்பட 24 x 7 தீ பாதுகாப்பு சேவை, கண்காணிப்பு மற்றும் ஆலோசனை சேவைகள், 24 x 7 ஒட்டுமொத்த பாதுகாப்பு, சூழல் கண்காணிப்பு, ஆலோசனை மற்றும் ஆய்வக சேவைகள், சரிபார்த்தலுடன் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி சரக்குகளைக் காலி செய்தல் என்பன அடங்கலாகும்.

நிறுவனங்களுக்கு சேவைகளை வழங்குவதைத் தாண்டி, இமுச யின் வலய முகாமைத்துவம் இமுச வலயங்களை தேசிய கொள்கையுடன் இணைந்தும், நிலைபேறான அபிவிருத்திக்கான மூலோபாயமாகவும் பசுமை வலயங்களாக மாற்றுவதற்கான திட்டங்களையும் மேற்கொண்டுள்ளது. ஏற்றுமதி செயலாக்க வலயங்களுக்கு பசுமை அந்தஸ்தை அடைவதன் மூலம் இமுச ஆனது இந்த வலயங்களின் கவர்ச்சியை அதிகரித்து, அதிக கோரிக்கைகளை ஈர்ப்பதற்கான இணக்கத்தை மேம்படுத்தி, நிலைபேறான சக்தியின் பயன்பாட்டை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டுள்ளது. இந்த முன்முயற்சியானது தேசிய அளவில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புகள் (NDC) மற்றும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுடன் (SDG) ஒத்துப்போவதுடன், சுற்றுச்சூழல் நிலைபேறானதன்மை. பதிலளிக்கக்கூடிய அபிவிருத்திக்கான உறுதிப்பாடு என்பவற்றை நிரூபிக்கிறது.

கைத்தொழில் உறவுகள்

இமுச யின் கைத்தொழில் உறவுகள் பிரிவானது இமுச தொழில்முயற்சிகளுக்குள் அதிக செயல்திறன் மற்றும் உற்பத்தித்திறனுக்கு உகந்த வகையில் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட கைத்தொழில் உறவுகளைப் பராமரிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த இலக்கை அடைவதற்கு கைத்தொழில் உறவுப் பிரிவானது பல கடமைகளைக் கையாளுகிறது.

இந்தக் கடமைகள் தொழில் முகாமைத்துவ ஒத்துழைப்பின் பராமரிப்பை மேம்படுத்துதல், இமுச யின் அதிகார வரம்புக்குக் கீழ் வரும் தொழில்முயற்சிகளில் கைத்தொழில் அமைதி மற்றும் ஒத்திசைவு மற்றும் அதிக உற்பத்தித் திறன், தேவையான இடத்து இமுச யின் தொழில்முயற்சிகளின் முகாமைத்துவம் மற்றும் ஊழியர்களுக்கு தொழில் சட்டங்கள்/ஒழுங்குமுறைகள் மற்றும் கைஉ (IR) நடைமுறைகள் பற்றிய ஆலோசனையும், வழிகாட்டல்களும் வழங்குதல், ஏசெவ களில் தொழிற்படும் இமுச தொழில்வாய்ப்பு சேவைகள் பகுதிகள் ஊடாக முதலீட்டாளர்கள் தங்களுடைய மனித சக்தி தேவையைப் பூர்த்திசெய்வதற்கு உதவுதல், நிகழ்நிலை வேலை வங்கி போர்டல் மற்றும் ஆட்சேர்த்தல் உதவி நிகழ்ச்சிகள் ஒழுங்குசெய்தல், முகாமைத்துவ ஒத்துழைப்பின் பராமரிப்பை மேம்படுத்துவதன் மூலம் ஒரு பலன்தரக்கூடிய தொழில்சக்தியைப் பராமரிப்பதற்கு வசதியளித்தல், தொழிற் சங்க நடவடிக்கைகளுக்கு பிரதானமாக ஒத்திசைவு மற்றும் மத்தியஸ்தம் மூலம் சமூக உரையாடலை மேம்படுத்தல் என்பவற்றை உள்ளடக்கியதாகும்.

உள்ளக கணக்காய்வு

உள்ளக கணக்காய்வானது இலங்கை முதலீட்டுச் சபைக்குள் ஒரு சுதந்திரமான, புறநிலை உத்தரவாதம், ஆலோசனை செயற்பாடாக தொழிற்படும் அதேவேளை, மதிப்பை அதிகரிக்கச்செய்து, ஒரு முறையான, ஒழுக்கமான மதிப்பீடுகள் மூலம் நிறுவனத்தின் செயற்பாடுகளைச் சீர்ப்படுத்துகிறது. உள்ளக கணக்காய்வுப் பிரிவானது இமுச யின் ஒட்டுமொத்த கட்டுப்பாட்டு முறைமையின் ஒரு பகுதியாக இருந்து, தவறுகளைக் கண்டுபிடிப்பதுடன், தடுக்கும் கட்டுப்பாட்டு அமைப்பாகவும் தொழிற்படுவதுடன், கணக்காய்வின் முடிவுகளின் அடிப்டையில் சாத்தியமான சீர்ப்படுத்துதல்களை முன்மொழிகிறது.

உள்ளக கணக்காய்வுப் பிரிவானது பல்வேறு கடமைகளை மேற்கொள்கிறது. சொத்துக்களின் இருப்பையும், அந்த சொத்துக்களுக்குச் சரியான பாதுகாப்பையும் சரிபார்த்தல், செயற்பாடுகளின் உள்ளக கட்டுபாடுகளின் போதுமான தன்மையை மதிப்பீடு செய்தல், செயற்பாடுகளின் உள்ளக கட்டுப்பாடுகளைச் சீர்ப்படுத்தலுக்கான பரிந்துரைகளை வழங்குதல், சட்டங்கள், விதிகள் மற்றும் விதிமுறைகள், கொள்கைகள், செயல்முறைகள், ஒப்பந்தக் கடமைகள் போன்றவற்றின் இணக்கத்தை மதிப்பிடல் மற்றும் முறைப்பாடு செய்யப்பட்ட மோசடி, துஷ்பிரயோகம், விரயம், தவறான நடத்தை போன்றவற்றை விசாரணை செய்தல் என்பன இதில் அடங்கும்.

மேலும் நிதிசார் மற்றும் முகாமைத்துவ அறிக்கையிடலுக்கான நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துதல், கணக்காய்வுக் குழுவுக்கு அறிக்கையிடல் மற்றும் கணக்காய்வுக் குழு கூட்டத்தை நடத்துதல், கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடன்

தொடர்ந்து ஒருங்கிணைப்பை வைத்துக்கொள்ளல், சட்டரீதியான அறிக்கையிடலை சரியான நேரத்தில் மேற்கொள்ளல் (கணக்காய்வாளர் தலைமை அதிபதி, பொதொகு (COPE), திறைசேரி, மற்றும் நிரல் அமைச்சுக்கள் போன்றவை) ஆகிய ஏனைய கடமைகளையும் உள்ளடக்கியதாகும். உள்ளக கணக்காய்வானது கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அறிக்கையிடப்பட்ட இவை முனைப்பழிவுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்தில் குறிப்பிடப்பட்ட பிரச்சனைகளைத் தீர்ப்பதில் தீவிரமாக ஈடுபட்டிருந்ததுடன், 2023 ஆம் ஆண்டுக்கான முனைப்பழிவற்ற அபிப்பிராயத்தைப் பெற்றுக்கொள்வதில் முகாமைத்துவத்தற்கு உதவியதில் வெற்றிகண்டுள்ளது.

மேற்குறித்த கடமைகளுக்கு மேலாக முகாமைத்துவத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய விசேட ஆய்வுகளை/ விசாரணைகளை மேற்கொண்டு, பொருத்தமான ஒழுக்காற்று மற்றும் பரிகார நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் பொது நலன்/சொத்துக்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் தவறுகளை/குறைகளை அறிக்கையிடுவது உள்ளக கணக்காய்வு பிரிவின் பொறுப்பாகும். இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது உள்ளக கணக்காய்வானது நேரடியாகத் தலைவர்/பணிப்பாளர் நாயகத்திற்கு அறிக்கையிடுவதன் மூலமும், அதன் நடவடிக்கைகளை மீளாய்வதற்கு கணக்காய்வுக் குழுவுடன் தொடர்ந்து ஒருங்கிணைவது மூலமும் உள்ளக கணக்காய்வு சுயாதீனத்தைப் பேணுகிறது.

மனித வளங்கள்

மனித வள விவகாரப் பிரிவின் பிரதான பொறுப்பு சவாலான பொருளாதார மற்றும் சமூக நிலைமைகளின் மூலம் ஊழியர்களை வழிநடத்தும்போது, அவர்களில் உள்ள சிறந்ததை வெளிக்கொண்டு வருவதற்கு அவர்களை ஆதரிப்பதாகும். மேலும் மவ ஆனது இன்னும் கூடுதலான அதிகாரமளிக்கும் நிறுவன கலாச்சாரம் மற்றும் ஊழியர்களையும், வணிகத்தையும் ஆதரிப்பதற்கான வழிகளைக் குறிப்பாக, தொழில்நுட்பத்தைத் தழுவும் பகுதிகள், திறனை உருவாக்குதல், சுறுசுறுப்பான பணிச் சூழலை உருவாக்குதல் என்பவற்றில் தொடர்ந்தும் தனது பங்கை ஆராய்ந்து வருகிறது. இவை அனைத்தும் ஊழியர்களை அவர்களின் சிறந்த பதிப்புக்களாக மாற்றுவதற்கு உதவுகின்றன.

நிர்வாகம்

நிர்வாகப் பிரிவு இமுச யில் ஒரு முக்கிய பங்கை வகிப்பதுடன், நிறுவனத்தின் இலக்குகள் மற்றும் நோக்கங்களை அடைவதற்காக பிரிவுகளின் சீரான செயற்பாட்டிற்கு தளவாட ஆதரவை வழங்குகிறது. நிர்வாகப் பிரிவின் கீழ் இயங்கும் ஐந்து துணைப் பிரிவுகளாவன: களஞ்சியம், வழங்கல் பகுதி, போக்குவரத்துப் பகுதி, பராமரிப்புப் பகுதி, தபால் பகுதி மற்றும் பொது நிர்வாகம் என்பனவாகும்.

துணைப் பகுதிகளால் மேற்கொள்ளப்படும் முக்கிய கடமைகளாவன: இது இமுச க்கு உள்ளேயும், வெளியேயும் இணைப்பை விரைவுபடுத்தும் உள் மற்றும் வெளித் தபால்களைக் கையாளுதல், தலைமை அலுவலகத்தில் அலுவலக உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதன் மூலம் இடைவிடாத செயல்முறையைப் பராமரித்தல் பழுது மற்றும் பராமரிப்பைக் கவனித்தல், தலைமை அலுவலகத்தில் அலுவலகத் தளங்களின் பொதுவான பராமரிப்பு நிலையான சொத்துக்களுக்கான காப்பீட்டுத் தொகையை வாங்குதல், அலுவலக இடங்களை குத்தகைக்கு எடுத்தல்/விடுதல், மின்சாரம், நீர், தொலைத்தொடர்பு, போக்குவரத்து, மற்றும் ஏனைய சேவை வழங்குனர்களுக்குச் செலுத்துவதற்கான ஆவணங்களைத் தயாரித்தல் வாகனங்கள் கொள்ளல் மற்றும் அகற்றல், வாகனத் தொகுதியை முகாமைத்துவம் செய்தல், கருத்திட்ட கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக போக்குவரத்து வசதிகளை வழங்கல், வாகனங்களைப் பராமரிப்பதற்கு வலயங்களுக்கு உதவுதல், நிறுவனங்களுக்கு வேண்டிய பொருட்களையும் சேவைகளையும் கொள்ளல் (காகிதாதிகள், அலுவலக தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள், ஆதரவு சேவைகள் போன்றவை) மற்றும் தலைமை அலுலகத்திலுள்ள பொது களஞ்சியத்தைப் பராமரித்தல் என்பனவாகும்.

பாதுகாப்பு சேவை

இலங்கை முதலீட்டுச் சபையின் பாதுகாப்பு மற்றும் தீ பிரிவானது இமுச வலயங்களின், அவற்றுள் அமைந்துள்ள தொழில்முயற்சிகள் அடங்கலாக, சொத்துக்கள் மற்றும் மனித உயிர்களுக்கு ஆபத்தின்மை மற்றும் பாதுகாப்பு என்ற அடிப்படையான பாகத்தை வகிக்கிறது. ஏற்கெனவே உள்ள இமுச யின் முதலீட்டாளர்கள் பாதுகாப்பு மற்றும் தீயணைப்பு பணியாளர்களை நியமித்து, தேவைக்கேற்ப அவர்களை வலுப்படுத்துவதன் மூலம் அவர்களுக்கு உதவுகிறது.

இந்தப் பரிவினால் வழங்கப்படும் சேவைகளாவன: புள்ளியியல் பாதுகாப்பு இடங்களை நிறுவி, தொழில்முயற்சிகளின் பாதுகாப்பு அதிகாரிகளுடன் ஒருங்கிணைப்பதன் மூலம் அனைத்து சுற்று பாதுகாப்பையும் 24 x 7 அடிப்படையில் வழங்குதல், களவு, தீ, தவறான நடத்தை போன்ற ஏதாவது தேவை ஏற்பட்டால் பொலிஸ் மற்றும் ஏனைய சட்ட அமுலாக்க அதிகாரிகளுடன் ஒருங்கிணைத்தல், வலயங்களுக்கு உள்ளேயும், வெளியேயும் தீ அணைப்பு மற்றும் அவசர சூழ்நிலைகளுக்குப் பதிலளிப்பது, தீ தடுப்புக்களை நடத்துதல், தொழில்முயற்சிகளில் பரிசீலனை மற்றும் தீ ஆபத்து மதிப்பீடுகள், தொழில்முயற்சிகளுக்கு பாதுகாப்பு மற்றும் தீயணைப்பு உபகரணங்களை நிறுவுதல் பற்றிய ஆலோசனைகளை வழங்குதல், தீயணைக்கும் உபகரணங்களைக் கையாளுவது பற்றி மற்றும் அலுவலர்களுக்கும் தொழில்முயற்சிகளின் ஊழியர்களுக்கும் முதலுதவி வழங்கலுக்கான பயிற்சி, தீ இணக்க, தொழில்முயற்சிகளுக்கு பயிற்சி மற்றும் வெளியேற்ற சான்றிதழ்கள் வழங்குதல் என்பனவாகும்.

நிதிசார் மீளாய்வு - 2023

டிஸம்பர் 31 முடிடைந்த ஆண்டுக்கான நிதிசார் செயற்பாடுகள்	2023 (ரூபா மிலி.)	2022 (ரூபா மிலி.)	மாற்றம் (%)
வருமானம்	8,171	5,973	37
மொத்த செயற்பாட்டு செலவுகள்	4,385	4,075	7
செயற்பாட்டு இலாபம்	3,786	1,898	99
நிதி வரவு	2,693	1,402	92
நிதி செலவு	4	7	(43)
வரிக்கு முன்னரான மிகை	6,475	3,293	97
வரி செலவுகள்	808	372	117
வரிக்குப் பின்னரான மிகை	5,667	2,921	94
வருட முடிவில் நிதி நிலமை (ரூபா மிலி)			
சொத்துக்கள்	73,911	68,362	8
ஓப்புரவு	55,250	50,698	9

மிகை

மீளாய்வுக்கான ஆண்டில் வருமான வரிக்கு முன்னரான மிகை ரூபா 6,475 மிலி. ஆகும். வரிக்குப் பின்னரான தேறிய மிகை 2022 ஆம் ஆண்டில் ரூபா 2,922 மிலி. இலிருந்து ரூபா 5,667 மிலி. ஆக அதிகரித்துள்ளது. இது முன்னையை ஆண்டுடன் ஒப்பிடும்போது 94% அதிகரிப்பாகும்.

இரூபா மிலி



வருமானம்

மொத்த செயற்பாட்டு வருமானம் 2022 இல் ரூபா 5,973 மிலி. இலிருந்து ரூபா 8,171 மிலி. ஆக அதிகரித்து, 37% அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது. பதிவு செய்யப்பட்ட இந்த வருமான அதிகரிப்பு பிரதானமாக ஐஅ டொலருக்கு எதிராக ரூபாவின் தேய்மானத்தினாலாகும். மொத்த வருமானத்தின் கூறுகள் “செயற்பாட்டு அடிப்படையிலானவை” மற்றும் “செயற்பாட்டு அடிப்படை அற்றவை” ஆகிய விடயங்களைக் கொண்டவையாகும். செயற்பாட்டு அடிப்படையிலான வருமானம் நில வாடகை, வருடாந்தக் கட்டணங்கள், இறக்குமதி/ ஏற்றுமதி சேவைகள் கட்டணங்கள், நீர் வருமானம், உத்தரவுச் சீட்டுக் கட்டணங்கள், உடன்படிக்கை செயலாக்கக் கட்டணங்கள், மற்றும் நானாவித வருமானங்களை உள்ளடக்கியதாகும். செயற்பாட்டு அடிப்படை அற்ற வருமானம் பிரதானமாக வட்டி வருமானத்தில் இருந்தாகும். காலப்புகுதிகான வட்டி வருமானம் ரூபா 1,292 மிலி. இனால் அதிகரித்துள்ளது. இது 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 92% அதிகரிப்பாகும். இந்த சாதகமான மாறுபாடு பிரதானமாக முதலீட்டு இலாகாவிற்கு எதிராக அரச பிணைகளின் வட்டி வீதத்தின் அதிகரிப்பினாலேயே பதிவு செய்யப்பட்டுள்ளது. காலப் புகுதிகாகான வட்டி வருமானம் ரூபா 2,694 மிலி. ஆகும்.

இரூபா மிலி



செலவினம்

மொத்த செயற்பாட்டு செலவினங்கள் 2022 இல் ரூபா 4,075 மிலி. இலிருந்து 8% இனால் அதிகரித்து, 2023 இல் ரூபா 4,386 மிலி. ஆகியது. நிர்வாகச் செலவினங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 2% இனால் குறைந்துள்ளது. கட்டட பராமரிப்பு, பணியாளர் நலன்புரி, மற்றும் போக்கு வரத்து செலவுகள் சம்பந்தமான செலவினங்கள் அதகரித்துள்ளபோதும் இந்தக் குறைப்பானது பதிவு செய்யப்பட்டுள்ளது.

இரூபா மிலி



அரச அறவீடுகள்

2023 ஆம் ஆண்டுக்கான அரச அறவீடுகள் 2022 ஆம் ஆண்டில் ரூபா 551 மிலி. இலிருந்து 168% இனால் அதிகரித்து,. 2023 ஆம் ஆண்டில் ரூபா 1,289 மிலி. ஆகியது. இது பிரதானமாக கூட்டாண்மை வருமான வரி விகிதம் 2023 இல் 24% இலிருந்து 30% க்குத் திருத்தியதனாலாகும். அத்துடன் வட்டி வருமான அதிகரிப்பும் சபையின் வருமான வரி அதிகரிப்பில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இரூபா மிலி



இலங்கை முதலீட்டுச் சபை

2014 முதல் 2023 வரை வருமானக் கூற்றுக்களின் பகுப்பாய்வு

நிதி ஆண்டு	2014	2015	2016	2017	2018	2019	2020	2021	2022	2023
வருமானம்	**3,100,162,918.00**	**3,213,557,727.00**	**3,605,145,347.00**	**3,711,862,608.00**	**3,889,614,384.00**	**4,646,091,668.00**	**4,251,299,069.00**	**4,911,181,363.00**	**5,973,226,716.00**	**8,171,423,461.00**
கழிக்க: செலவினங்கள்										
செயற்பாட்டு செலவினங்கள்	299,383,652.00	276,739,350.00	265,978,777.00	265,378,860.00	267,056,012.00	322,000,510.00	273,552,379.00	286,687,112.00	327,676,479.00	420,429,286.00
நிர்வாகச் செலவினங்கள்	2,301,683,057.00	2,488,716,775.00	2,639,675,029.00	2,724,737,397.00	2,846,961,666.00	3,165,507,063.00	3,192,487,029.00	3,344,826,022.00	3,536,143,256.00	3,451,664,100.00
அரச அறவீடுகள்	161,676,718.00	121,148,196.00	116,511,263.00	190,599,853.00	230,591,904.00	254,568,577.00	88,787,598.00	98,955,130.00	179,015,723.00	480,738,154.00
ஏனைய செலவினங்கள்	25,419,143.00	26,390,038.00	26,528,404.00	29,943,193.00	30,301,326.00	31,290,987.00	36,038,612.00	57,713,652.00	31,799,404.00	32,930,685.00
மொத்த செலவுகள்	2,788,162,570.00	2,912,994,359.00	3,048,693,473.00	3,210,659,303.00	3,374,910,907.00	3,773,367,137.00	3,590,865,618.00	3,788,181,916.00	4,074,634,862.00	4,385,762,225.00
செயற்பாடுகளிலிருந்து பெறுபேறுகள்	312,000,348.00	300,563,368.00	556,451,874.00	501,203,305.00	514,703,477.00	872,724,531.00	660,433,450.00	1,122,999,447.00	1,898,591,854.00	3,785,661,236.00
நிதி வரவு	135,105,411.00	118,628,543.00	222,265,759.00	336,920,319.00	344,450,042.00	411,444,914.00	321,579,138.00	329,766,108.00	1,402,022,856.00	2,693,563,207.00
நிதி செலவுகள்	14,534,281.00	12,025,173.00	10,588,937.00	10,940,559.00	7,737,398.00	10,657,560.00	13,873,362.00	10,216,636.00	6,900,963.00	4,562,509.00
தேறிய நிதி வரவு	120,571,130.00	106,603,370.00	211,676,822.00	325,979,760.00	336,712,644.00	400,787,354.00	307,705,775.00	319,549,472.00	1,395,121,893.00	2,689,000,698.00
வரிக்கு முன்னரான மிகை	432,571,478.00	407,166,738.00	768,128,696.00	827,183,067.00	851,416,121.00	1,273,511,885.00	968,139,226.00	1,442,548,919.00	3,293,713,748.00	6,474,661,936.00
வரி செலவுகள்	30,786,759.00	26,031,646.00	47,342,329.00	70,759,017.00	92,323,030.00	115,204,576.00	81,246,467.00	79,143,866.00	372,056,361.00	808,068,962.00
ஆண்டுக்கான மிகை	401,784,719.00	381,135,092.00	720,786,367.00	756,424,050.00	759,093,091.00	1,158,307,309.00	886,892,759.00	1,363,405,053.00	2,921,657,387.00	5,666,592,974.00
ஏனைய விளக்கமான வருமானம்										
கடப்பாடு மீதான ஆயுட்கணக்கர்இலாபம்/நட்டம்	28,339,987.00	(29,335,586.00)	(14,247,556.00)	25,054,316.00	10,973,058.00	51,499,585.00	75,380,123.00	(81,555,310.00)	(5,809,848.00)	(127,437,109.00)
மொத்த விளக்கமான வருமானம்	**373,444,732.00**	**410,470,678.00**	**735,033,923.00**	**731,369,734.00**	**748,120,033.00**	**1,106,807,724.00**	**811,512,636.00**	**1,444,960,363.00**	**2,915,847,539.00**	**5,539,155,865.00**

நிறுவன ஆளுகை அறிக்கை

பின்வரும் பிரதான குறிக்கோள்களுடன் 1978 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் ஆரம்பத்தில் தாபிக்கப்பட்ட பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழுவின் (GCEC) துணை நிறுவனமான இலங்கை முதலீட்டுச் சபை 1992 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் ஒரு நியதிச் சட்டமுறை நிறுவனமாக தாபிக்கப்பட்டது.

அ) குடியரசின் பொருளாதார அபிவிருத்தியைப் போசித்தல் உருவாக்குதல்;

ஆ) குடியரசின் பொருளாதாரத்தின் அடித்தளத்தை விரிவுபடுத்துதல் வலுப்படுத்துதல்;

இ) குடியரசில் வெளிநாட்டு முதலீட்டை ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்தல்;

ஈ) அந்நியச் செலாவணி வருமானத்தின் மூலங்களை பல்வகைப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதி சம்பாத்தியத்தை அதிகரித்தல்;

உ) குடியரசில் கைத்தொழில் மற்றும் வணிக தொழில்முயற்சிகளைத் தாபித்து அபிவிருத்திசெய்வதனை ஊக்குவித்தல் மற்றும் போசித்தல்;

ஊ) பிரிவு 4 இல் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரப் பகுதியின் விவகாரங்களை நிர்வகித்தல்; மற்றும்

எ) மேற்கூறிய விடயங்களில் ஏதேனும் அல்லது அனைத்தையும் அடைவதற்கு அவசியமான அல்லது உகந்ததாக இருக்கும் மற்ற எல்லா செயல்களையும் மேற்கொள்ளுதல்.

முதலீட்டுச் சபை என்பது முதலீடுகளை ஊக்குவித்தல் மற்றும் எளிதாக்குதல், கைத்தொழில் அபிவிருத்தியை ஊக்குவித்தல் மற்றும் ஆதரவான சேவைகளுக்கான அணுகலை ஒழுங்குபடுத்துதல் உட்பட முதலீட்டாளர்களுக்கு சேவைசெய்யும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள வெளிநாட்டு நேரடி முதலீட்டை (FDI) நாட்டிற்கு ஈர்க்கும் அரசாங்கத்தின் ஓர் அதியுயர் நிறுவனமாகும்.

ஆளுகைக் கட்டமைப்பு

நிறுவன ஆளுகை என்பது, அதன் பங்குதாரர்களின் நலனுக்காக, அதிகளவிலான வெளிப்படைத்தன்மை, சிறந்த மற்றும் சரியான நேரத்தில் நிதி அறிக்கையை உறுதிசெய்யும் வகையில், வளங்களை பயன்மிக்கதாக பயன்படுத்துதல், அமைப்பை வழிநடாத்தி கட்டுப்படுத்துதல் ஆகியவற்றுக்கான ஒரு பொறிமுறையை தாபிப்பதற்கான மொத்த முறைமை ஆகும். முதலீட்டுச் சபையின் நல்லாட்சிக்கான முதன்மை பொறுப்பு தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஆளுகை வரைசட்டகமானது வளர்ச்சியடைந்து வரும் ஒழுங்குமுறைகள் மற்றும் சிறந்த நடைமுறைகளுடன் இணைந்திருப்பதை பணிப்பாளர் சபை உறுதிசெய்கிறது. இதன்மூலம் முதலீட்டுச் சபையின் மூலோபாய நோக்கங்களை அடைவதற்கு ஆதரவளிக்கின்ற அதே நேரத்தில் அதன் நிறுவன மதிப்புகளைப் பாதுகாக்கிறது.

ஆளுகை வரைசட்டகம் மற்றும் கட்டமைப்பு

பணிப்பாளர் சபை அதன் செயல்பாடுகளின் அனைத்து பகுதிகளிலும் ஆளுகை வரைசட்டகத்தை பேணிவருகின்றது.



பணிப்பாளர் சபை

பணிப்பாளர் சபையானது, முதலீட்டுச் சபையின் விவகாரங்களை கூட்டாக மேற்பார்வை செய்யும் சுயாதீன, நிறைவேற்றுத் தரம் அல்லாத பணிப்பாளர்களை உள்ளடக்கியுள்ளது. நிறுவனத்தின் செயலாற்றுகையை மீளாய்வு செய்வதற்கும், மூலோபாய திசையை அமைப்பதற்கும், முகாமைத்துவத்திற்கு வழிகாட்டுதலை வழங்குவதற்கும் பணிப்பாளர் சபை தொடர்ந்து கூடுகிறது. பணிப்பாளர் சபை நேரடியாக அரசாங்கத்திற்கு பொறுப்புக் கூறுகின்றது. எனவே அரசாங்கமும் அதன் அதிகாரிகளும் முதலீட்டுச் சபையின் மேற்பார்வை, ஆளுகை மற்றும் முகாமைத்துவம் ஆகியவற்றில் ஒப்படைக்கப்பட்டுள்ள பங்குதாரர்களின் நலனுக்காகவும், ஒழுங்குமுறை வரைசட்டகத்திற்குள் முழு இணக்கத்துடன் முதலீட்டுச் சபை ஆளப்படுவதையும் இயக்கப்படுவதையும் உறுதிப்படுத்த வேண்டிய கடமையைக் கொண்டுள்ளனர்.

பணிப்பாளர் சபை மாதாந்த இடைவெளிகளில் கூடுகின்ற அதேவேளையில் தேவைக்கேற்ப மேலதிக விசேட கூட்டங்களும் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

பணிப்பாளர் சபையின் உறுப்பினர்களின் பிரதான பொறுப்புகள்:

- தேசிய கொள்கைகள் மற்றும் முன்னுரிமைகள், கொள்கைகள், குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கு ஏற்ப நோக்கங்களை நிறுவுவதன் மூலம் உபாயத் திட்ட திசைகளை அமைத்தல்.

- குறிக்கோள்களை அடைவதற்கு வழிகாட்டுதல்களை உருவாக்குதல் மற்றும் அவற்றின் செயல்திறனை உறுதி செய்தல்.

- இலக்குகள் மற்றும் நோக்கங்களுக்கு எதிராக செயலாற்றுகையினை கண்காணித்தல்.

- போதுமான உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் உயர்ந்த நெறிமுறை தரநிலைகள் பேணப்படுவதை உறுதி செய்தல்.

- அனைத்து முக்கிய வணிகப் பகுதிகளும் கவனம் செலுத்தப்படுவதையும், அவற்றை உடனடியாக நிவர்த்தி செய்வதற்கு பொருத்தமான மற்றும் போதுமான கட்டுப்பாடுகள், கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல் பொறிமுறைகள் உள்ளன என்பதை உறுதிப்படுத்துதல்.

பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் - 2023

பணிப்பாளர்கள் மற்றும் முகாமைத்துவத்தினர் கூட்டங்களில் கலந்துரையாடுவதற்குத் தேவையான அனைத்து முக்கியமான மற்றும் மூலோபாயத் தகவல்களையும் தயாரிப்பதற்கு போதுமான அறிவிப்பை வழங்குவதன் மூலம் சபைக் கூட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன. ஒவ்வொரு கூட்டத்திற்கும் குறைந்தபட்சம் ஏழு நாட்களுக்கு முன்பாக பணிப்பாளர்களுக்கு நிகழ்ச்சி நிரல் மற்றும் சபை ஆவணங்கள் வழங்கப்படுகின்றன. அதன் மூலம் அவர்களுக்கு உள்ளடக்கங்களை ஆய்வு செய்ய போதுமான நேரம் கிடைக்கும். மேலதிக தகவல்களை வழங்குவதற்கும், பணிப்பாளர் சபைக்கு மேலும் தெளிவுபடுத்துவதற்கும் தேவைப்படும் போது பிரிவுகளின் தலைவர்கள் சபைக் கூட்டங்களில் அழைப்பின் மூலம் கலந்து கொள்கின்றனர். மீளாய்வின் கீழ் உள்ள ஆண்டில், பணிப்பாளர் சபை வழக்கமான மற்றும் விசேட சபைக் கூட்டங்கள் உட்பட பன்னிரண்டு (12) சந்தர்ப்பங்களில் கூடியது.

2023 ஆம் ஆண்டு சபைக் கூட்டங்களில் பணிப்பாளர்களின் வருகை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

பணிப்பாளர்களின் பெயர்கள்	பதவி	பங்குபற்றிய கூட்டங்கள்
திரு. தினேஷ் வீரக்கொடி	தலைவர் மற்றும் சபை உறுப்பினர்	12
திரு. ஜயமின் பேபொல	சபை உறுப்பினர்	08
கலாநிதி. துஷ்னி வீரகோன்	சபை உறுப்பினர்	11
திரு. இராஜ் டீ சில்வா	சபை உறுப்பினர்	11
திரு. எச். மானில் ஜயசிங்ஹ	சபை உறுப்பினர்	04
திருமதி. சாந்தனி விஜயவர்தன	சபை உறுப்பினர்	07

முகாமைத்துவம்

பணிப்பாளர் நாயகம் பணிப்பாளர் சபையினால் வழங்கப்படும் அனைத்து செயல்பாடுகளையும் முகாமை செய்வதற்கும் உத்தரவுகளை நிறைவேற்றுவதற்கும் பொறுப்பான முதலீட்டுச் சபையின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராக (CEO) பணியாற்றுகிறார், கருத்திட்டத் தெரிவுக் குழு, கருத்திட்ட நிறைவுக் குழு, திணைக்கள ஆலோசகர்கள் கொள்முதல் குழு, திணைக்கள கொள்முதல் குழு II, மற்றும் மீள்முதலீட்டு அணி போன்ற திணைக்களத் தலைவர்கள் கூட்டங்களை உள்ளடக்கிய பல உள்ளகக் குழுக்கள், பணிப்பாளர் நாயகத்தின் ஆதரவையும், முடிவெடுக்கும் செயல்முறையை எளிதாக்குவதையும் வழங்குவதன் மூலம் தலைமை பணிப்பாளரினால் தலைமை தாங்கப்படுகின்றன. முதலீட்டுச் சபையின் அன்றாட நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதில் உள்ளகக் குழுக்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்தக் குழுக்கள் மூலோபாய நோக்கங்களையும் கொள்கை தீர்மானங்களையும் செயல்படுத்துவதை ஆதரிக்கின்ற அதேவேளையில், தேவைக்கேற்ப பரிந்துரைகளை வழங்குகின்றன, இதன் மூலம் கொள்கைத் தீர்மானங்களை எடுப்பதற்கு பணிப்பாளர் சபைக்கு வசதியளிக்கின்றது.

முதலீட்டுச் சபையின் முகாமைத்துவக் குழு, சபையின் தீர்மானங்களை செயல்படுத்துவதற்கும், நிறுவனத்தின் செயல்பாடுகளை பயனுள்ள, திறமையான மற்றும் வெளிப்படையான முறையில் முகாமை செய்வதற்கும் பொறுப்பாகும். நிறுவனத்தின் செயலாற்றுகை மற்றும் நிலையான வளர்ச்சியை வழங்குவதற்கு குழு வகைகூறுகின்றது.

தகவல் பாய்ச்சல்

தகவலறிந்த முடிவெடுப்பதை ஆதரிப்பதற்காக சபைக் கூட்டங்களுக்கு முன்னதாகவே பணிப்பாளர் சபைக்கு விரிவான தகவல்கள் வழங்கப்படுகின்றன. முகாமைத்துவமும் பணியாளர்களும் தேவைக்கேற்ப கூட்டங்களில் பங்குபற்றுகின்றனர். பணிப்பாளர் சபையானது, நடைமுறைகள் ஒழுங்காக இருப்பதை உறுதி செய்வதற்கும், நிறுவன ஆளுகை விடயங்களில் ஆலோசனை வழங்குவதற்கும் பொறுப்பாகும். சரியான நேரத்தில் அணுகல் மற்றும் சுற்றுச்சூழல் வினைத்திறனுக்காக சபையின் விடயங்கள் பாதுகாப்பான மின்னணு தளம் மூலம் பகிரப்படுகின்றன. சபைக் கூட்டங்களின் கூட்ட அறிக்கைகள் சபைக்கு தொடர்ந்து சமர்ப்பிக்கப்படுகின்றன.

கணக்காய்வுக் குழு

2021 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட 'அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கான நிறுவன ஆளுகைக்கான வழிகாட்டுதல்கள்' [பொது தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை இல. 01/2021] ஏற்பாடுகளுக்கு இணங்க கணக்காய்வுக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

